243

8-NOV 1944

# வசந்தம்

விலை 8 அணா

தாரண - புரட்டாசி

1944 - செப்டம்பர்

தந்தி: "வசந்தா" கோயமுத்தூர். போன்: நெ. 25.

# வசந்தா மில்ஸ் லிமிடெட்.

ரிஜிஸ்டார்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ்:

## R. K. ஷண்முகம் செட்டி அண்டு பிரதர்ஸ்.

**1934-ஆம் கள்ளிக்கோட்டையில், நடந்த கண்காட்சியில நூல் ரகங்களுக்காக தங்க மெடல், நற்சாட்சி பத்திரம் பெற்றிருக்கிறோம்.**

நூற்றல்:

20 நெ. முதல் 44 நெ. வரை, ஒத்தை, முருக்கு, காரம். சலவை நூல் தயாரிக்கிறோம்.

எல்லா விதமான ஜவுளி ரகங்களும்:

வேஷ்டிகள், லாங்கிளாத்,
டவல், சர்டிங்,
மல், சதர்,

தயாரிக்கிறோம்

எங்களுடைய வி. 116 நெ. லாங்கிளாத் மார்க்கட்டில் பெயர் பெற்றது.
600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.

போலிகளைக்கண்டு ஏமாருதீர்கள்.

**நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்.**

8-NOV 1944
MADRAS

# தாஸி அபரஞ்சி

சென்னை
**ஸாகர், கிரௌன்**
இரு தியேட்டர்களிலும்..

மற்றும்
மதுரை......... நியூஸினிமா
பெங்களூர்........... ஸுப்பர்
திருச்சி........... வெலிங்டன்
சேலம்........... நியூஸினிமா
திருநெல்வேலி.......... பாலஸ்
தஞ்சாவூர்................ டவர்
புதுச்சேரி.......... கமர்ஷியல்

ஆகிய இடங்களில்
வெற்றியுடன் நடைபெறுகிறது.

# ஜெமினி

...தயாரிப்பு........

டைரக்ஷன்
பி.என்.ராவ்

உயர்ந்த பித்தளை வெங்கலப் பாத்திரங்களுக்கு
நம்பிக்கையான இடம்,

**V. K. வெள்ளையப்ப செட்டியார்**

பித்தளை தாமிரம் வியாபாரம் கடை வீதி, கோயமுத்தூர்.

தந்தி : கனி

மார்க் S. S.

**மணம் மிக்க காப்பி !**

● எல்லா விதமான சிறந்த காப்பிக் கொட்டையும், காப்பி பவுடரும் எங்களிடம் கிடைக்கும். நாற்பது வருஷ கால அனுபவம் வாய்ந்த மேனேஜ் மெண்டில் தயார் செய்யப்பட்டு, தென்னிந்தியாவில் பிரபல ஹோட்டல்களுக்கும், வியாபாரிகளுக்கும், வாடிக்கையாக எப்போதும் மொத்தமாகவும் சில்லரையாகவும் தென்னிந்திய ரயில்வே கிரைன் சாப்புக்கும் சப்ளை செய்து வருகிறோம்.

தேவைக்கு இன்றே எழுதுங்கள்.

**S. S. M. ஷாஹுல் ஹமீத் & கோ.,**

305, ராஜவீதி, கோயமுத்தூர்.

வசந்தம் வருஷம் முழுவதும் வீட்டிலே வீசவேணுமா ?

ருபாய் ஆறுமட்டும் சந்தாவுக்காக அனுப்பி வையுங்கள்.

மேனேஜர் : வசந்தம், கோயமுத்தூர்.

வசந்தம் வாசகர்களே !
உங்களுக்கு எது தேவை?

# சுடர் மிகுந்த வைரங்கள்
# தங்க நகைகள்
# வெள்ளி சாமான்கள்
# எனாமல் மோதிரங்கள்

முதன்மை ஸ்தானம்

வகிப்பது

சிறந்த
வேலைப்பாடுள்ளது

உத்திரவாத முள்ளது

**KR**

சீல்

எல்லோரும்
விரும்புவது

PHONE
226

தந்தி
கிருஷ்ணா

# கே. ஆர். & சன்ஸ்,

நகை வியாபாரம்

பெரிய கடை வீதி : : கோயமுத்தூர்

# எல்லா நலங்களும் பெற

- **எல்லா தேசங்களும் தங்கள் தலைவர்களையே** எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றன. அவர்களுடைய எண்ணங்களெல்லாம் யுத்தத்திற்குப் பின் புனர் அமைப்புத் திட்டங்களிலும் எல்லா நலங்களும் பெற, என்ன செய்வது என்ற முக்கிய பிரச்சனையிலுமே சிந்தை லயித்திருக்கிறது.

- **குடும்பத் தலைவரும் பாதுகாப்பாளருமான உங்களுக்கு** உங்கள் மனைவி மக்கள் சந்தோஷமாகவும் சௌக்கியமாகவும் வாழ்வதெப்படி என்பதிலேயே கவனம் சென்றிருக்கிறது. நீங்கள் எப்போதாவது உங்களுடைய அன்புக்குகந்தவர்கள் எல்லா நலங்களும் பெற என்ன செய்வது என்பதைப் பற்றி சிந்தித்திருக்கிறீர்களா?

- **வாழ்க்கை** எப்போதுமே உங்களுக்கு இன்பகரமாயிராது. உங்கள் உயிருக் குயிரானவர்களிட மிருந்து விதி திடீரென சதி செய்து பிரித்து விடலாம். அப்போது மரணத்திற்குப் பின் பிரச்சனை எழுகிறது. அப்போது யார் அவர்களைக் காப்பாற்றுவார்கள்? உங்களுடைய சந்ததியின் நல் வாழ்வுக்காகவும் கல்விக்காகவும் யார் நிதி சேகரித்து வைத்திருக்கிறார்கள்?

**எங்களைக் கலந்து** ஆலோசித்தால் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்து உதவத் தயாராயிருக்கிறோம்.

★

## தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பனி

லிமிடெட்

தலைமை ஆபீஸ்: **பம்பாய்**

சென்னை கிளை: **4 & 5 முதல் லைன் பீச், சென்னை**

தோஷமற்ற, உயரிய, பூரிப்புள்ள

# வைரங்கள்

அழகிய வேலைப்பாடமைந்த

# பவுன் நகைகள்

நவீன முறைகளால் தயாரிக்கப்படும்

# வெள்ளி சாமான்கள்

இவைகளுக்கு எங்களைக் கலந்து ஆலோசிக்கவும்.

## உம்மிடியார்

உம்மிடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பனி

24/25. சைனு பஜார் மதருஸ்



# OVERSEAS REPRESENTATIONS

FRASER SQUARE.

COIMBATORE.

DEALERS IN ALL KINDS OF

HARDWARE, MILL STORES ETC.

A TRIAL ORDER WILL

CONVINCE YOU.


8-NOV 1944 MADRAS

## 44-ம் வருஷ அற்புதம்!

● வாழ்க்கையிலே இந்த உலகத்திலே மக்கட் குலத்துக்கு வேண்டிய முக்கிய தேவை என்ன? மண்ணிலே விண்ணின்பம் தந்து பூலோகத்திலே சொர்க்க இன்பத்தை சுவைக்கச் செய்யும் வழி எது தெரியுமா?

★

## மறு மலர்ச்சி!

● இங்கு வாழ்வின் புது மலர்ச்சியைத்தான் குறிப்பிடுகிறோம். அந்த ஆனந்தத்தை அளிக்கவே அற்புதமாக அபாரமாக ஈடு இணையற்று தேஜோ மயமாகத் தயாராகி வருகிறது.

★

## கிராம ஊழியன்

● ஆண்டு மலர். கண்ணைக் கருத்தைக் கவர்ந்து தெய்விக அழகுடன் உள்ளத்திலே தேன் ரசத்தைப் பொழிந்து, உங்களை ஒரு புது உலகுக்கு நிச்சயம் அழைத்துச் செல்லும் அற்புதச் சித்திரமே இம்மலர்!

★

# வசந்தம்

மலர் 3]

## பொருளடக்கம்

[இதழ் 5


| | | |
|---|---|---|
| கோலப் பாட்டு | 'கதிரவன்' | 1 |
| அமெரிக்காப் பிரயாணம் | சர். ஆர். கே. எஸ் | 2 |
| மீண்டும் வாராதோ? | சி. எஸ். ஆர் | 5 |
| பாரதியின் நகைச்சுவை | பெ. தூரன் | 6 |
| பாசமும் பிரிவும் | எச். விஜயகுமார் | 10 |
| பொழுது போக்கு | சி. ஆர். ராமசாமி | 16 |
| சாவித்திரி | ஆர். ஷண்முகசுந்தரம் | 18 |
| சரியான முடிவு | 'மாறன்' | 26 |
| திங்கள் முகம்... | ரா. நா | 31 |
| வெள்ளமும் வேகமும் | பி. மாரி செட்டி பி. ஏ (ஆனர்ஸ்) | 34 |
| கலைக் கோயில் | சுத்தானந்த பாரதி | 40 |
| புத்தக ஆராய்ச்சி | 'கம்பதாஸன்' | 48 |
| சிலப்பதிகாரம் | சர். சண்முகம் செட்டியார் | 49 |
| முல்லை மலர் | கோமதி சுப்பிரமணியம் | 61 |
| இராம சரிதம் | புரபஸர் A. சக்கரவர்த்தி | 66 |
| அன்புப் பரிசு | 'ராஜ்ய ஸ்ரீ' | 80 |
| மலர் மணம் | ... | 83 |


## விளம்பர அட்டவணை


| | |
|---|---|
| வசந்தர் மில்ஸ் – அட்டை (முன் உள்) பக்கம் | I |
| தாஸி அபரஞ்சி | II |
| V. K. V., S. S. M. S. ஹமீத் & Co. | III |
| கே. ஆர். & சன்ஸ் | IV |
| நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் | V |
| உம்முடியார், ஓவர்ஸீஸ் ரெப்பிரசென்டேஷன் | VI |
| கிராம ஊழியன் | VIII |
| அரவிந்த் மில்ஸ் | IX |
| குப்பு ராஜ், பீமைய செட்டி, ஆர்ய வைத்தியர், வசந்தர் டையிங் ஒர்க்ஸ், கே. பீ. ர். | X |
| ஸ்ரீ ராமவிலாஸ் | XI |
| க்ளூகோ னெட், ஏ. பி. ஆர் | XII |
| சென்டரல் பாங்க், கவர்னர் யுத்தநிதி, | XIII |
| பர்மாஷெல், கோயமுத்தூர் | ... |
| ராஜு செட்டி–அட்டை (பின் உள்) பக்கம் | ... |
| சென்ட்ரல் ஸ்டுடியோஸ் அட்டை கடைசிப் பக்கம்... | ... |

# அரவிந்த்

வஸ்திரங்கள் கம்பீரமான ஆடைகளுக்கு

இந்தியாவின் அதி பிரபலமான வஸ்திரங்கள்:

நூல் புடவை, வேஷ்டி, ஷர்டிங், டுவில், கிரேப், பாப்ளீன், நயின்ஸுக், லான், மல், டோரியா, வாயில் முதலிய தினுசுகள் உள்ளன.

நீங்கள் வாங்கும் துணிகளின் மேல் இக் குறியை பார்க்கவும்

அரவிந்த் மில்ஸ் லிமிடெட், அஹ்மதாபாத்

எங்கும் விற்பனையாளர்கள் உள்ளனர்

AVI




நீண்ட தமிழால் உலகை
நேமியின் அளந்தான்

— கம்பர்.

அட்டைச் சித்திரம் :

# கோலப் பாட்டு

கூட்டி மெழுகிக்
கோலம் போட்டு
வீட்டை அழகு செய்வோம் — நம்
வீதி யழகு செய்வோம் !

கொலுசும் வளையும்
குலுங்கக் குலுங்க
நலங்குக் கோலம் வைப்போம் — உயிர்
நாதனை வர வேற்போம் !

மாக் கோலத்தால்
மலரும் கனியும்
ஆக்கு வேமடி தோழி — அதில்
ஆப்பூ வைப்போம் வாடி

அழகு செய்யும்
அமுதக் கலையைப்
பழகப் பழக இன்பம் — அதைப்
பார்க்கப் பார்க்க இன்பம் !

"கதிரவன்"

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை 600 008
1497

# அமெரிக்காப் பிரயாணம்

[சர். ஆர். கே. எஸ்

சில தினங்களுக்கு முன்பு என்னுடைய நண்பர் ஒருவர், என்னைச் சந்தித்தபோது, "நீங்கள் அமெரிக்காப் போயிருப்பதாகக் கேள்விப் பட்டேனே! இதற்குள் திரும்பி வந்து விட்டீர்களா?'' என்று கேட்டார். ஆம்! இரண்டு மாதங்களுக்குள் இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்குப் புறப்பட்டுப் போய், அங்கே ஒரு முக்கிய வேலையை முடித்துக் கொண்டு, ஊருக்குத் திரும்பியாய் விட்டது. சாதாரணமாக இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்குப் போய் வருவதென்றால், போகவும், வரவும் 40 நாட்கள் கடற் பிரயாணம் செய்ய வேண்டும். இப்போதோ வென்றால், இந்தியாவை விட்டால் மூன்று நாளில் அமெரிக்கா. கோயமுத்தூரிலிருந்து டில்லிக்குப் போவதற்கு எவ்வளவு நாளாகின்றதோ, அவ்வளவு நாள்தான் கராச்சியிலிருந்து அமெரிக்காப் போவதற்கும். விஞ்ஞானத்தின் மகிமை உலகத்தையே சிறிதாக்கி விட்டது.

சென்ற ஜூன் மாதம் ஒருநாள் காலை 8 மணிக்கு நான் கோயமுத்தூரில் என் வீட்டிலிருந்த போது, கவர்னர் அவர்களுடைய ஆபீசிலிருந்து டேலிபோனில் என்னைக் கூப்பிடுவதாகச் செய்தி வந்தது. என்னவென்று விசாரித்ததில் அமெரிக்காவில் ஒரு உலக மகாநாடு சமீபத்தில் கூடப் போவதாகவும், அந்த மகாநாட்டிற்கு இந்தியா கவர்ன்மென்டின் பிரதிநிதிகளில் ஒருவராக நானும் போக முடியுமா என்றும் கேட்டார்கள். நானும் சரி என்று ஒப்புக்கொண்டேன். ஆகாயக் கப்பல் வழியாகப் பிரயாணத்திற்குத் தயாராக இருக்க வேண்டுமென்றும் சொன்னார்கள். பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை உடனே முடித்து விட்டேன். அமெரிக்காவுக்கு ஆகாயக் கப்பல் மார்க்கமாகப் பிரயாணம் செய்வதற்குச் சாமான் தயாரிப்பது வெகு சுலபம். கோயமுத்தூரிலிருந்து சென்னைக்குப் போவதற்கு எவ்வளவு சாமான்களைக் கட்ட வேண்டுமோ அதில் பகுதியும் கூடத் தேவையில்லை, அமெரிக்காப் பிரயாணத்திற்கு. படுக்கையும் உணவுப் பாத்திரமும் வெள்ளி கூஜாவும் வேண்டாம்; ஆகாயக் கப்பலில் 65 ராத்தல் எடைக்கு மேல் எடுத்துக் கொண்டு போக முடியாது. உடுப்புகள் அடங்கிய ஒரு பெட்டியும் சில புத்தகங்கள் பேனா, காகிதம் முதலியவைகள் அடங்கிய ஒரு சிறு பையும் இருந்தால் போதும். படுக்கை அவசியமில்லையா என்று ரயில்வே ஸ்டேஷனில் ஒரு நண்பர் கேட்டார். மேல் நாட்டுப் பிரயாணங்களுக்கு இது அவசியமில்லை. கப்பலோ, ரயிலோ, ஓட்டலோ, நண்பர்களுடைய வீடுகளோ, எங்கே போனாலும் படுக்கை வசதி அவ்விடமே இருக்கும். உடுப்புகளின் எண்ணிக்கையும் அதிகமாக வேண்டியதில்லை, ஒரு ஊருக்குக் காலை நேரத்தில் போய்ச் சேர்ந்தவுடன், அழுக்கடைந்த ஆடைகளைச் சலவைக்குக் கொடுத்தால்,

சர்வதேச நாணயச் செலாவணி மகா நாட்டில்
சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்களும்
ஏ. டி. ஷராப் அவர்களும்.

வெகு நேர்த்தியான சலவையுடன் அன்று சாயங்காலமே ஆடைகள் திரும்பி வந்து விடும். இந்த வசதி யிருக்கும் போது, சில ஆடைகள் மட்டும் கைவசமிருந்தால் போதும்.

அமெரிக்காவுக்குப் போகும் விமானம் கராச்சியிலிருந்து புறப் படுகின்றது. சென்னையிலிருந்து கராச்சிக்குப் போக, விமான வழி யாகவே ஏற்பாடு செய்திருந்தார் கள். ஒருநாள் பகல் 2 மணிக்குச் சென்னையிலிருந்து புறப்பட்டேன். அன்று சாயந்திரம் 5 மணிக் கெல்லாம் ஐதராபாத் போய்ச் சேர்ந்துவிட்டேன். அன்றிரவு ஐதராபாத்தில் தங்கிவிட்டு மறு நாள் காலை $7\frac{1}{2}$ மணிக்குப் புறப் பட்டதும், பகல் $12\frac{1}{2}$ மணிக்குப் பம்பாய் வந்தாகி விட்டது. பம் பாயிலிருந்து பகல் 2 மணிக்குப் புறப்பட்டுச் சாயங்காலம் 5 மணிக் குக் கராச்சியும் சேர்ந்தாகி விட் டது. மறுநாள் காலை அமெரிக் காவுக்குப் புறப்படும் விமானத் தில் நானும் என்னுடனிருந்த நண்பர்களும் ஏறினோம். 25 பிரயாணிகள் உட்காரும்படி யான பெரிய விமானம் அது. விமானத்தை ஓட்டும் மாலுமி, இஞ்சினியர் முதலியவர்கள் 6 பேர், இதல்லாமல், ஏராளமான சாமான்களும் நிரம்பியிருந்தன. இவ்வளவு பாரத்தையும் எடுத்துக் கொண்டு, அதிகாலையில் 7 மணிக் குக் கராச்சியை விட்டுக் கிளம் பிற்று விமானம்.

ஆகாயத்திலே தரை மட்டத்தி லிருந்து 12,000 அடிகளுக்கு மேல் விமானங் கிளம்பிவிட்டது. கடலை யும், மலைகளையும், பிரதேசங்களை யும் தாண்டி மேக மண்டலத்திற்கு மேல் விமானம் மணி ஒன்றுக்கு 225 மைலுக்கு மேலே போய்க் கொண்டிருந்தது. கராச்சியை விட்டதும், அடுத்த தங்கல், அரே பியாவின் கோடியிலுள்ள ஏடன் பட்டினத்தில். கராச்சியிலிருந்து இந்தப் பட்டினம் 1700 மைல் தூரம். கப்பலில் போக வேண்டு மென்றால், 5 நாட்கள் ஆகும். காலையில் கராச்சியை விட்டுப் பகல் சாப்பாட்டிற்கு ஏடன் சேர்ந்தாகி விட்டது. சாப்பாட் டை முடித்துக் கொண்டு ஏடனை விட்டுப் புறப்பட்டதும், அன்று இரவுச் சாப்பாடு கார்டூன் என் னும் பட்டினத்தில். இது ஆப்ரிக் காவின் மத்திய பாகத்திலுள்ள ஒரு முக்கிய பட்டினம்.

கார்டூன் பட்டினத்தில் இரவுச் சாப்பாடு முடிந்தவுடன், அங்கே இராத்தங்கல் ஏற்படும் என்று நினைத்திருந்தோம். ஆனால் இராத் தங்குவது, என்னும் ஏற்பாடில்லை. இரவு 9 மணிக்கே கார்டூனி லிருந்து விமானங் கிளம்பி விட் டது. ஆகாயத்தில் பறப்பதற்குப் பகலாயிருந்தாலென்ன, இரவா யிருந்தாலென்ன? ஆகாயத்தில் விமானத்திலிருக்கிறோம் 12,000 அடிக்குக் கீழ் ஆப்பிரிக்கா கண் டத்தின் அடர்ந்த காடுகளும், விரிந்த வனாந்தரங்களும், உயர்ந்த மலைகளும்! எங்கு பார்த்தாலும் பயங்கரமான இருள்! இரவு முழு வதும் விமானம் போய்க் கொண் டே இருக்கிறது. நாங்கள் உட் கார்ந்திருந்த நாற்காலியிலேயே சிறிது சாய்ந்து கண் அயர்ந் தோம். விமானம் இருளில் போய்க் கொண்டேயிருந்தது. சூரிய வெளிச்சம் தோன்றின வுடன் கீழே பார்த்தால், ஒரே வனாந்தரம்! காலை 9 மணிக்கு ஆப்பிரிக்காவின் மேல் பாகத்தி லுள்ள "ஆக்ரா" என்னும் பட்டினத்தில் விமானம் இறங் கிற்று. கார்ட்டூனிலிருந்து

ஆக்ராவுக்கு 2300 மைல் தூரம். இவ்வளவு தூரத்தையும் ஒரே இரவில் கடந்தாகி விட்டது.

ஆக்ராவை விட்டால், அதற்கு மேல் புறம், அட்லான்டிக் கடலைத் தாண்ட வேண்டும். ஒரு கரையில் ஆப்பிரிக்காக் கண்டம், மறு கரையில் தென் அமெரிக்காக் கண்டம். இவை இரண்டிற்கும் நடுவில் 2800 மைல் ஒரே கடல் மயம்! இந்தக் கடலின் மத்தியில் "அசென்ஷன்" என்னும் ஒரு சிறிய தீவு உண்டு. ஆக்ராவி லிருந்து அசென்ஷன் தீவுக்கு 1300 மைல். பகலில் ஆக்ராவை விட்டவுடன் கடலைத் தாண்டி, இந்தத் தீவுக்கு அன்று சாயங்காலமே வந்தாகி விட்டது! அன்றிரவு அந்தத் தீவில் பட்டாளங்கள் இருக்கும் சிறிய குடிசைகளில் நாங்களும் தங்கினோம். மறு நாள் காலை அசென்ஷன் தீவிலிருந்து புறப்பட்டுத் தென் அமெரிக்காவில் உள்ள நெட்டால் என்னும் பட்டினத்தைச் சேர்ந்தோம். தென் அமெரிக்காவி லிருந்து, வடஅமெரிக்காவுக்கு ஒரே நாளில் பிரயாணம் முடிந்து விட்டது.

சனிக்கிழமை காலை 7 மணிக்கு கராச்சியிலிருந்து புறப்பட்டோம். செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு அமெரிக்காவிலுள்ள "மியாமி" என்னும் பட்டினத்தை அடைந்தோம்.

மூன்று நாளில், ஆசியாக் கண்டம், ஆப்ரிக்காக் கண்டம், அமெரிக்காக் கண்டம் ஆகிய மூன்று கண்டங்களையும், இரண்டு பெரிய கடல்களையும் கடந்து பிரயாணத்தை முடித்தாகி விட்டது.

ஆகாயக் கப்பலின் மகிமையால் உலக சரித்திரமே மாறுபாடையும், மனித வாழ்க்கையும் மனப்பான்மையும் புரட்சியடையும், இந்தியாவிலிருந்து ஆப்பிரிக்காவுக்கு ஒரே நாளில் போவதென்றால், இந்தியர்களும், ஆப்ரிக்கர்களும் அண்டை வீட்டார் போல் ஆகி விட்டார்கள்! உலக மக்கள் எல்லோரும், ஒரு நாட்டின் மக்களைப் போன்ற நிலைமைக்கு வந்து விட்டார்கள். 'மக்கள் எல்லோரும் ஒரு கடவுளின் புதல்வர்கள்' என்னும் தத்துவம் விஞ்ஞானத்தின் மகிமையால் வாழ்க்கையின் உண்மையாகவே ஆகி விட்டது. இந்த யுத்தம் முடிந்தவுடன், உலகமெங்கும், ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு ஆகாயக்கப்பல்கள் பறந்து கொண்டேயிருக்கும். உலகத்தில் ஒரு பட்டினத்திலிருந்து மற்ற எந்தப் பட்டினத்திற்குப் போக வேண்டுமென்றாலும் 3 நாளைக்குள் பிரயாணத்தை முடித்து விடலாம்.

அமெரிக்காவுக்கு நான் பிரயாணம் செய்ததின் நோக்கம் ஒரு மகாநாட்டின் விஷயமாக. நாணய செலாவணி விஷயமாக யோசித்து முடிவு செய்வதற்கு 44 நாட்டுப் பிரதிநிதிகள் அடங்கிய மகாநாடு ஒன்று "பிரிட்டன் வுட்ஸ்" என்னுமிடத்தில் ஜுலை மாதம் முதல் தேதி கூடிற்று. உலகத்திற்குப் பொதுவான சில பொருளாதார விஷயங்களைப் பற்றி யோசித்து முடிவு செய்யும் நோக்கத்துடன் இந்த மகா நாடு, ஜனதிபதி ரூஸ்வெல்டினல் கூட்டப் பட்டது. உலகத்தில் சண்டைக்குக்காரணம் வறுமை. இந்தச் சண்டைக்குப் பின் உண்மையான சமாதானம் உலகத்தில் ஏற்பட வேண்டுமென்றால், உலக மக்களின் வறுமையைப் போக்கும் வழிகளைத் தேட வேண்டும் என்று எல்லோருக்கும் உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

வர்த்தகம், விவசாயம், கைத்தொழில் இவைதாம் பொருளாதாரத்திற்கு அடிப்படையானவை. ஒரு நாட்டில் உற்பத்தியாகும் பொருள்கள் தங்கு தடையின்றி மற்ற நாடுகளுக்குப் போகும் வசதிகள் இருந்தால் தான் எல்லா நாடுகளும் செழிப்படைந்திருக்க முடியும். சமீப காலத்தில் இவ்விதமான வர்த்தகத்திற்கு எவ்வளவோ இடையூறுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு நாட்டாரும் தங்கள் தங்கள் நாட்டின் அபிவிருத்தியைக் கருதி அயல் நர்ட்டுச் சரக்குகள் வரக் கூடாமல் இருப்பதற்குச் சுங்கங்களேயும், வரிகளேயும் ஏற்படுத்தி யிருக்கிருர்கள்.

இதல்லாமல், ஒரு நாட்டிற்கும் மற்ருெரு நாட்டிற்குமுள்ள நாணய மாறுதலாலும் வியாபாரத்திற்கு தடைகள் ஏற்பட்டு வருகின்றன. ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு நாணயம் உண்டு. இந்தியாவில் ரூபாய்; அமெரிக்காவில் டாலர்; இங்கிலாந்தில் ஸ்டர்லிங்; ஜெர்மனியில் மார்க்; இத்தாலியில் லீரா — இவ்விதமாக ஒவ்வொரு நாட்டிலும் நாணய வேறுபாடுகள் உண்டு. ஒரு நாணயத்திற்கும் மற்ற நாணயங்களுக்கும் நிகரான விகிதம் இருந்தால் தான் வியாபாரம் தடையில்லாமல் நடக்கும். ஒரு பவுன் என்ருல் அது 4 டாலருக்குச் சமானம். இந்த விகிதம் நிகராக நிலேயாக இல்லாமல் அடிக்கடி மாறிக் கொண்டிருந்தால், அமெரிக்காவுக்கும், இங்கிலாந்துக்கும் வர்த்தகம் நடத்துவது கடினம். வர்த்தகர்களுக்கு நஷ்டமும் ஏற்படும். நாணய விகிதங்களே மாருமல் நிகராக்கவும், கைத்தொழில் அபிவிருத்திக்கு மூலதன உதவி எளிதில் கிடைக்கும் மார்க்கத்தை உண்டாக்கவும் வேண்டிய வழிகள் தான், இந்த மகா நாட்டில் நிர்ணயிக்கப்பட்டன.

(தொடரும்)

## மீண்டும் வாராதோ?

சின்னஞ் சிறுகுழந்தைப் — பருவம்
திரும்ப வாராதோ?
அன்னே மடியினிலே — கடலில்
அலேஎன்றே நெளிய
அச்ச மிலாக்குழந்தைப் — பருவம்
அடுத்தும் வாராதோ?
கொச்சை மொழிகளிலே — கண்ணன்
குழலின் பண் கூட்ட
வஞ்சமிலாக் குழந்தைப் — பருவம்
மீண்டும் வாராதோ?
சஞ்சல மில்லாமல் — வானின்
தண்மதி யைப் பிடிக்க
மாசில் இளங்குழந்தைப் — பருவம்
மறுகால் வாராதோ?
வாசி ஒடுக்காதே — ஈசன்
வடிவம் தான் காட்ட

சி. எஸ். ஆர்.

# பாரதியின் நகைச் சுவை

[பெ. தூரன்]

பாரதியாருடைய முறுக்கு மீசையையும், வெறித்த பார்வையும், விரைப்பான உருவத்தோற்றத்தை நேரிலோ அல்லது உருவப் படத்திலோ பார்த்தவர்கள் அவரிடம் நகைச் சுவையை எதிர்பார்க்க மாட்டார்கள். இந்த ஆசாமிக்கும் நகைச் சுவைக்கும் வெகு தூரம் என்று சொல்லத்தான் அவர்களுக்குத் தோன்றும்.

அனற் பொறியைக் கக்கும் அவருடைய தேசிய கீதங்களைப் படிக்கின்றபோது இந்த எண்ணம் பூரணமாக உறுதிப்பட்டு விடுகின்றது.

**பயமெனும் பேய்தனை அடித்தோம் பொய்மைப்**
**பாம்பைப் பிளந்துயிரைக் குடித்தோம்**

என்ற மாதிரி இடிப் பாடல்களையும்;

**வலிமையற்ற தோளினாய் போ போ போ**
**மார்பிலே ஒடுங்கினாய் போ போ போ**

என்பது போன்ற கர்ஜிக்கும் வரிகளையும் எழுதிய கைக்கும் மென்மை வாய்ந்த ஹாஸ்யத்திற்கும் என்ன சம்பந்தம் இருக்கப் போகிறது என்று நினைப்பது இயற்கைதானே?

ஆனால் அவரது நாட்டுப் பாடல்களை விட்டுக் கண்ணன் பாட்டு, குயிற் பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலிய நூல்களுக்கு வரும் போதே அவருடைய நகைச் சுவை ஆங்காங்கு மின்னுவதை நாம் பார்க்கலாம்.

**அங்காந்திருக்கும் வாய் தனிலே — கண்ணன்**
**ஆறேழு கட்டெறும்பைப் போட்டு விடுவான்**

என்ற கண்ணன் பாட்டிலும்,

**மேனி அழகினிலும் விண்டுரைக்கும் வார்த்தையிலும்**
**கூனி இருக்கும் கொலு நேர்த்தி தன்னிலுமே**
**வானரர் தம் சாதிக்கு மாந்தர் நிகராவாரோ**

என்ற குயிற் பாட்டு வரிகளிலும், ஹாஸ்யம் கொப்புளிக்கின்றது.

ஆனால் பாரதியாருடைய நகைச் சுவையை அநுபவிக்க அவருடைய வசன நூல்களுக்குத் தான் முக்கியமாகச் செல்ல வேண்டும்; அங்குதான் அது சிறப்பாக வெளிப் படுகின்றது.

நகைச் சுவையை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று என்றும் சிரிப்பை உண்டாக்கி இன்பம் பயப்பது; மற்றொன்று முதல் தடவை படிக்கும் போதோ அல்லது கேட்கும் போதோ மட்டும் இன்பங் கொடுப்பது. முன்னது உயர்ந்தது; பின்னது அந்தஸ்தில் குறைந்தது. முன்னது இடையறாது பெருகும் தேன் ஒழுக்கு; பின்னது துளிக்கும் கொம்புத் தேனில் ஒரு சொட்டு. பாரதியாரின் கட்டுரைகளில் இடையறாத இன்ப ஊற்றான உயர்ந்த நகைச் சுவையை நாம் காண்கின்றோம்.

பெண் என்ற வியாசத்திலே பிரமராய வாத்தியாரைப் பற்றி அவர் சொல்லுவதைப் பாருங்கள்:

"இவர் இந்தத் தெருவில் வார்த்தை சொன்னால் மூன்றாவது தெருவுக்குக் கேட்கும். பகலில் பள்ளிக்கூட வேலை முடிந்தவுடனே வீட்டுக்கு வந்து, ஸாயங்காலம் ஆறு மணி முதல் எட்டு வரை தன் வீட்டுத் திண்ணையில் சிநேகிதர்களுடன் பேசிக்கொண்டு, அதாவது, கர்ஜனை செய்து கொண்டிருப்பார். பிறகு சாப்பிடப் போவார். சாப்பிட்டுக் கையலம்பி கை ஈரம் உலர்வதற்கு முன்பு, மறுபடி திண்ணைக்கு வந்து சப்தம் போடத் தொடங்கி விடுவார். இவருடைய வீட்டுத் திண்ணைக்கு, அக்கம் பக்கத்தார் 'இடிப் பள்ளிக் கூடம்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அந்த இடிப் பள்ளிக் கூடத்துக்கு வந்து மாலை தோறும் நாலைந்து பேருக்குக் குறையாமல் இவருடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருப்பார்கள். அந்த நாலைந்து பேருக்கும் இன்னும் காது செவிடாகாமலிருக்கும் விஷயம் அனேகருக்கு ஆச்சரியத்தை உண்டாக்குகிறது."

அந்த வாத்தியார் பேச்சில் சில வார்த்தைகளையும் கேளுங்கள்:

"துருக்கி தேசம் தெரியுமா? அங்கே நேற்றுவரை ஸ்திரீகளை மூடி வைத்திருப்பது வழக்கம். கஸ்தூரி மாத்திரைகளை டப்பியில் போட்டு வைத்திருக்கிறார்களோ இல்லையோ? அந்த மாதிரி; திறந்தால் வாசனை போய் விடும்"

எத்தனை தடவை படித்தாலும் சிரிப் புண்டாகிறது; அதே சமயத்தில் நம்மை அறியாமல் அது நமக்குள்ளே மாறுதலைச் செய்கிறது.

ஆமாம்; ஹாஸ்யம் உள்ளத்தில் சுருக் கென்று தைக்காது, நோவில்லாமலே குணம் கொடுக்க வேண்டும். மேல் நாட்டில் பல ஹாஸ்ய எழுத்தாளர்களின் வார்த்தைகளே சமூகத்தில் பல சீர்திருத்தங்களை யாருக்கும் மனக் கசப்பில்லாமல் செய்திருக்கின்றன. அம்மாதிரியே பாரதியாரின் வாக்குகளிற் சில அமைந்திருக்கின்றன. ஹார்மோனியத்தைப் பற்றி அவர் எழுதியிருப்பதைப் பாருங்கள்:

"அந்தப் பெட்டி (ஹார்மோனியம்) போடுகிற பெருங் கூச்சல்தான் என் காதுக்குப் பெரிய கஷ்டமாகத் தோன்றுகிறது.

மேலும். ஸங்கீதத்திலே கொஞ்சமேனும் பழக்கமில்லாதவர்களுக் கெல்லாம் இந்தக் கருவியைக் கண்டவுடனே ஷோக் பிறந்து விடுகிறது. சத்த முண்டாக்குவதற்கு நல்ல துருத்திகைக்கு ஒத்ததாகப் பின்னே வைத்திருக்கிறது. ஒரு கட்டையை உள்ளே அழுத்தி, முன் பக்கத்துச் சாவிகளை இழுத்து விட்டு, துருத்தியை அசைத்தால், 'ஹோ' என்ற சத்த முண்டாகிறது. உடனே பாமரனுக்கு மிகுந்த சந்தோஷ முண்டாகிறது. 'நாம் அல்லவா இந்த இசையை உண்டாக்கினோம்? என்று நினைத்துக் கொள்கிறான். உடனே வெள்ளைக் கட்டைகளையும் கருப்புக் கட்டைகளையும் இரண்டு தட்டுத் தட்டுகிறான். பேஷான தொனிகள்! மேலான தொனிகள்! பாமரன் பூரித்துப் போகிறான்......ஒரு வீட்டில் ஹார்மோனியம் வாசித்தால் பக்கத்திலே ஐம்பது வீட்டுக்குக் கேட்கிறது. அறியாதவன் தனது அறியாமையை வீட்டில் இருந்த

படியே இரண்டு மூன்று வீதிகளுக்குப் பிரசுரம் பண்ண வேண்டுமானுல், அதற்கு இந்தக் கருவியைப் போலே உதவி வேறென்றுமில்லை.''

இதைப் படித்த பிறகும் அந்த வாத்தியத்தைத் தொட ஆசை உண்டாகுமா?

சில சமயங்களில் பாரதியாருடைய ஹாஸ்யம் இந்த மென்மையை விட்டுச் சற்று உறுத்தவும் ஆரம்பிக்கிறது. கொஞ்சம் இடித்துக் காண்பிக்க வேண்டும் என்பது அவர் கருத்து:

"கும்பகர்ண்ன் தூங்கினுனும். இலங்கையில் சண்டை நடக்கிறது. மூன்று லோகமும் நடுங்குகிறது. அப்படிப்பட்ட சண்டையின் அதிர்ச்சியிலே கூட, கும்பகர்ணனுடைய தூக்கம் கலையவில்லை. ஆயிரக் கணக்கான ஆடு மாடு குதிரைகளின் காலில் கூர்மையான கத்திகளைக் கட்டி அவன் மேலே நடக்கச் சொன்னுர்கள்; தூக்கம் கலையவில்லை. எழெட்டு மேகங்களை அவன் காதுக்குள்ளே போய் இடிக்கச் சொல்லி ராவணன் கட்டளை இட்டானும். மேகங்கள் போய் இடித்தனவாம்; கும்பகர்ணன் குறட்டை நிற்கவே இல்லை.

மேற்படி கும்பகர்ணனைப் போலே சில தேசங்களுண்டு. அண்டங்க ளத்தனையும் இடிந்து விழுந்தாலும் காது கேட்காத செவிடர் வாழும் தேசங்கள் சில உண்டு.

ஆனல் ஹிந்துதேசம் அப்படி... இல்லை!...தமிழ் நாடு மேற்படி மஹா பாதக ஜாப்தாவைச் சேர்ந்த தன்று, அன்று!''

தமிழனுக்கு இந்தச் சூடு தேவையோ இல்லையோ; தேவையென்ருல் இதுவே போதும், போதும்.

இப்படிச் சுருக்கென்று படும் ஹாஸ்யமும் அவர் வாக்கில் பிறந்திருக்கின்றது. நடிப்புத்தேசபக்தர்களைப் பற்றியும் பாரதியார் இம்மாதிரி காரமான நகைச்சுவையைக் கொட்டியிருக்கிருர்:

"நான் சோம்பருக்குத் தொண்டன். எனது நண்பர்களெல்லாம் புளியஞ் சோற்றுக்குத் தொண்டர்கள். சிலர் மட்டிலும் பணத் தொண்டர்; 'காலணு'வின் அடியார்க்கும் அடியார்.

ஆனல், எங்களிலே ஒவ்வொருவரும் பேசுவதைக் கேட்டால் கைகால் நடுங்கும்படியாக இருக்கும். பணத்தொண்டரடிப் பொடியாழ்வார் எங்கள் எல்லோரைக் காட்டிலும் வாய்ப் பேச்சில் வீரர். ஒருவன் வானத்தை வில்லாக வளைக்கலாமென்பான். ஒருவன் மணலைக் கயிருகத் திரிக்கலாமென்பான். ஒருவன் 'நாம் இந்த ரேட்டில் வேலை செய்து கொண்டு வந்தால் ஆங்கிலேயரின் வர்த்தகப் பெருமை ஆறு மாதத்தில் காற்ருய்ப் போய்விடும் என்பான். மற்றொருவன், 'சியாம்ஜி கிருஷ்ணவர்மா ஸ்வராஜ்யம் கிடைக்கப் பத்து வருஷமாகுமென்று கணக்குப் போட்டிருக்கிருர். ஆறு வருஷத்தில் கிடைத்து விடுமென்று எனக்குத் தோன்றுகிறது' என்பான். தவளையுருவங் கொண்ட மூன்ருமொருவன், 'ஆறு மாதமென்று சொல்லடா' என்று திருத்திக் கொடுப்பான்''

பாரதியாருக்கும் அவர் மனைவிக்கும் நடந்ததாக வரும் பேச்சு இது:

"தலை நோவு பொறுக்க முடியவில்லை. கொஞ்சம் மிளகு அரைத்

துக் கொண்டு வா' என்றேன். "ஆமாம்; இரண்டு நாளைக்கொரு முறை இதொரு பொய்த் தலைவலி வந்து விடும், என்னை வேலை ஏவுகிறதற்காக. அதெல்லாம் சரிதான். பால்க்காரி வந்து மத்யானம் பணம் கேட்டுவிட்டுப் போனாள். ராயர் வீட்டு அம்மாள் குடிக்கூலிக்கு ஞாபகப் படுத்தச் சொன்னாள்.........தெருவிலே போகிற நாய்களுக்கெல்லாம் பணத்தை வாரியிறைக்கிறது; வீட்டுச் செலவைப் பற்றிக் கேட்டால் முகத்தைச் சுளிக்கிறது; இப்படிச் செய்து கொண்டே வந்தால், அப்புறம் என்ன கிடைக்கும்? மண்தான் கிடைக்கும்' என்று ஆசீர்வாதம் பண்ணிப் பிரசங்கத்தை முடித்தாள்.

'தலை நோவு தீர்ந்து விட்டது. நீ தயவு செய்து கீழே போகலாம்' என்று வணக்கத்துடன் தெரியப் படுத்திக் கொண்டேன்.

உல்லாச சபையில் ஜிந்தாமியான் சேட், எலிக்குஞ்சு செட்டியாரை நாணயக் குறைவானவர் என்று சொல்லி விட்டார். செட்டியாருக்குக் கோபம் வந்து விட்டது. அப்பொழுது நடந்த சம்பாஷணையைக் கேளுங்கள்:

"எலிக்குஞ்சு செட்டியார்: நாணயக் குறைவா? யாருக்குங் காணும் நாணயக் குறைவு? சாஹப்! உம்முடைய மஹம்மதிய குணங்களை நம்மிடம் காட்ட வேண்டாம் தெரியுமா?

ஜிந்தாமியான் ஸேட்: செட்டியாரே, அதிக வார்த்தை பேசி விட்டீர், ஒரு தரம் பொறுத்தேன். ஹோஷ்யார்! (ஜாக்ரதை!)

எலி: என்ன சாஹப் தாடியை உறுவுகிறீரே, அடித்துப் போடுவீரோ?

ஜிந்த: ஹோஷ்யார்!

எலி: நம்முடைய கடையிலே உம்மைப் போலவே நாலு முரடர்களை வேலைக்கு வைத்திருக்கிறேன். ஞாபகமிருக்கட்டும்.

ஜிந்தா: ஹோஷ்யார்!

எலி:— என்னங் காணும் வெகு பயமுறுத்துகிறீரே, யாரென்று நினைத்தீர் நம்மை?

என்று சொல்லிக் கொண்டு எலிக்குஞ்சு செட்டியார் எழுந்து நின்று கையை ஓங்கினார்.

சபையார் கலீரென்று சிரித்தார்கள்.

ஏனென்றால், எலிக்குஞ்சு செட்டியார் $4\frac{3}{4}$ அடி உயரம்; ஜிந்தாமியான் ஸேட் $6\frac{3}{4}$ அடி உயரம். செட்டியார் $1\frac{1}{4}$ அடி அகலம்; ஸேட் $3\frac{1}{4}$ அடி அகலம். செட்டியாருக்கு வயது 55. ஸேட்டுக்கு வயது 33.

இம்மாதிரி பாரதியாருடைய வசன நூல்களிலே நகைச் சுவை பல இடங்களில் வெளிப் படுகின்றன. அவற்றை சந்தர்ப்பத்தோடு சேர்த்துப் படிக்கும் போது மிகவும் இன்பம் பெறுகின்றோம்.

தற்காலத் தமிழ் இலக்கிய வசனத்திலே உயர்ந்த ரகமான ஹாஸ்யத்தை முதலில் புகுத்தியவர்கள் ராஜம் ஐயர், வேதநாயகம் பிள்ளை முதலானவர்கள். பாரதியாரும் அரிய நகைச் சுவைச் செல்வத்தை நமக்கு அளித்திருக்கிறார்.

ஹாஸ்யமானது வாழ்க்கை இன்பத்தைப் பெருக்கும் ஒரு முக்கிய அம்சம். நாம் அதைப் போற்ற வேண்டும். அதை உயர்ந்த இலக்கிய வழியிலே நமக்குக் கொடுத்தவர்களில் பாரதியாரும் ஒருவராவார்.

* * *

# பாசமும் பிரிவும்

(எச். விஜயகுமார்)

இப்போது சூரியனுக்கு கிரகணம் பிடித்திருந்தது. அவன் ஜோதி இப்போது மங்கி வந்தது. உஷ்ணம் குறைந்து கொண்டிருந்தது.

கடற்கரையில் இரு காதலர்கள் உட்கார்ந்திருந்தார்கள். காதிற்கினிய கீதத்தை இசைத்துக் கொண்டு கடல், அலைகளை வீசியது! ஆனால் அந்தச் சங்கீதம் யாருக்கும் புரிவதில்லை. அதே போல் காதலர்களின் உள்ளத்தினின்றும் எழும் காதல் நாதத்தையும் யாரும் புரிந்து கொள்வதில்லை.

அந்தக் காதலர்கள் வாலிபப் பருவத்தில் இப்போதுதான் காலெடுத்து வைத்திருந்தார்கள். வாலிபன் ஏதோ சிந்தித்த வண்ணமாக மணலைக் கையால் அளைந்து கொண்டு உட்கார்ந்து கொண்டிருந்தான். யுவதியும் மணலில் உட்கார்ந்தபடியே கீழே சித்திரங்கள் போல ஏதோ வரைந்து கொண்டிருந்தாள். சிறு வயதில் விளையாடிய ஞாபகம் போலும்!

திடீரென்று வாலிபன் சொன்னான், "மல்லிகா! அதோ பார்த்தாயா?"

"எதை?"

"அந்தச் சூரியனை!"

"அவனிடம் என்ன இருக்கிறது பார்க்க?"

"என்ன இருக்கிறது என்று உனக்கென்ன தெரியும்? சூரியனுக்கு என்னவென்பதை நீ அறிவாயா?"

"ஏன்? சூரியனுக்கு என்ன?"

"க்ஷயரோகம்!"

"க்ஷயரோகமா?" என்று மல்லிகா ஆச்சர்யத்துடன் கேட்டாள்.

"ஆம்! அதோ! இன்னும் கொஞ்ச நேரத்துக்குள் சூரியன் இறந்து விடுவான்! அவனுக்கு க்ஷயரோகம் பிடித்திருக்கிறது! இந்த வியாதியே அப்படித்தான் மல்லிகா! இதிலிருந்து யாரும் தப்பிப் பிழைக்க முடியாது

மல்லிகா சிரித்தாள். ஆனால் தன் காதலன் — கணவன் சொன்னதின் பாவத்தை அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவள் கணவன் ரமேஷ். புத்தம் புதிய கற்பனைகளைச் செய்தல், புதிய புதிய உலகங்களைச் சிருஷ்டித்தல், முதலியவைகளெல்லாம் ரமேஷுக்கு ஒரு விளையாட்டாகத்தானிருந்தன. ரமேஷின் கற்பனைகள் அற்புதமானவை. மணலில் விளையாடிக்கொண்டே அவன் சொன்னான்:

"மல்லிகா! ஒரு விதத்தில் மனிதன் வாழ்க்கை கூட ஒரு க்ஷயரோகம் தான்!"

பாவம்! மல்லிகாவுக்கு அவன் சொன்னது ஒன்றுமே புரியவில்லை. ரமேஷ் தொடர்ந்து சொன்னான்:

"மனிதன் பிறக்கிருன். வளர்கிருன். வளர்ந்து பெரியவனுகிருன். பெரியவனுனதும் பேரானந்தமடைகிருன். ஆனல் அவனது ஆயுளுக்கு க்ஷயரோகம் பிடிக்கிறது என்பதை அறிவதில்லை. கணத்திற்குக் கணம் ஆயுட்காலம் க்ஷீணித்துக்கொண்டே வருகிறது! அதுவும் அவனுக்குத் தெரிவதில்லை! மனிதன் க்ஷயரோகத்தைக் கண்டு அஞ்சுகிருன். ஆனல் வாழ்க்கை முழுவதும் க்ஷயரோகம் பிடித்தது என்பது யாருக்குமே தெரிகிறதில்லை!"

மல்லிகாவுக்குக் கொஞ்சம் புரிந்தது. கொஞ்சம் புரியவில்லை. அவள் பேச்சை மாற்றிச் சொன்னுள்.

"புரியாத பேச்சை எல்லாம் ஏன் உளருகிறீர்கள் ரமேஷ்! வேறு ஏதாவது பேசத் தெரியாதா உங்களுக்கு?"

"வேறு பேச்சா! வேறென்ன பேசுவது?"

"ஏன்? காதல்! இன்பம்!! சம்சாரம்!!! இவைகளைப்பற்றி!"

"சம்சாரம் ஒரு க்ஷயரோகி!" என்ருன் ரமேஷ்.

"ஐயோ கடவுளே! என் ரமேஷுக்கு க்ஷயரோகத்தைப் பற்றிய நினைவே இல்லாமல் செய்துவிட மாட்டாயா?" என்ருள் மல்லிகா ஆகாயத்தைப் பார்த்து.

மல்லிகாவின் சொற்களில் ஒருவித உருக்கம் கலந்திருந்தது. ரமேஷ் இவைகளை எல்லாம் லக்ஷ்யமே செய்யவில்லை!

ரமேஷ் நல்லவன். தெய்வ பக்தியுள்ளவன்! ஆனல் அவனது பாவங்களை ஒரு சிலர்தானறிந்து கொள்ள முடியும். அநேகர் ரமேஷை நாஸ்திகனென்றே கருதி வந்தனர். ஆனல் இவைகளைப் பற்றியெல்லாம் ரமேஷுக்குத் துளிக்கூட ஞாபகமில்லை.

மல்லிகாவை அவன் மனமாரக் காதலித்தான். மல்லிகாவின் அப்சரஸ் போன்ற அழகிற்கு அவன் அடிமையாக இருந்தான்.

மல்லிகா சொன்னுள்:

"ஏதாவது காதல் மொழிகள் பேச உங்களுக்குத் தெரியாதா?"

"மல்லிகா! நான் எந்த மொழிகளைச் சொல்வது என்று எனக்கே தெரியவில்லை"

"ஏன்?"

"எனக்கு நீயே காதலின் தூய அன்பின் உருவமாகத் தோன்றுகிருய்! அப்படியிருக்க நான் வேறு என்ன சொல்வது?"

மல்லிகாவின் வதனம் மாலைச் சூரியனைப்போல் நாணத்தால் சிவந்து விட்டது! ரமேஷ் சொன்னுன்:

**அழகு சொட்டும் உன்றன் வதனம்**
**அதிலோர் சிவந்த ரேகையழகு**
**விழிகளோ விழியல்ல! காதலின்மது**
**தளும்ப விளங்குமிரு தங்கக் கிண்ணம்!**

மல்லிகா சிரித்தாள். கொஞ்சம் கோபம் கொண்டாள். காதலர்க்குரிய ஊடலுடன் சொன்னுள்:

"மறுபடியும் பைத்தியம் பிடித்து விட்டதா ரமேஷ்!"

"காதல் என்ருலே பைத்யம் என்றுதான் அர்த்தம்! தெரியுமா மல்லிகா!" என்ருன் ரமேஷ்.

சூரியன் மறைந்தான்! வானமும் வையமும் இருள் சூழ்ந்தது. மல்லிகாவும் ரமேஷும் வீட்டிற்

குப் புறப்பட்டார்கள். வழியில் ரமேஷின் நண்பன் மஹேஷ் சந்தித்தான்.

"என்ன மஹேஷ்! எங்கே புறப்பட்டாய்?" என்று கேட்டான் ரமேஷ்.

"உன்னைப் பார்க்க உன் வீட்டுக்குப் போயிருந்தேன்! ஆனல் அங்கே நான் பார்த்தது அலிகார் பூட்டைத்தான்!" என்று பதிலளித்தான் மஹேஷ்.

"பூட்டை உடைத்து விடுவது தானே!"

"நான் திருடனே கொள்ளைக்காரனே அல்ல ரமேஷ்" என்ருன் மஹேஷ் தமாஷாக.

ரமேஷ் ஒன்றும் பேசவில்லை! அவன் காதில் அந்தச் சொற்களே திரும்பவும் ஒலித்தன. "நான் திருடனே கொள்ளைக்காரனே அல்ல ரமேஷ்!"

மூவரும் வீட்டுக்கு வந்தார்கள்.

மஹேஷும் ரமேஷும் எப்போதும் தாராளமாக நெருங்கிப் பழகுவார்கள். மஹேசுடைய கண்களிலும் மல்லிகாவின் கண்களிலும் களங்கமற்ற விஷமம் நிறைந்திருந்தது. ரமேஷும் மஹேஷும் ரொம்ப அன்னியோன்னியமாகப் பழகி வந்தார்கள். சொந்த உடன் பிறந்த சகோதரர்களைப்போல.

காலச் சக்கரம் வெகு வேகமாக முன்னேறிச் சென்று கொண்டிருந்தது, க்ஷயரோகத்தைப் போல்.

ரமேஷுக்கு ஒரு நாள் கொஞ்சம் காய்ச்சல் கண்டது. ஆனல் ரமேஷ் இதை லக்ஷியம் செய்யவே இல்லை. யாரிடமும் சொல்லவுமில்லை. ஆனல் நாளடைவில் இருமலும், காய்ச்சலுடன் பந்துத்வம் பாராட்டிச் சேர்ந்து கொண்டது. பலவீனமும் தன் பங்கை விட்டுக் கொடுக்கவில்லை. ரமேஷ் வியாதியாக இருக்கிருன் என்று எல்லாருக்கும் தெரிந்து விட்டது. ஒரு முறை மஹேஷ் ரமேஷிடம் மெதுவாகச் சொன்ஞன்.

"இலேசான காய்ச்சலும் இருமலும் க்ஷயரோகத்துக்கு அறிகுறி ரமேஷ். அசட்டையாக இருக்காதே! நல்ல டாக்டரைப் போய் பார்!"

ரமேஷ் சிரித்தான். ஆனல் முகத்திலோ மனத்திலோ உற்சாகமில்லை. சிரித்துக்கொண்டே சொன்ஞன் அவன்:

"மஹேஷ் இந்த வாழ்க்கையே ஒரு க்ஷயரோகிதானே!"

மஹேஷ் பதிலளித்தான்:

"இந்த வியாதியே அப்படித்தான் ரமேஷ்! இதிலிருந்து யாரும் தப்பிப் பிழைக்க முடியாது;"

ரமேஷ் முதலில் இவைகளை எல்லாம் மதிக்கவே இல்லை. ஆனல் உடம்பு க்ஷீணமாகிக் கொண்டு வரவே டாக்டரை அழைக்க வேண்டி நேர்ந்தது.

டாக்டர் வந்து ரமேஷைப் பார்த்தார். மஹேஷை மருந்து வாங்க ஆஸ்பத்திரிக்கு வரும்படி சொன்ஞர்.

மல்லிகாவால் சும்மா இருக்க முடியவில்லை. அவள் கேட்டாள். "டாக்டர் சார்! அவருக்கு என்ன உடம்புக்கு?"

"ஒன்றுமில்லையம்மா! எல்லாம் சரியாகப் போய் விடும்!" பயப்படாதீர்கள்!" என்ருர் டாக்டர். இந்தச் சொற்களைக் கேட்ட மல்லி

காவுக்கு யாரோ தேவதூதன் வந்து அபயம் அளிப்பதைப் போலத் தோன்றியது. டாக்டர் சென்றார். மஹேஷும் கூடவே சென்றான் மருந்து வாங்க! டிஸ்பென்சரிக்குப் போன பிறகு டாக்டர் மஹேஷைப்பார்த்துச் சொன்னார் :

"மஹேஷ்! அவனுக்கு க்ஷய ரோகம்!"

"க்ஷயரோகமா?" மஹேஷ் கூச்சலிட்டான்.

"ஆம்! பிழைப்பதற்கு 'சான்ஸ்' இல்லை."

"டாக்டர்! என்ன சொல்லுகிறீர்கள்?"

"ஆம்! ஆனால் இன்னொன்று இந்த விஷயம் ரமேஷுக்குக் கொஞ்சம்கூடத்தெரியக்கூடாது, இல்லாவிட்டால் 'கேஸ்' ரம்பவும் 'ஹோப்லெஸ்' ஆகப் போய் விடும்!"

மஹேஷ் மருந்துடன் வீட்டுக்கு வந்தான். மல்லிகா பதட்டத்துடன் அவனைக் கேட்டாள் "மஹேஷ்! உங்கள் அண்ணாவுக்கு என்ன உடம்புக்கு?"

"ஒன்றுமில்லை! வெறும் குளிர் காய்ச்சல்தான்!"

ரமேஷ் இதைக்கேட்டுச் சொல்லலானான் :

"எனக்கு வெறும் குளிர்ஜுரம் தான் என்று நானே சொல்கிறேனே! நாளைக்கு எல்லாம் சரியாகப் போய்விடும்! கவலைப் படாதே மல்லிகா!"

"ததாஸ்து!" என்றான் மஹேஷ்.

மஹேஷ் இப்போது ரமேஷிடம் அடிக்கடி வந்து போய்க்கொண்டிருந்தான். அவன் கண்கள் மெள்ள மெள்ள மல்லிகாவின் மீது விழலாயின. எந்தக் கண்களில் களங்கமற்ற அன்பு நிறைந்திருந்ததோ அந்தக் கண்களில் இப்போது காமத் தீ நர்த்தனமாடியது. மஹேஷின் பேச்சில் பாவங்களில் கண்களின் களங்கமற்ற அன்பில் மாறுதல்கள் உண்டாயின. ரமேஷ் இந்த மாறுதல்களை அறியாமலில்லை. ஆனால் ஒன்றும் பேசவில்லை. அவன் காதில் அதே சொற்கள் ஒலித்துக் கொண்டிருந்தன.

"நான் திருடனோ கொள்ளைக் காரனோ அல்ல ரமேஷ்!" ரமேஷின் மனதில் அடிக்கடி இந்தக் கேள்வி எழும்.

"என்ன! மஹேஷ் திருடனல்லவா?"

மல்லிகாவின் கண்களும் இப்போது மாற ஆரம்பித்தன. அவள் யௌவனம் இப்போது வேறு திக்கை நோக்கிச் செல்ல ஆரம்பித்தது. புதிய வேகத்துடன்! அது எவ்வளவு தூரத்துக்கு வந்து விட்டது என்றால் ரமேஷுக்குத் தான் செய்ய வேண்டிய கடமையைக்கூட மறந்து விட்டாள்.

அது மட்டுமல்ல! மஹேஷ் இல்லாமல் இப்போது அவளால் ஒரு நிமிஷம்கூட இருக்க முடியவில்லை.

இந்த நிலைமையையும் ரமேஷ் அறிந்திருந்தான். இருந்தாலும் அந்தக் கோரத் தீயைத் தன்னுள் அடக்கிக் கொண்டான் அவன்.

இப்போது மல்லிகா — மஹேஷின் நிலைமை அளவைக் கடந்து விட்டது. இருவரும் ரமேஷின் சாவை எதிர் பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால் நாளுக்கு

நாள் ரமேஷின் உடம்பு குணமாகிக் கொண்டு வந்தது! ஆனல் அது அணேயும் விளக்குப் பிரகாசமாக எரிவதைப் போல!

ஒரு நாள் மல்லிகா மஹேஷைப் பார்த்துக் கேட்டாள் :

"ரமேஷுக்கு முடிவு எப்போது வரும்?"

"இவனுக்கு முடிவைக் கொண்டுவர எவ்வளவு நேரம் பிடிக்கும்?"

"எப்படி?"

"நாளைக்குச் சொல்லுகிறேன்!"

"இல்லே! இப்போதே சொல்லுங்கள்"

"அவனுக்கு க்ஷயரோகம் என்று அவனிடம் சொல்லி விட்டால் போதும்!"

"அப்படியானல் ரமேஷுக்கு ..........."

"க்ஷய ரோகம்!"

இந்தச் சொற்கள் ரமேஷின் காதிலும் விழுந்தன. காய்ச்சலில் பிதற்றுபவனைப்போல அவன் பிதற்றலானன்:

"வாழ்க்கை ஆயுள் முழுதும் க்ஷயரோகிதான். இந்த வியாதியே அப்படித்தான். அதிலிருந்து யாரும் தப்பிப் பிழைக்க முடியாது!"

மல்லிகாவின் இதயத்தில் விஷ அம்பு பாய்வதைப்போல் இந்தச் சொற்கள் அவளுக்கு வேதனேயளித்தன. என்ன இருந்தாலும் பெண்ணுள்ளம்தானே! அவள் ரமேஷின் அருகில் வந்து சொன்னுள்:

"ரமேஷ் என் இன்பக் களஞ்சியமே! என்ன் உளறுகிறீர்கள். எனக்குப் பயமாக இருக்கிறது!"

"மல்லிகா! வாழ்க்கையே ஒரு க்ஷயரோகி! இந்த வியாதியே அப்படித்தான் மல்லிகா! அதிலிருந்து யாரும் தப்பிப் பிழைக்க முடியாது!"

"ராமு! ராமு! என்ன இதெல்லாம்! என்னேத் தைரியப் படுத்துவதற்குப் பதில் நீங்களே இவ்விதம் சொன்னல் ...?"

"இல்லே மல்லிகா! பயப்படாதே! நான் சாகமாட்டேன்.

மல்லிகா ஒருவாறு சமாதானமடைந்தாள். மஹேஷ் சென்று விட்டான். காலேயில் திரும்ப வந்தான், ரமேஷ் மஹேஷை அருகில் கூப்பிட்டுக் கேட்டான், "மஹேஷ்! உண்மையைச் சொல்லுவாயா?"

ரமேஷ் என்ன கேட்க விரும்புகிறுன் என்று மஹேஷுக்குப் புரியவில்லே. ரமேஷ் மறுபடியும் சொன்னன் "இதோ பார் மஹேஷ்! உண்மையைச் சொல்!"

"என்ன...?"

"எனக்கு என்ன வியாதி?"

"ஒன்றுமில்லே."

"உண்மையாகச் சொல்."

"ஒன்றுமில்லே ரமேஷ்!"

"என் மீது ஆணே!"

மஹேஷ் என்னவோ யோசித்தான்! சட்டென்று சொன்னன்:

"உனக்கு க்ஷயரோகம்!"

"என்ன சொன்னய்? க்ஷயரோகமா?"

ரமேஷ் கத்தினன்.

"க்ஷயரோகமா?" என்றது எதிரொலி.

ரமேஷ் 'கடகட' வென்று கட்டிடம் அதிரும்படி உரக்கச் சிரித்தான், பைத்தியக்காரனைப் போல.

எதிரொலியும் சிரித்தது.

சிரித்துக்கொண்டே இருந்தான் ரமேஷ்! கடைசியில் அவனுக்கு நினைவு தப்பியது. கண்டபடி உளறினன்.

"க்ஷயரோகம்! க்ஷயரோகம்!! இந்த வியாதியே அப்படித்தான். அதிலிருந்து யாரும் தப்பிப் பிழைப்பதில்லை!"

"உளறிக்கொண்டிருந்த ரமேஷ் மல்லிகாவை அருகில் அழைத்தான். மல்லிகா அருகில் வந்தாள். ரமேஷ் தன்னிரு கைகளையும் நீட்டினன். மல்லிகா ரமேஷின் அணைப்பில் கட்டுண்டாள். கண்களிலிருந்து நீரை மழையாகப் பெருக்கிக் கொண்டே ரமேஷ் சொன்னன்! "இந்த வியாதியே அப்படித்தான் மல்லிகா! அதிலிருந்து யாரும் தப்பிப் பிழைப்பதில்லை."

ரமேஷ் தினமும் இப்படிப் பிதற்றிக்கொண்டே இருந்தான். ஒரு நாள் பிதற்றிக்கொண்டே சென்றும் விட்டான். எமனின் கணக்குப் புத்தகத்தில் வரவுக் கலத்தில் ரமேஷின் பெயர் எழுதப் பட்டுவிட்டது. மஹேஷின் அந்த சொற்களே அவனுக்கு எமனையின.

ரமேஷ் மறைந்த பிறகு மல்லிகா மஹேஷை புனர் விவாகம் செய்து கொண்டாள். ஆனல் வாழ்க்கையின்பத்தை அவர்களால் அனுபவிக்க முடியவில்லை. மல்லிகாவும் மஹேஷும் இணைக்கப்பட்டதும் அவர்கள் இருவர்களின் காதிலும் அந்தச் சொற்களேதான் ஒலித்துக்கொண்டிருந்தது.

"இந்த வியாதியே அப்படித்தான் மல்லிகா! அதிலிருந்து யாரும் தப்பிப் பிழைக்க முடியாது!"

மல்லிகா இந்த ஒலியைக் கேட்டுப் பைத்தியம் பிடித்தவள் போலாகி விட்டாள். தன் நினைவையிழந்து விட்டாள். அவளால் பேச முடியவில்லை. பேசினலும் ஒன்றையேதான் கிளிப்பிள்ளையைப்போல் பேசிக் கொண்டிருப்பாள். உளறுவாள். பிதற்றுவாள்.

"க்ஷயரோகம்! க்ஷயரோகம்!! இந்த வியாதியே அப்படித்தான் மல்லிகா! இதிலிருந்து யாரும் தப்பிப் பிழைக்க முடியாது. இந்த வியாதியே அப்படித்தான்!

("ஷய்தா" எழுதிய குஜராத்திக் கதையின் மொழி பெயர்ப்பு)

★

*வாழ்க்கைக் காட்சி:*

# பொழுது போக்கு

**[சி. ஆர். ராமசாமி]**

**பொ**ழுது போவதை யாரால் தடுக்க முடியும்? ஷேக்ஸ்பியர் சொன்ன மாதிரி சில சமயத்தில் நின்று போன மாதிரி தெரியும். மற்ற சமயங்களில், குதிரையின் ஐவகை நடைகளைப் போல் பொழுதும் வேறுபட்ட வேகத்துடன் செல்கிறது. பொழுது நம்மைத்தான் போக்கடிக்கிறதே தவிர நாம் அதைப் போக்கவில்லை. அப்படித்தோன்றுவது நமக்கு விஷயங்களின் பரஸ்பர சம்பந்தத்தை உணர்வதில் ஏற்படும் ஒரு குழப்பம். பூனை பால் குடிக்கும் பொழுது கண்ணை மூடிக் கொண்டு தன்னை யாரும் பார்க்கவில்லை யென்று நினைப்பது போல், நாமும் பொழுதைப் போக்குகிறோமென்று நினைத்து மயங்குகிறோம். ஆனால் கர்ணனுடைய சக்தியாயுதத்தால் பீடிக்கப்பட்டு மரணத்தருவாயிலிருந்த கடோத்கசன் தான் சாகுமுன் கூடியஅளவு பாண்டவர்களின் எதிரிகளை எப்படி நாசம் செய்தானே அப்படியே எந்த வேளையிலும் உயிர் இழக்கும் நிலையிலிருந்தாலும் நல்ல வழியில் காலத்தைக் கழிப்பது நல்லது. தேக யாத்திரைக்கு அவசியமான காரியங்களைச் செய்து மிகுந்த நேரத்தை, ஆராய்ந்து பயனுள்ள வழியில் செலவழிப்பது விவேகம். அதை ரம்மியமான வழியிற் கடத்தினல் வினேதம். நம்மையே ஏமாற்றிக் கொள்ளாமல் செலவழித்தால் சத்தியம். தியானத்தில் ஆனந்தம் அடையலாம்.

கிரிக்கெட் விளையாடுகிறோமென்று மூன்று நாள் வெயிலில் அலைந்து புழுங்கி, ஒரு வாரம் அதைப் பற்றிபேசி, இரவெல்லாம் ஹாப்ஸ், மார்செண்ட், ஹஜாரே கனவுகளைக் கண்டு கடைசியில் பரிக்ஷையில் 'கோட்' அடிப்பது மேற் கூறிய மூன்றில் ஒன்றிலும் சேராது. வேலைக்காரனில்லாமல் திண்டாடும் இன்னாட்களில் ஒரு பத்து குடம் தண்ணீரிழுத்தால் சமையலுக்கோ தோட்ட வேலைக்கோ உதவியாயிருக்கும். இந்த மாதிரி வேலை செய்தவர்கள் பிறகு ஐ. சி. எஸ். பரிக்ஷை பாஸ் செய்ததை நான் பார்த்திருக்கிறேன். கிரிக்கெட்டும், டென்னிசும் ஆடி பரிக்ஷையில் "கோட்" அடித்து குடம் இழுக்கும் வேலையை முக்கியமான அம்சமாகக் கொண்ட வேருெரு ஐ. சி. எஸ். வேலையில் சேரும் பிள்ளைகளையும் பார்த்திருக்கிறேன். அதற்கு பெயர் இண்டியர் குக்கிங் சர்விஸ். ஆனல் கடைசியாகச் சொன்ன வேலைதான் உயர்ந்தது என்றும் சிலபேர் சாதிக்கலாம்.

அக்பர் பாதுஷா சிறு வயதில் படிக்கக் கற்றுக் கொள்ளவில்லை யென்று அவருடைய தகப்பனர் வருத்தப் பட்டார். கிடைத்த நேரத்தை அவர் குஸ்தி, கத்திச் சண்டை, குதிரைச் சவாரி, வேட்டை முதலிய துறைகளில் கழித்தார். இது அக்பருக்கு பின்னல் உதவிற்று. உயிருக்கு ஆபத்து ஏற்பட்ட நேரங்களில் அவரைக் காப்பாற்றிற்று. சண்டையிலும் உபயோகப் பட்டது, வெற்றியைத் தந்தது.

ஆனல் ஒரு விசேஷம். நாம் என்னதான் உபதேசம் பெற்று

லும் பொழுது போக்கில்கூட நாம் நமது சகஜ குணங்களைத்தான் பின் பற்றுகிறோம். பிரயாணத்திற்கு ஏற்பட்ட ஆகாய விமானம் பறந்து ஸ்மசானங்களை உண்டாக்குகிறது. கிணறு வெட்ட உபயோகமாகும் வெடிகள், தலை வெட்டி பூதங்களாக மாறி நகரங்களையும், பாலங்களையும், அணைகளையும் உடைத்துத் தள்ளுகின்றன. சண்டையை நிறுத்த ஏற்பட்ட சங்கங்கள் விரோதத்தைக் கிளப்பும் சதியாலோசனைச் சபைகளாக மாறுகின்றன.

தலைமயிரும் தாடியும் வெளி வேஷங்களும் பெரிய வேறுபாடு என்று எண்ணிக்கூட வாழ முடியாது என்று சண்டை போட்டுக் கொள்ளாமல் பொழுதைப் போக்கலாம்.

பகவானை வெட்ட வெளியில் துதிப்பதா அல்லது இருட்டுக் கோபுரங்களில் துதிப்பதா அல்லது மசூதிகளில் துதிப்பதா என்று சண்டை போட வேண்டாம். ஒரு நல்லவர் இறந்த பிறகு அவர் பகவானின் பிள்ளையா, தூதரா அல்லது அவதாரமா என்று ஒருவரையொருவர் அடித்துச் சாக வேண்டாம். புராணங்களில் வேண்டாமென்று எடுத்துக் காட்டுவதற்காக எழுதிய பேசும் படங்களிலும், நாடகங்களிலும் எச்சக்கலையைக் கலை யென்று சொல்லிக் கொண்டு அனுபவிக்க வேண்டியதில்லை.

தேகாப்பியாசம் என்று சொல்லி பெரும் விலைகொடுத்து கட்டைகளையும், மட்டைகளையும் வாங்கி பணத்தையும், பொழுதையும் வீணாக்க அவசியமில்லை. நவீனம், சமத்துவம், சுயமரியாதை, புனருத்தாரண மென்று சொல்லி ஜனங்களுக்குள் மனக்குறையையும் சச்சரவுகளையும் கிளப்பித் தவிக்க வைக்க வேண்டாம். தொழிலிலிருந்து அவகாச மேற்பட்டால் சரீரத்தைச் சுத்தி செய்யும் பணச் செலவில்லாத சுலபமான தேகாப்பியாசத்திலும், மனதை சுத்தி செய்யும் தியானத்திலும் காலத்தைக் கழிக்கலாம்.

ஆசிரியர்
சரத் சந்திரசட்டர்ஜி

# சாவித்திரி

மொழிபெயர்ப்பு.
ஆர். ஷண்முகசுந்தரம்.

இந்த சம்பாஷணைகளால் சஷாங்க மோகனுக்குச் சிறிது ஆறுதலேற்பட்டது. அவன் மகிழ்ச்சியுடன் சிரித்துக்கொண்டு, "அப்படியா சமாசாரம்?" என்ருன்.

ஜோதிஷ் இன்னேர வரையிலும் பேசாமலிருந்தவன் உபேந்திரனைப் பார்த்து, "உபேந்திரா! நீ சொல்வது எனக்குப் புரியவில்லை. தேக பலம் கூடாதென்கிருயா? அவருடைய சங்கீதத்திலே எனது மனதைப் பறி கொடுத்து விட்டேன். அவர் செய்து வரும் நல்ல காரியங்களுக்கு நாம் மதிப்புக் கொடுப்பதில்லை! அதைத் தெரிந்து கொள்வதில்லை. இதில் அவர் பேரில் தப்பு கிடையாது. நம் பேரில் தான் தப்பு! இந்த இன்கலைகள் எல்லாம் உலகத்தில் இல்லா விட்டால் உலகம் சந்தைக் கூட்டம் போலாகி விடுகிறது. என்னைப் பொறுத்த வரையிலும் அந்த நண்பரைப் பார்த்துப் பொருமையடைகிறேன். சரி, அவருடைய தகப்பனருக்கு எவ்வளவு வருமானம் வருகிறது? என்ருன்.

அப்போது சரோஜினி அங்கு வந்தவள், "யாருக்கு அண்ணு?" என்ருள்.

"சதீஷினுடைய தகப்பனருக்கு"

"சரியாகச் சொல்ல முடியாது; ஏறக்குறைய இரண்டு லட்சம் ரூபாய் வரலாம்" என்ருன் உபேந்திரன்.

ஜோதிஷ் ஆச்சரியத்துடன், "இரண்டு லட்சமா? அப்போ, பெரிய ராஜா என்று சொல்லு" என்ருன்.

"இல்லை, ராஜா அல்ல. ஒரு பழைய கால ஜமீந்தார். கிழவன் இப்போது அதை இன்று பெருக்கி இருக்கிருன்"

ஜோதிஷ் நாற்காலியில் சாய்ந்து கொண்டான். பிறகு, "கொடுத்து வைத்துப் பிறந்தவன் என்று சொல்லு. ஆரோக்கியம், அழகு, பலம், பாக்கியம் — மனிதனுக்கு எதெது தேவையோ அதெல்லாம் இருக்கிறது" என்ருன்.

உபேந்திரன் சிரித்தான், "ஒரு பெரிய குறையும் இருக்கிறது. அந்நியர் கஷ்டத்தை தான் இழுத்துப் போட்டுக் கொள்வான். இதனலே எங்கு அவனுக்கு பிராணனுக்கு ஆபத்து நேர்ந்து விடுமோ என்று பயமாக இருக்கிறது.

இதைத் தவிர நீ சொன்னதெல்லாம் உண்மைதான்.''

ஜோதிஷ் நேராக உட்கார்ந்து கொண்டு, ''உயிருக்கே ஆபத்து வந்து விடுமா? எனக்குப் புரியவில்லையே'' என்றான்.

''ஆம், உண்மைதான். இதற்கு முன்னாலேயே அப்படி நடந்திருக்கிறது. அவனுக்குத் துளி கூட உயிர்மேல் ஆசை கிடையாது. இந்தக் கலியுகத்தில் இருந்து கொண்டு சத்திய யுகத்து ஆசாமி போலிருக்கிறான். கோபம் வந்து விட்டால் அப்புறம் உயிரைப் பற்றிய கவலையே கிடையாது. பொறுத்துக் கொள்வதும் ஒரு விதத்தில் மன்னிப்பு அளிப்பது தானே! அழைக்காமல் உதவி செய்யப் போவதும் சில சமயங்களில் கெடுதலாக முடிகிறது. இவைகளெல்லாம் அவனுக்குத் தெரிவதில்லை. ஐரோப்பாவிலே இருந்த பழைய காலத்து 'நைட்' இங்கு வந்து வசிக்கிறார் என்று சொல்ல வேண்டும்'' என்றான்.

ஜோதிஷ் சிரித்துக் கொண்டு, ''நீ என்ன சொன்னாலும் சரி, எனக்குக் கேட்பதற்கு ரொம்ப ரஸமாக இருக்கிறது'' என்றான்.

உபேந்திரன், ''அப்படித்தான் இருக்கும். இந்த உலகத்திலே எத்தனையோ விஷயங்களை கவனியாதது போல் விட்டுவிட வேண்டியிருக்கிறது. இதை அவன் இன்னும் கற்றுக் கொள்ளவில்லை. கற்றுக் கொள்வானா என்பதும் சந்தேகம் தான். கற்றுக் கொள்ளாவிட்டால் அவனுக்கோ அவனது குடும்பத்துக்கோ அல்லது அவனுடைய நண்பர்களுக்கோ யாருக்குமே ஒரு நன்மையும் விளையப் போவதில்லை'' என்றான்,

ஜோதிஷ், ''நீதான் அவனுடைய பால்ய நண்பனாயிற்றே, ஏன் கற்றுக் கொடுக்கக் கூடாது?'' என்றான்,

உபேந்திரனுக்கு சிரிப்பு வந்து விட்டது. ''நான் அவனுடைய நண்பன் தான். ஆனால் இந்த வித்தையைக் கற்றுக் கொடுப்பதற்கு என்னைப் போன்ற நண்பனால் முடியாது. யார் எல்லா நண்பர்களைக் காட்டிலும் உயர்ந்த நண்பனோ, யார் எல்லா பந்துக்களைகாட்டிலும் உயர்ந்த பந்துவோ அவரால் தான் அதைக் கற்றுக் கொடுக்க முடியும்.''

சரோஜினி இது வரையிலும் மவுனமாக உட்கார்ந்து கொண்டிருந்தாள். இப்பொழுது அவள் வேறு பக்கம் திருப்பிக் கொண்டு சிரிப்பை அடக்க முயற்சித்தாள்.

உபேந்திரன், ''சதீசைப் பற்றிய பேச்சு இன்று இதோடு நிற்கட்டும். எனக்கு வேலை இருக்கிறது. இரண்டு கடிதங்கள் எழுத வேண்டியிருக்கிறது'' என்றான்.

ஜோதிஷுக்கும் இரண்டு மூன்று கேஸ் கட்டுகளைப் பார்க்க வேண்டியிருந்தது. ஆகையால் அவனுக்கும் நேரமில்லை. ஆனால் எல்லோருக்கும் முன் சரோஜினி எழுந்து நின்று கொண்டாள். உபேந்திரனிடம் ஏதோ சொல்ல விரும்பினாள். ஆனால் சொல்ல முடியவில்லை. யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் மவுனமாக அறையை விட்டு வெளியே சென்று விட்டாள். இன்றைய சபை, கூட வேண்டிய மாதிரி கூடவில்லை. ஆனால் கலைந்ததோ மிக மோசமாகக் கலைந்தது.

உபேந்திரனுக்கும் கொஞ்சம் தெரியும். ஆனால் அவனாலும் ஒன்றும் புரிந்து கொள்ள முடியவில்லை.

## 16. அத்தியாயம்

புத்தி கூர்மையுள்ள கிரணமயி கணவன் நோய்வாய்ப் பட்டிருந்த காலத்தில் உபேந்திரனை அடிக்கடி சந்திக்க நேரிட்டதால் அவனை நன்கு அறிந்து கொண்டாள். இதனால் அவளுடைய பயம் விலகியது. அதோடு உபேந்திரனிடம் அவளுக்கு மதிப்பு ஏற்பட்டது. இம்மாதிரி மனிதனை இதற்கு முன் பார்த்ததேயில்லை. இம்மாதிரி ஒரு மனிதனை ஒரு நாளைக்கு சந்திப்போம் என்று கற்பனை கூடச் செய்து பார்த்ததில்லை. இதனால், இந்தக் கொஞ்ச நாளையப் பழக்கத்தினாலேயே தன்னுடைய எதிர் காலத்தை அவன் கையில் ஒப்படைப்பதற்கு அவள் சிறிதும் தயங்கவில்லை.

உபேந்திரன் காலையிலிருந்து மாலை வரையிலும் மரணத்துடன் போராடிக் கொண்டிருக்கும் தனது நண்பனுக்குச் சேவை செய்து கொண்டிருப்பான். இந்த சேவையை மதிப்பிடவே முடியாது. ஏனென்றால் ஹாரான் பிழைப்பான் என்ற நம்பிக்கையே இல்லை. இருந்தாலும் இந்த சேவை காய்ந்து போய்க் கிடந்த அவனுடைய கண்களிலே ஒளியைப் பிரகாசிக்கச் செய்ததை கிரணமயி கண்டாள். இந்த குற்றுயிராய்க் கிடந்த உடலிலே அந்த ஒளி மறைந்து கிடந்தது. அவளுடைய திடீர் மாறுதலை சாகப் போகும் ஹாரான் உணர்ந்தான். குழந்தையிலிருந்து கிரணமயி அன்னியர் வீட்டிலே வளர்ந்து வந்தவள். அதோடு மிகச் சிறிய வயதிலேயே கலியாணமாகி கணவன் விட்டிற்கு வந்தாள். அவளுடைய மாமி, அகோரமயி எப்போதும் அவளை அன்புடன் நடத்தியதே கிடையாது. தன்னால் இயன்ற அளவு மருமகளைத் துன்புறுத்திக் கொண்டே வந்தாள். கணவனும் தனது அன்பை வெளிப்படுத்தவில்லை. ஹாரான் பகலில் பள்ளியில் படிப்பதும், இரவில் அதை மனனம் செய்வதுமாகவே இருந்தான். தனது மனைவிக்கும் படிப்புச் சொல்லிக் கொடுத்து வந்தான். கற்கவேண்டும் என்ற ஆசையானது அவர்களுக்குள் குரு சிஷ்ய பாவத்தை வளர்த்தியதேயல்லாமல் கணவன் மனைவி என்ற பந்தத்தை ஏற்படுத்தவில்லை. இவ்விதமாக இளமை ததும்பும் சிறுமி யவ்வன பருவத்தை அடைந்தாள். இதன் பிறகு ஒரு அழகிய மலர் முகர்வாரற்று வாடிவதங்கியது. இவ்விதம் அவள் அன்பிற்கும், ஆதரவுக்கும் ஏங்கி ஸ்திரீ தர்மத்தைக் கூட கைவிடத்தயாரானாள்.

அகோரமயிக்கு எல்லா விஷயங்களும் தெரியும். இந்த அழகி கற்பு என்பதை அலட்சியம் செய்கிறாள் என்பதைக் கூட அவள் அறிவாள். ஆனால் மகனோ மரணப் படுக்கையில் இருந்தான். முடிவு வெகு சமீபத்திலிருந்தது. ஆகையால் தன் மருமகளுடைய நடத்தையைப் பார்த்தும் பார்க்காதவள் போல் இருந்தாள். இங்கே வீட்டுக்கு வரும் டாக்டர் என்ன காரணத்தால் மருந்துக்குக் கூடப் பணம் வாங்காமல் சிகிச்சை செய்கிறார் என்பதையும் அறிவாள். இருந்தாலும் சாகப் போகும் மகனிடத்தில் இதை எவ்விதம் தெரிவிப்பது என்று பேசாமல் இருந்தாள். இதோடு இன்னொரு காரணமும் இருந்தது. அதோடு அவள் மருமகளைத் துளி கூட விரும்பவில்லை. உபேந்திரன் கூட மெள்ள மெள்ள அவள் வலையில் சிக்கி விடுவான் என்று எண்ணினாள். அவன் செலவு செய்வ

தையும் சதா இங்கேயே சேவை செய்து கொண்டிருப்பதும் அவன் நண்பன் ஹாரானுக்காக மட்டு மல்ல; அதைவிட வேறோர் கார ணமும் இருக்கத்தான் இருக்கும். இதில் அவளுக்குச் சந்தேகமே யில்லை. நேற்றிலிருந்து அவன் ஏன் இங்கு வரவில்லை என்று அவள் தனியாக உட்கார்ந்து யோசனை செய்து கொண்டிருந் தாள்.

சூரியன் இன்னும் மறைய வில்லை. இருந்தாலும் வீட்டின் உள் பக்கத்து அறைகளில் இருள் பரவி இருந்தது. சூரியன் உதிப் பதும் மறைவதும் நல்லநாளிலேயே இந்த வீட்டு சனங்களுக்குத் தெரியாது. அதுவும் இம்மாதிரி துக்க காலத்தில் எங்கே தெரியப் போகிறது.

"அம்மா, விளக்கேத்திக் கொண்டு இங்குவா. உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும்" என்று அகோரமயி அழைத்தாள்.

கிரணமயி அந்த அறையில் தான் ஏதோ வேலையாக இருந் தாள். அவள் உடனே, "இன் னும் இருட்டி விடவில்லை. உங் கள் படுக்கையை விரித்து விட்டு வருகிறேன்" என்றாள்.

"என்ன, என் படுக்கையா? அதை தூங்கப் போகிற போது நானே அதை விரித்துக் கொள் வேன், இரவு பகலா வேலை செய்து உன் தேகம் துரும்பாகப் போய் விடப் போகுது" என்று கூறி விட்டுப் பேசாமலிருந்து கொண்டாள். சிறிது நேரம் கழித்து மருமகள் வந்து அருகில் உட்கார்ந்தவுடன், "முதலில் விளக்கை ஏற்று" என்றாள்.

"அம்மா ஏன் பயப்படுகிறீர்கள்? இருட்டுவதற்கு இன்னும் ரொம்ப நேரமிருக்கிறது" என்றாள்.

"நேரமிருந்தால் இருக்கட்டும். கீழே ஒரே இருளாக இருக்கிறது. பொழுது இருக்கும் போதே மாடிப்படி விளக்கை ஏற்றி விடு வதுதான் நல்லது. ஒரு வேளை உபேந்திரன் கூட இன்று வரு வான். அவன் நேற்றிலிருந்து வரவில்லை. ஏன், நீ முகம் கூடக் கழுவவில்லை; தலை வார வில்லை? நீ இன்னேர வரையிலும் என்ன தான் செய்து கொண்டிருந்தாய்?"

மாமியின் நடத்தையில் ஏற் பட்ட இந்த மாறுதலைக் கண்டு கிரணமயி ஆச்சரியத்துடன் அவ ளையே பார்த்தாள். பிறகு சிரித் துக் கொண்டே, "அம்மா, இப் போது, எனக்கு உடை மாற்றிக் கொள்ள நேரமேது? சமையல் வேலையே இன்னும் தீரவில்லை. அதற்கப்புறம் ........"

மாமியார் இடைமறித்து, "அதெல்லாம் அப்புறம் செய்து கொள்ளலாம், முதலில் நான் சொல்வதைக் கேள்" என்றாள்.

கிரணமயி போவதற்குத் தயா ராக நின்று கொண்டு, "சரி, நான் போய் விளக்கேற்றிக் கொண்டு வந்து பக்கத்தில் உட்கார்ந்து கொள்கிறேன்" என்றாள்.

"என்னிடம் வந்து உட்காரு கிறேன் என்று வாயால் சொல்லி என்ன பிரயோஜனம். முதலில் வந்து உட்கார வேண்டும். அடி அம்மா, நீ நாளுக்கு நாள் எப்படி இளைத்து வருகிறாய் தெரியுமா?"

அவளுடைய அந்த அன்பான வேண்டுகோள் கிரணமயி காதில் நாராசம் போல் ஒலித்தது. அவள் கோபத்துடன், "அம்மா, நீங்க ளெல்லோரும் தான் என்னை இம்

மாதிரி செய்து விட்டீர்கள். அடிக்கடி இம்மாதிரி பேசுவது எனக்கு விளங்கவில்லை. உங்கள் கருத்துத் தான் என்ன? அதைப் புரியும்படி சொல்லுங்கள்'' என்று கூறிவிட்டு ஒரு நிமிஷம்கூட அங்கு நிற்காமல் வேகமாக அப்புறம் போய் விட்டாள்.

கிரணமயி என் இவ்விதம் கோப மடைந்தாள் என்பது அகோரம யிக்குத் தெரியும்.

கிரணமயி விளக்கேற்றிக் கொண்டு மாமியாரின் அறைக் குள் நுழையும் போது மாமியார் அழுது கொண்டிருந்தாள். அவ ளுடைய கண்களிலிருந்து கண் ணீர் தங்கு தடையின்றி வழிந் தோடிக் கொண்டிருந்தது. கிர ணமயி அருகில் வந்து நின்று கொண்டு, "அம்மா, ருத்தி ராட்ச மாலையை எடுத்து வரட் டுமா?'' என்றாள்.

கிரணமயி சுவரில் மாட்டி யிருந்த மாலையை எடுத்துக் கொடுக்கப் போனாள். அகோர மயி அவள் கையைப் பிடித்து அருகில் உட்கார வைத்தாள். பிறகு தலையை நீவிவிட்டு, கன்னத் தில் முத்த மிட்டாள். கிரணமயி அசையாமல் உட்கார்ந்து கொண்டு அவளுடைய அன்பைக் கண்டு ஆச்சரியப் பட்டுக் கொண் டிருந்தாள்.

சிறிது நேரம் கழித்து அகோர மயி மறுபடியும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "துக்கத் தால் எனக்குப் பைத்தியம் பிடித்து விடும் போலிருக்கிறது. ஒன்று மில்லாத பேச்சுக் கெல்லாம் நீ இவ்வளவு பெரிய கோபம் அடை யலாமா?'' என்றாள்.

கிரணமயி, "துக்கம் உனக்கு ஒருத்திக்குத் தானா? நானும் ஒரு பெண்தான். இதை மறந்து விடும் போது தான் எனக்குக் கோபம் வருகிறது. இல்லாவிட்டால் ஆயிரம் சொன்னாலும் நான் கோப மடைய மாட்டேன்'' என்றாள்.

அகோரமயி கண்ணைத் துடைத் துக் கொண்டு, "இது எனக்குத் தெரியாதா? ஒவ்வொருவராக என்னை விட்டு எல்லோருமே போய் விட்டார்கள். நீ ஒருவள் தான் பாக்கி; நீ தான் எனது ஊன்று கோல். எனது மகனும் நீ தான்; மகளும் நீ தான். ஹாரான் துக்கத்தை உனது முகத் தைப் பார்த்துக் கொண்டு தான் பொறுத்துக் கொள்ள வேண்டி யிருக்கிறது'' என்று கூறிவிட்டு மறுபடியும் அழத் தொடங்கினாள். ஆனால் கிரணமயி, முந்திய தொன் றையும் மறக்கவில்லை. "அம்மா, உமக்காவது ஒரு உதவி இருக் கிறது. எனக்கு என்ன இருக் கிறது? உண்மையிலேயே அம் மாதிரி சம்பவம் ஏற்பட்டு விட் டால் மனதைக் கல்லாக்கிக் கொள்வதைத் தவிர வேறு என்ன வழி இருக்கிறது. இதையெல்லாம் நாம் என் முன் கூட்டியே யோ சிக்க வேண்டும்?'' என்றான்

மருமகளின் பேச்சு இனிமை யாக இல்லாவிட்டாலும் அதி லுள்ள பரிகாசத்தை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை.

"இனி அம்மாதிரி சந்தர்ப்பம் ஏற்படுவது ஒன்றும் நெடுந் தூரத்தில் இல்லையே, அம்மா! உபேந்திரன் அழைத்து வந்த டாக்டரே நம்பிக்கை இல்லை என்று கூறி விட்டானே. உபேந் திரன் இந்தச் சமயத்தில் வந்து சேராதிருந்தால் நம் கதி என்ன வது?'' என்றாள்.

மருமகள் பேசாமல் கேட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்து

அகோரமயி மேலும், "அவனைக் குழந்தையிலிருந்தே தெரியும். நோவாக் காலியில் ஹாராணும், உபேந்திரனும் சகோதரர்கள் போல் என்னிடம் வருவார்கள். அப்போதிருந்து அவன் என்னை சின்னம்மா என்றுதான் அழைத்து வருகிறான். தந்தையைப் போலத் தான் இவனும் நல்ல குணமுடையவன். அன்று நான் அழுவதைப் பார்த்து, "சின்னம்மா, என்னை ஹாராணுக்கு இளையவன் என்றே நினைத்துக் கொள். இதை விட அதிகம் ஒன்றும் நான் சொல்லப் போவதில்லை" என்றான். அதற்கு நான், அப்பா, நான் உயிரோடிருக்கும் வரையிலும் என்னைக் கங்கைக் கரையில் ஏதாவதொரு இடத்தில் வைத்து விடு. கடைசியில் நானும் கங்கா தேவியுடன் ஐக்கியமாகி விடுகிறேன் என்றேன்" என்றாள்.

அவள் வேறு அதிகமாக ஒன்றும் சொல்லாமல் துக்கத்துடன் அழுதாள். கிரணமயி மௌனமாக உட்கார்ந்து கொண்டிருந்தாள்; ஒன்றும் பேசவே இல்லை. அவள் சிறிது நேரம் அழுது விட்டு, "என் மனதில் சதா இது தான் தோன்றிக் கொண்டேயிருக்கிறது. உபேந்திரன் வராதிருந்தால்............ அம்மா, கீழே யாரோ கூப்பிடுகிறார்கள் போலிருக்கிறது போய்ப் பாரு" என்றாள்.

"வேலைக்காரி கீழே தான் பாத்திரம் கழுவிக் கொண்டிருக்கிறாள். யாராவது வந்தால் கதவைத் திறந்து விடுவாள்" என்றாள்.

"இல்லை, இல்லை! நீயே போ. வேலைக்காரி வேலையாக இருக்கும் போது ஒன்றையும் கவனிக்க மாட்டாள்."

கிரணமயி ஒன்றும் அவசரப்படாமல், "எனக்குக் கூட வேலை இருக்கிறது. சமையல் செய்ய..."

அகோரமயி திடீரெனக் கோபத்துடன், "சமையல் எங்கும் ஓடிப் போகாதடி, அம்மா? உனக்கு ஒன்றுமே தெரிவதில்லையே. யார் இல்லா விட்டால்........."

கிரணமயி எழுந்து நின்று கொண்டு, "எனக்குத் தெரிய வேண்டியதில்லை. எல்லோரும் போய் விட்ட பிறகு உபேந்திர பாபு இல்லாவிட்டால் கூட ஒன்றும் குடி முழுகிப் போய் விடாது" என்று கூறிவிட்டு சமையல் அறைக்குச் சென்று விட்டாள்.

அகோரமயி அடக்க முடியாத கோபத்துடன் தன் மருமகள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தாள். அதற்குப் பிறகு அகோரமயி வேலைக்காரியைக் கூப்பிட்டாள். அவளும் வரவில்லை. அவள் இருட்டி விடுமென்று அவசர அவசரமாகப் பாத்திரங்களை கழுவிக் கொண்டிருந்தாள். வேலைக்காரிக்கு அவள் கூப்பிட்டது ஒன்றும் காதில் விழவில்லை. அகோரமயி கோபத்துடன் எழுந்து வெளியில் வந்து, "அடி, உனக்குக் காது அடைத்து விட்டதா? உபேந்திரபாபு எவ்வளவு நேரமாக வெளியில் காத்துக் கொண்டிருக்கிறார்?" என்றாள்.

இதைக் கேட்டதும் வேலைக்காரி அவசரமாக எழுந்து கதவைத் திறந்தாள். ஆனால் யாரையும் காணோம். பிறகு இருளில் கண்ணுக்கெட்டிய தூரம் வரையிலும் வெளியில் வந்து பார்த்தாள். யாருமே தென்பட வில்லை. பிறகு அவள் உள்ளே வந்து, "யாரையுமே காணோமே" என்றாள்.

அகோரமயி விளக்கைக் கையில் எடுத்துக் கொண்டு வெளி வாயவில் வந்து நின்று கொண்டாள். பிறகு பொறுமை இழந்தவளாய் "இல்லையா? நானே காதாரக் கேட்டேனே! நீ தெருவில் சென்று பார்த்து வா" என்றாள்.

வேலைக்காரி, "பார்த்தேனே! ஒருவரையும் காணோம்" என்றாள்.

இதை அவள் நம்பவில்லை. உபேந்திரன் நேற்றுக் கூட வரவில்லை. இன்றுமா வராமல் இருப்பான்? ஆகையினால் அகோரமயி கோபத்துடன் "நீ போடி, இன்னும் ஒரு முறை நன்றாகப் பார்த்து வா" என்றாள்.

இருளில் வெளியே போக வேலைக்காரிக்கு இஷ்டமில்லை. ஆகையால் அவளும் கோபத்துடன் "பேசறது என்னம்மா ஆச்சரியமாய் இருக்கிறது? அவர்கள் கண்ணை மூடிக் கொண்டா இருளில் அலை மோதிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் போய்க் கூட்டி வர?" என்று கூறிவிட்டு, தன் காரியமாகப் போய்விட்டாள்.

அகோரமயி தனது அறைக்குள் சென்று மௌனமாகப் படுக்கையில் படுத்துக் கொண்டாள். மகனுடைய உடல் நிலையைப் பற்றி விசாரிப்பதற்குக் கூட அவளுக்கு மனம் வரவில்லை. அவள் மனத்திற்குள் ஒரே ஒரு எண்ணம் தான் அடிக்கடி எழுந்து கொண்டிருந்தது. உபேந்திரன் நேற்று ஏன் வரவில்லை? இன்றும் ஏன் வரவில்லை? இந்த ஒரே எண்ணம் தான் அவள் மனதை நோக வைத்துக் கொண்டிருந்தது. இல்லாத பொல்லாத காரணங்களையெல்லாம் கற்பித்துக் கொண்டாள். 'அவன் கல்கத்தா வாசியல்ல, அவனுக்கு வெளியூரிலே வீடு வாசல், மனைவி மக்கள் எல்லாம் இருக்கின்றன; அங்கேயும் அவன் போகக் கூடும்.' என்று அவள் எண்ணிப்பார்க்கவேயில்லை. ஏதாவது கோபமடைந்து விட்டானோ என்று சந்தேகப் பட்டாள். இந்த சந்தேகம் தோன்றியதும் அவள் உள்ளம் பயத்தால் நடுங்கியது. மருமகளுடைய நடத்தையை இதோடு சம்பந்தப் படுத்தி தனது சந்தேகத்தை ஊர்ஜிதப் படுத்திக் கொண்டாள். பிறகு அவள் "சரி, இது தான் விஷயம். மருமகள் இப்பொழுது —" அவளால் படுத்திருக்க முடியவில்லை. எழுந்து சமையலறைப் பக்கம் சென்றாள்.

கிரணமயி எரியும் அடுப்பையே பார்த்துக் கொண்டு மௌனமாய் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் முகம் சாம்பல் படிந்திருந்தது, தலையில் முக்காடில்லை. இன்று தலைகூட வாராமல் இருந்தாள். கலைந்து கிடந்த கூந்தல் அங்கும் இங்கும் சிதறிக் கிடந்தது. முந்தாணி ஒரு புறம் தொங்கிக் கொண்டிருந்தது.

அகோரமயி நிலவு வாசற்படியருகில் நின்று கொண்டாள். இன்று அவளுக்கு ஏற்பட்ட சந்தேகத்தை உண்மையென்று மனதார ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அந்த காந்தமான முகத்திலிருந்து கிளம்பிய அக்கினிப் பொறிகளை அவளால் அறிந்து கொள்ள முடியவில்லை. இந்த முகத்திற்கு ஏதாவது ஒளி உண்டா என்பது அவளால் அறிந்து கொள்ள முடியாத விஷயம். நிஷ்களங்கமான முகம் என்று அவளால் வர்ணிக்கவும் முடியவில்லை. இந்த முகம் ரொம்ப அழகியது என்று சொல்லுவது பூரணமாக

வர்ணித்ததாகாது. இந்த அழகை அவள் இதற்கு முன் கண்டதே யில்லை. வெகு நேரம் பார்த்துக் கொண்டிருந்த பிறகு பெரு மூச்சு விட்டு, "ஆஹா! மனிதர் காலடி படும் மண்ணிலே பூக்காது பூத்த புஷ்பம் இவள்" என்று சொல்லிக் கொண்டாள்.

மாமியாரின் அந்த சத்தத்தைக் கேட்டு கிரணமயி திரும்பிப் பார்த்தாள். பிறகு அவளிடம் "அம்மா, நீங்கள் இங்கு எதற்காக வந்தீர்கள்" என்று கேட்டாள்.

மருமகளுடைய குரலைக் கேட்டு அகோரமயி ஆச்சரியமடைந்தாள். இவ்வளவு சாந்தமாகவும் கருணையாகவும் ஒரு நாளும் அவள் பேசியதே கிடையாது. ஆகையால் உடனே அவள், "தனியாகச் சமையல் செய்து கொண்டிருப்பாயே, பார்த்துப் போகலாம் என்று வந்தேன்" என்றாள்.

கிரணமயி அவளை ஏறெடுத்துப் பார்த்து விட்டு பார்வையை அடுப்புப் பக்கம் திருப்பிக் கொண்டாள். மறுபடியும் அவள் மனதிலே கோபம் தலையெடுக்க ஆரம்பித்தது. காற்றானது மலரின் வாசனையைச் சுமந்து செல்வது போல மாமியாரின் திடீர் வருகை கிரணமயின் உள்ளத்திலிருந்த அன்பைச் சுமந்து சென்றது. இது உண்மையல்ல; வஞ்சனைதான் என்பதும் அவளுக்குத் தெரியாததல்ல. ஆனால் அர்த்தமில்லாமல் சண்டையிடவும் அவளுக்குப் பிடிக்கவில்லை. இதில் அவள் மிகவும் களைத்துப் போயிருந்தாள்.

சிறிது நேரம் மௌனமாக இருந்த பிறகு அகோரமயி, "வேலைக்காரியை இங்கு அனுப்பி விட்டுப் போகட்டுமா?" என்று கேட்டாள்.

(தொடரும்)

8-NOV 1944



# சரியான முடிவு

["மாறன்"]

"ஆடையில்லா மனிதன் அரை மனிதன்" என்ற பழமொழியை உண்டாக்கின மகான், கைக்குட்டையின் மகிமையை அறியாதவரென்றே சொல்ல வேண்டியிருக்கிறது. அவர் மட்டும் கைக்குட்டையின் முக்கியத்தை அறிந்திருந்தால் "கைக்குட்டையில்லா மனிதன் கால் மனிதன்" என்று சொல்லாமல் விட்டிருப்பாரா? அதோடு விட்டு விடுவாரா அவர்? "கைக்குட்டை எழுபது!" "கைக்குட்டை மகாத்மியம்" என்னும் இரண்டு நூல்களையே இயற்றி யருளியிருப்பார். இவ்வாறெல்லாம் செய்யாதது அவருடைய குற்றமல்ல. சாக்ஷாத் கைக்குட்டையின் துரதிர்ஷ்டம்தான் இதற்குக் காரணமாக இருக்க வேண்டும்.

எத்தனையோ ஆயிரம் மைல்களுக்கப்பால் ஆகாயத்தில் அந்தரங்கமாகத் தொங்கிக் கொண்டிருக்கும் சந்திரனையும், கண்ணால் காண முடியாத மன்மதனையும், புலவர்கள் காதற் கவிகளில் கொண்டு வந்து புகுத்தியிருக்கிறார்கள். ஆனால், காதல் உண்டாவதற்கே முழுமுதற் காரணமாக இருக்கும் கைக்குட்டையை மட்டிலும் மறந்தே போய் விட்டார்கள். 'கைக்குட்டை இல்லையாகில் காதலும் இல்லை' என்று சொல்லும் படியாக, காதல் உலகத்தில் அவ்வளவு முக்கிய ஸ்தானம் வகிக்கும் கைக்குட்டையின்மீது வருங்காலக் கவிகள் ஒரு இரங்கற்பாவாவது பாடி அந்தக் குறையை நிவர்த்தி செய்வார்களென்று நம்புகிறேன்.

கைக்குட்டை, காதலுக்கு அத்தனை அவசியமா, என்று சிலர் சந்தேகப்படலாம். நான் ஒரு உதாரணம் சொன்னால் நீங்கள் எல்லோரும் நம்புவீர்கள்.

முனிசிபல் 'பார்க்' ஒன்றில் நளின சுந்தரி காதில் டோலக்குகள் ஊசலாட, இறக்கையில்லாத ஒரு மயில் போல உலாவுகிறாள். அவள் கையில் வைத்திருந்த கைக்குட்டை நழுவிக் கீழே விழுகிறது. அவள் அதைக் கவனிக்காமலே ஐந்தடி தூரம் செல்கிறாள். இதை ஒரு யுவன் பார்க்கிறான். அவன் இதயம் மலர்கிறது. உடனே குடல் தெறிக்க ஓடிவந்து கீழே கிடந்த கைக்குட்டையை எடுத்து நளின சுந்தரியின் கையில் சமர்ப்பிக்கிறான். ஒரு புன்முறுவலும் அவன் முகத்தில் மின்னுகிறது.

அந்தப் பெரிய உதவிக்காக அவள் தன் இதய பாவத்தோடு கூடிய ஒரு பெரிய வந்தனத்தைச் செலுத்துவதாகச் சொல்கிறாள்.

தான் கைக்குட்டையை எடுத்துக் கொடுத்தது ஒரு உதவி அல்ல; அது ஒரு பாக்கியம்தான், என்று யுவன் மறுக்கிறான். பேச்சு வளர்கிறது. இரு உள்ளங்களும் காதற் கடலில் நீச்சலடிக்கிறது. கடைசியாக இருவரும் வாழ்க்கைப் பாதையில் கைகோர்த்துக் கொண்டு செல்கிறார்கள். தன் காதலனிடம் தூது சென்று திரும்பிய அந்தக் கைக்குட்டையை வசீகரண சக்தி வாய்ந்த ஒரு காதல் தேவதையாகவே மதிக்கிறாள் நளின சுந்தரி.

இதை விட்டு விட்டு, எங்கள் ஊர் கலியாண ராமனின் கலியாண விஷயத்தைத் தான் எடுத்துக் கொள்வோமே!

கலியாணராமன் காதற் கதைகளைக் கரைத்துக் குடித்தவன்! ஆகையினால், பெண்ணை நேரில் பார்த்த பிறகுதான் கலியாணம் பண்ணிக் கொள்வேனென்று தகப்பனாரிடம் கண்டிப்பாகச் சொல்லி விட்டான். நவநாகரீகத்தினால் திளைத்த ஒரு பெண்ணைத் தான் அவன் மணக்க விரும்பினான்.

சென்னைப் பட்டிணத்திலேயே பிறந்து சென்னைப் பட்டிணத்திலேயே வளர்ந்த ஒரு பெண்ணை நிச்சயம் பண்ணி அதைப் போய் நேரில் பார்த்து விட்டு வரும்படி கலியாணராமனின் தகப்பனார் அவனை அனுப்பினார். பெண், முகத்திலுள்ள எலும்புக் குழிகள் தெரியாதபடி பவுடரை அள்ளி மெழுகியிருந்தாள். படித்துப் படித்து குழிவிழுந்திருந்த கண்களை மறைக்க மூக்குக் கண்ணாடியும் அணிந்திருந்தாள். சுருங்கச் சொன்னால் அந்தப் பெண் முதல் தரமான நாகரீக மோஸ்தரில்தான் கலியாணராமனின் முன் வந்து நின்றாள். ஆனால், கலியாணராமன் அவளிடம் ஒன்றும் பேசாமல் சட்டென்று அங்கிருந்து புறப்பட்டு ஊருக்கு வந்து சேர்ந்தான். தனக்கு அந்தப் பெண் நாகரீகம் இல்லாதவள், அதனால் தனக்குப் பிடிக்கவே இல்லையென்று தகப்பனாரிடம் சொல்லிவிட்டான்.

பிறகு கோணங்கிப் பட்டியில் ஒரு பெண்ணைப் போய்ப் பார்த்து வரும்படி கலியாணராமனை அனுப்பி வைத்தார்கள். கலியாணராமன் அங்கே போன அன்று அந்தப் பெண் இரண்டு பலம் மஞ்சளையும் அரைவீசம்படி விளக்கெண்ணெயையும் முகத்தில் பூசிக் குளித்திருந்தாள். ஒரு வீசம் படி விளக்கெண்ணெய் தேய்த்துத் தலை வாரிப் பின்னியிருந்தாள். நெற்றியில் காலணா (43-ம் வருஷத்துக்கு முந்தியுள்ளது) அகலத்திற்கு ஒரு குங்குமப் பொட்டும் வைத்திருந்தாள். நிமிஷத்திற்கு ஒரு தடவை மூக்கை உறிஞ்சிக் கொண்டு பத்திரகாளி சொரூபத்தில் கலியாணராமன் எதிரில் வந்து திருதிரு என்று விழித்துக் கொண்டு நின்றாள். கலியாணராமன் அந்தப் பெண்ணையே விரும்பிக் கலியாணம் செய்து கொண்டான்.

கலியாணராமன் முதல் பெண்ணை வெறுத்ததற்கும், பட்டிக் காட்டுப் பெண்ணை விரும்பி மணந்ததற்கும் காரணம் என்னவென்று நீங்கள் நினைக்கிறீர்கள்? முதல் பெண், கலியாணராமன் போயிருந்த தினத்தில் தான் தன் கைக்குட்டைகள் எல்லாவற்றையும் வெளுக்கப் போட்டிருந்தாள். நாகரீகச் சின்னமான கைக்குட்டை ஒன்று அவள் கையில் காணப்படாததைக் கவனித்த பிறகு கலியாணராமன் அவளை எப்படி விரும்புவான்?

இரண்டாவது பெண்ணுக்கு ஜலதோஷம் வந்திருந்த சமயத்தில் தான், கலியாணராமன் அவளைப் பார்க்கச் சென்றிருந்தான். அவள் கலியாணராமன் எதிரே போகும் போது மூக்கைத் துடைத்துக் கொள்வதற்காக, அவளுடைய தகப்பனார் தன் கைக்குட்டையை

நாம் அயலூருக்குப் போகிறோம். நண்பர்களுக்கும் பந்துக்களுக்கும் கடிதம் போடுவதற்காகவே நாம் அங்கு செல்வது போல எல்லோரும் "போனவுடன் கடிதம் போடு" என்று ஏழெட்டுத் தடவை வற்புறுத்தினார்கள். வீட்டில் வைத்துச்



அவள் கையில் கொடுத்திருந்தார். கையில் கைக்குட்டையைப் பார்த்தாளே இல்லையோ, கலியாணராமன் தனக்குப் பெண் பிடித்திருக்கிறதென்று உறுதி சொல்லிவிட்டான். கைக்குட்டை ஒன்றினால் ஒருவருடைய வாழ்க்கையே மாறிவிடலாமென்று தெரிகிறதல்லவா!

சொன்னது போதாதென்று ரயில்வே ஸ்டேஷனுக்கு வழியனுப்ப வந்த பிறகும் கடிதம் எழுத வேண்டியதைப் பற்றியே பேசுவார்கள். நமக்கு வேதனையாக இருக்கிறது. நல்ல வேளையாக ரயிலும் திடீரென்று புறப்படுகிறது. அப்பொழுது வேதனை எல்லாம் மாறிவிடுகிறது. அவர்களி

டமிருந்து நம்மை மட்டும் பிரித்து எடுத்துக் கொண்டு ஓடும் ரயிலுக்கு மனித உள்ளம் இல்லேயே என்று வருந்துகிருேம்! அந்த வேதனையில் பிளாட் பாரத்தில் நின்று நம்மையே பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு நம்முடைய அன்பைத் தெரிவிக்க உபயோகப்படுவது ஒரு கைக்குட்டையா? அல்லது கத்திரிக்காயா? சொல்லுங்கள்!

துப்பறியும் கில்லாடிகள் எவ்வளவு மர்மமான கொலேகளேயும் திருட்டுகளேயும் கண்டு பிடித்துவிடுகிருர்களென்று நாம் எத்தனேயோ தடவை வாசித்திருக்கிருேம்! அவர்கள் தேடும் இடங்களில் விலாசத்துடனும், இரத்தக் கறைகளுடனும் ஒரு கைக்குட்டை கிடக்கா விட்டால் அவர்கள் துப்புத் துலக்க முடியுமா? யோசித்துப் பாருங்கள்!

நாம் நாலு சிநேகிதர்களுடன் பேசிக் கொண்டிருக்கிருேம்! நமது கைகள் நம்மை யறியாமலே பக்கத்தில் கிடக்கும் காகிதத்தைக் கிழித்துக் கொண்டோ நகத்தைக் கிள்ளிக் கொண்டோ இருக்கின்றன. நமது கையில் ஒரு கைக்குட்டை மட்டும் இருந்து விட்டால்இந்த அவலக்ஷணங்களேச் செய்ய மாட்டோமல்லவா! கைக்குட்டையைச் சுருட்டலாம், பிரிக்கலாம். சுழட்டி சுழட்டி நம் மனதை அதில் லயிக்க விடலாம்! சில்க்குக் கைக்குட்டையாக இருந்தால் அதன் மூலேகளெல்லாம் வெயிலில் ஓடி வந்த நாயின் நாக்குத் தொங்குவது போல, நமது சட்டைப் பைக்கு வெளியில் தொங்கும்படி வைத்து ஜோர் பண்ணலாம்! தலேயில் கூட ஒரு கோமாளிக்கட்டுக் கட்டிக் கொள்ளலாம்!

நாடகத்தில் அயன் ஸ்திரீ பார்ட் போடும் கோகிலத் தொனி குஞ்சம்மாள் அரிச்சந்திர மயான காண்டத்தில் சந்திரமதியாக நடிக்கிருள். மரத்தடியில் சுருண்டு கிடக்கும் ரப்பர் பாம்பையும், புல்லுக்கிடையே கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டு படுத்துக் கிடக்கும் லோகிதாசனேயும் பார்க்கும் போது அவளுக்கு அடக்க முடியாத சிரிப்புத்தான் வருகிறது. அதை மறைப்பதற்குத் தோன்ருத் துணையாக உதவுவது அவள் கையிலிருக்கும் கைக்குட்டைதான். அது சிரிப்பை மறைப்பதற்கு மட்டுமல்ல, லோகிதாசன் இறந்து விட்டானென்று அவள் முகாரி ராகம் ஆலாபனே செய்யும் போது அவள் கண்களிலிருந்து கண்ணீர் அருவி பாய வேண்டும்! அதற்குத் தேவையான மிளகாய்த் தூளே மறைத்து வைத்துக்கொள்ளவும் அந்தக் கைக்குட்டை சாதகமாக இருக்கிறது.

மாமியார் தன்னேத் திட்டி விட்டாள் என்பதற்காக ஒரு நாட்டுப் பெண் நாற்காலியில் உட்கார்ந்து புடவைத் தலேப்பால் கண்ணேக் கசக்கிக் கொண்டு அழ ஆரம்பிக்கிருள். கண்ணீரும் வந்து விடுகிறது. தன் மருமகள் உடுத்தியிருக்கும் பட்டுப் புடவை முழுதும் கண்ணீரால் நனேந்து விடக் கூடாதே என்று அவளுடைய மாமியார் ஓடியே போய் ஒரு கைக்குட்டையை எடுத்து வந்து அவள் கையில் கொடுக்கிருள்! கைக்குட்டையினுல் எவ்வளவு உபயோகம் பாருங்கள்! கோணங்கிப் பட்டிப் பெண்ணேக் கலியாணம் செய்து கொண்ட கலியாணராமனின் மனேவி சமையல் செய்து கொண்டிருக்கிருள். அடுப்பிலிருந்து பானேயை இறக்க வேண்டும்! பிடித்து

இறக்குவதற்குத் துணி ஒன்றும் அகப்பட வில்லை. சட்டென்று தன் புருஷனுடைய சட்டைப் பையிலிருந்த கைக்குட்டையை எடுத்து வந்த பின் சமையல் எளிதாக முடிந்து விடுகிறது. மறு நாள் அடுப்புப் பற்ற வைப்பதற்கும் அந்தக் கைக்குட்டை பிரயோஜனமாகிறது.

தெரு மூலையில் கூட்டம் கூடியிருக்கிறது. நடுவிலிருந்து 'டம் டம்' என்று சத்தம் கேட்கிறது. அது என்னவென்று பார்ப்பதற்காக, நாம் தலையை நீட்டுகிறோம்! கொஞ்சம் நிற்கிறோம்! வித்தை காட்டிக் கொண்டிருப்பவன் நம்மைப் பார்த்து "சார், ஒரு கைக்குட்டை இருந்தால் கொடுங்கள்!" என்று கேட்கிறான். அப்போது முகத்தில் அசடு வழிய "கைக்குட்டை இல்லையே!" என்று அந்தக் கூட்டத்தில் வைத்துச் சொல்லுவது எவ்வளவு அகௌரவம்! அவ்வாறில்லாமல் உடனே சட்டைப் பையிலிருந்து, பூவேலை செய்த ஒரு அழகான கைக்குட்டையை எடுத்து அலட்சியமாக அவனிடம் நீட்டினால் எத்தனை ஜோடிக் கண்கள் நம்மை ஆவலோடு நோக்கும்!

எங்கள் ஊர் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர் கோபாலய்யர் தான் கைக்குட்டையின் முழு உபயோகத்தையும் அறிந்தவர் என்று சொல்ல வேண்டும். அவருடைய மேஜை, நாற்காலி, கரும் பலகை ஆகியவைகளைத் துடைப்பதற்கு அவருடைய கைக்குட்டை தான் கையில் வந்து நிற்கும்! சாயங்காலம் அவர் தன் வீட்டுக்குக் காய்கறி வாங்கிக் கொண்டு போவதும் அந்தக் கைக்குட்டையில்தான். அதன் மூலையில்தான் சில்லறைத் துட்டுகளை முடிந்து வைப்பார். ஞாபகத்திற்காகப் போடும் முடிச்சு ஒன்று எப்பொழுதும் மற்றொரு மூலையில் இருக்கும்! அவர் களைப்பாக இருக்கும் போது தன் கைக்குட்டையால் தான் விசிறிக் கொள்வார்! பையன்களுக்குச் சதுரம் முக்கோணம் ஆகிய உருவங்களை விளக்குவதற்கும் அந்தக் கைக்குட்டை தான் உபயோகப்படும். பள்ளிக்கூடத்தைப் பெருக்கும் துடப்பக் கட்டையிலுள்ள கயிறு அறுந்து போனால் கைக்குட்டையினால் அதைத் தற்காலிகமாகக் கட்டி வைப்பார்! அவருக்குச் சந்தோஷம் வந்து விட்டால் கைக்குட்டையில் எலி செய்து பையன்களுக்கு வேடிக்கை காட்டுவார்.

இவ்வளவு மகிமை பொருந்திய கைக்குட்டையின் அவசியத்தை உணர்ந்துதான் சோப்புக் கம்பெனிக்காரர்கள் தங்களிடம் ஒரு டஜன் சோப்பு வாங்குபவர்களுக்கு ஒரு கைக்குட்டை பரிசளிக்கிறார்கள்! அடடா! எழுதிக் கொண்டிருக்கும் போது மை கொட்டி விட்டதே! நல்ல வேளை கைக்குட்டை கையில் தான் இருக்கிறதே!

★

மனோதத்துவம்:

# திங்கள் முகம்.....

[ரா. நா]

அம்மா,

என் கடிதம் கிடைத்ததிலிருந்து நீ புழுவாய்த் துடித்திருப்பாய். உனக்கு எழுதின பிறகு "ஏன் இப்படி எழுதி அம்மாவைக் கஷ்டப் படுத்தணும்'' என்று தோன்றிற்று. எழுதியாகி விட்டது, அப்புறம் என்ன பண்ணுவது? என் அதிர்ஷ்டம் அவ்வளவு கட்டையில்லை. தேவியும் சற்று கண்ணைத் திறந்திருக்கிறாள்.

சதா அழுது கொண்டிருப்பதை நிறுத்தி ஒழிந்த நேரமெல்லாம் பகவத் பாதாரவிந்தம் நாடி அவர் புகழையே படித்தேன். பாடிவந்தேன். காலையில் தேவி பூஜை செய்து வந்தேன்.

இப்படியிருக்கையில் அவருடைய அத்தங்கா வந்தாள். லட்சுமி கடாக்ஷம் பொருந்திய முகம், துருதுருத்த நடை. அன்பு நிறைந்த உள்ளம். இருண்டிருந்த உள்ளத்தில் விளக்கேற்றி வைத்தாளம்மா!

அவளுக்கு இன்னும் கலியாணமாக வில்லை. வயது ஆகிறது. அவள் தீர்க்காயுசா மனசுக் கொத்த புருஷனைத் தேடி வாழ்க்கைப் பட சதா பிரார்த்திக்கிறேன்.

நான் ஏதோ துக்கப்படறாப் போலிருக்குதென அவள் மனசில் பட்டாப் போலிருக்கு. எனக்குத் தலைவாரி, பின்னி வைப்பாள். நல்ல புடவையை உடுத்திக்கச் சொல்லுவாள். அவரிடம் சகஜமாகப் பழகுவாள். அவள் வந்த பிறகு அவர் முகத்தில் சற்று ஒளி வீசுகிறது.

அவள் சொன்னதிலிருந்து அவர் தினம் பூ வாங்கிவருகிறார். ஒரு நாள் அவர் பூ கொண்டு வருகையில் என் கையிலேயே கொடுக்கச் சொல்லி அத்தங்கா சொன்னாள். அவர் கொடுத்தார். நானும் வாங்கினேன். அன்று அவர் முகமே மலர்ந்தது நான் பூவை வாங்கிய பின்.

அத்தங்கா பத்து நாள் இங்கிருந்தார். நான் இருக்கும் போதே அவருடன் சிரிச்சு விளையாடுவாள். நானும் ஆனந்தமாக பார்த்துக் கொண்டிருப்பேன். ஒரு புதுப் புடவையும், ரவிக்கையும் கொடுத்தேன். புதிதாக வாங்க வில்லை. நீ எனக்குக் கொடுத்தது தான். அத்தங்கா போவதற்கு முன் ஒரு நாள் விருந்து வைத்தேன்.

அவள் ஊருக்குப் போன மறுநாள் நான் வழக்கம்போல் தனியாகப் படுத்திருந்தேன். உள்ளே அவர் வந்து என்னை எழுப்பினார். யாரோ என நினைச்சு வாரிச் சுருட்டி

டிண்டு எழுந்திருந்தேன். அவர்னு தெரிந்தவுடன் வெட்கிப் போய் விலகி நின்றேன். "ஏன் நீ தூங்குகிறாய். இப்படி வா, வந்து உட்காரு" என்று அழைத்தார். லஜ்ஜை பிடிங்கித்தின்ன போய் உட்கார்ந்

என் கையை அவர் கையிலெடுத்துக்கொண்டார். கண்களில் ஒற்றிக் கொண்டார். தலை சுழன்றது. கீழே சாய்ந்து விட்டேன். பிரக்ஞை வந்தவுடன் அவர் மடியிலிருப்பதைக் கண்டேன். எழுந்

தேன். ஏதாவது கேட்டால் பழைய கதையை சொல்லலாமா என்று யோசித்தேன். அப்புறம் "என்ன அசட்டுத்தனம், மலர்ந்து வரும் பூவை கசக்கி எரிவதா" என்று நினைத்து சமாதானம் செய்து கொண்டேன்.

திருக்க முயன்றேன். அவர் விடவில்லை. நிமிர்ந்து நோக்கினேன். கண்ணீர் பெருகும் முகத்தைக் கண்டேன். "என்னை மன்னித்து விடுங்கள்" என்றேன். "என்னையல்லவா நீ மன்னிக்க வேண்டும். நான் செய்த தவறை நீ

உணர்த்தினாய். அத்தங்காவிடம் நீ நடந்து கொண்ட மாதிரி என் கண்ணைத் திறந்தது. இனி அம்மாதிரி ... ..."

"போதும், தவறு யாரும் செய்யவில்லை. காலத்தின் கோலம். என்றும் இன்று மாதிரி இருந்தால் போதும்" என்றேன்.

'அப்படியே' என்று சொல்லி மீண்டும் என் கையை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டார்.

அம்மா, இனி அவருக்கிணை யாரும் இல்லை போலிருக்கு.

அம்மா, இதுதானா வாழ்க்கை? சின்ன வயசிலே நீ சொல்லிய அத்தனை கதைகளும் இப்போது ஞாபகத்துக்கு வருகிறது. கணவனைத் தெய்வமாகத் தொழ வேணும் என்று சொன்னதெல்லாம் முன் கூட்டியே கண்ட அனுபவ வெளியீடு தானம்மா. இப்போ மனசிலே என்னவோ ஒரு ஆனந்த வெள்ளம் ஊற்றுப் போல் பொங்குகிறது. அதுதான் உன்னோடு பேசற மாதிரியே இதை எழுதுகிறேன். உனக்கு எத்தனை கஷ்டமாக இருந்திருக்கும் .... அம்மா, நீ கொடுத்த புத்தகங்களை இதற்கு முன் படிக்கத் தோன்றவே யில்லை. இப்போ அதிலெல்லாம் இன்ப வெள்ளம் தேங்கி நிக்கற மாதிரி இருக்கு. சின்னக் குழந்தைகளைக் கண்டால் பூ வைத்துத் தலைவாரிப் பின்னி முடிச்சு விடவேணும் போல் இருக்கு. பின் பக்கத்துத் தோட்டத்திலே எல்லா விதமான பூஞ்செடிகளும் வைத்துப் பயிர் பண்ணி விட்டேன். நீ வேணுமானால் பாரு.

அடுத்த தடவை நீ இங்கே வரும் போது என் கூந்தலை எத்தனை ரகப் பூக்கள் அலங்கரிக்கப் போகிறது தெரியுமா? அதே மாதிரி தான் வாழ்க்கைப் பூஞ்சோலையும். பார்க்குமிடமெல்லாம் இப்போது தாமரைத் தடாகமே தான். இந்த மனசை என்ன வென்று சொல்வது போம்மா. ஆனாலும் தேவியைத் தொழுதது வீண்போக வில்லை. குடும்பமானா துக்கத்தையும் சுகத்தையும் சரிசமமாகப் பாவிக்க வேணும்னு நீ சொல்வாய். ஆனால், சுகத்தைப் பரிபூரணமாக அனுபவிக்கிறேன். அதுவும் அவரைக் கண்டவுடன்! என்ன எழுதட்டும் போ. எழுத்துக்கு அந்த சக்தி ஏது? நீ நேரில் எல்லாம் கண் எதிரே காணப் போகிறாய். அம்மா, இன்னும் என்னவெல்லாமோ எழுத வேணும் போல் இருக்கு. ஆனால், இதோ அவர் வந்து கொண்டிருக்கிறார்!

உன்

கமலா

★

புதுக்கதை:

# வெள்ளமும் வேகமும்

[பி. மாரி செட்டி, பி, ஏ; ஆனர்ஸ்]

**சுவாமி:**

**பு**ல் வளர்ந்த மெத்தையை மாலைக் கதிரவன் தழுவிக் கொண்டிருந்தான். தென்றல் மனோகரமாய் வீசிக் கொண்டிருந்தது. அந்த இன்பத்தை நுகர்ந்த வண்ணம் சற்று தூரம் நடந்து சென்று நான் இருக்கும் ஆசிரமத்திற்கு வெளியில் சென்றேன்.

எவ்வளவு தூரம் சென்றேனோ தெரியவில்லை. அப்பொழுது பார்த்தவர்கள், பைத்தியம் என்றே என்னைக் கருதி இருக்கக் கூடும். காலில் 'ஜில்' லென்று உணர்ச்சி ஏற்பட எனக்கு நினைவு வந்தது.

நான் இருப்பது ஒரு ஓடை. அது என் ஆசிரமத்திற்குச் சுமார் ஒரு மைல் தூரத்திலிருக்கிறது. தெளிந்த நீர் "குளுகுளு" என்ற சப்தத்துடன் ஓடிக் கொண்டிருக்கிறது. அப்பொழுதுதான் சந்திரன் தனது பூரணப் பொலிவுடன் தோன்றினான். அமைதி நிரம்பிய ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தேன்.

நிலவின் ஒளியைவிட என் கற்பனை ஒளி மிக்க வீசிற்று. அவன் போகும் வேகத்தைவிட என் மனம் வேகமாய் ஓடிற்று.

நான் சந்திரனாய் இருந்தால்?... எவ்வளவு உயரத்தில் சென்று கொண்டிருப்பேன். என் வரவை எத்தனை பேர்கள் வரவேற்பார்கள். பகல் முழுவதும் உயிரைக் கொடுத்து வேலை செய்துவிட்டு இரவு வீடு திரும்பும் மக்களுக்கு எனது அமுதனைய கிரணங்களைச் சொரிந்து அவர்கள் தம் வருத்தத்தை மறந்து போகும்படி செய்து இன்ப நித்திரையில் ஆழ்த்துவேன். ஆனால் காதலர்களின் வருத்தத்தை அதிகப்படுத்துவதில் மிக்க சந்தோஷமடைவேன். நான் வரும் வரையில் என்னைப் பற்றியே நினைவாக இருப்பார்கள். நான் வந்த பிறகோ ?—ஐயய்ய, இவர்கள் செய்யும் துரோகத்திற்குப் பழி தீர்த்துக் கொள்ளத் தயங்க மாட்டேன்.........

ஆசிரமத்துக் கோயில் மணி சப்தம் கேட்டது. மாணவர்களை உணவிற்கு அழைக்கும் குரல் அது. 'விருவிரு' என்று நடந்து ஆசிரமம் சென்றேன்.

ஜன்னலிலிருந்து காற்று மெதுவாக வீசிக்கொண்டிருந்தது. படுக்கப் போகுமுன் வழக்கமாக பெற்றோரையும், இறைவனையும் தியானித்துவிட்டு பாயில் அமர்ந்தேன். சற்று நேரம் கழித்து கையைத் தலையணையாகக் கொண்டு படுத்தேன். தூக்கம் வரவில்லை.

ஜன்னலை நன்றாய்த் திறந்து வைத்தேன். நிலவொளி என் அறையில் சூழ்ந்தது. இப்பொழுது

என்தாய் என்ன செய்து கொண்டிருப்பாள்? அவளைத் தனியே எனது கிராமத்தில் விட்டு விட்டு வந்திருக்கிறேன். ஒரே பையனை என்னை மறந்து எப்படி இருப்பாள்? அவள் செய்யும் வேலையின் கஷ்டத்தில் பகலில் ஒருவாறு மறக்கக்கூடும். இரவிலோ? என்னையும் அப்பாவையும் சிந்தித்த வண்ணமாகவே இருப்பாள். அவளுக்கு உலகமெல்லாம் நானும் அப்பாவுந்தான்.

அப்பாவுக்கு எங்கள் மீது ஞாபகம் இல்லை போலிருக்கிறது. பர்மாவிலிருந்து சொந்த ஊருக்கு நாங்கள் திரும்பி வரும் பொழுது சொன்னர்: "சுவாமியை நீ நன்ருய் வளர்த்து வா. உனக்கு அடிக்கடி லெட்டர் எழுதுகிறேன் பர்மாவில் நான் சம்பாதித்த சொத்துக்கள் வீணுய்ப் போயிற்று. வெறுங்கையுடன் வீடு திரும்ப எனக்கு மனம் இல்லை. கல்கத்தாவிற்கு அருகில் ஜாம்ஷட்பூரில் எனக்கு ராமச்சந்திரன் என்ற நண்பன் இருக்கிருன். பணம் சம்பாதித்துக் கொண்ட பிறகு வருகிறேன். பையனை நன்ருகப் படிக்கவை" என்று. நான் அப்பொழுது சிறுவன். எட்டு அல்லது பத்து வருஷமிருக்கும்.

தாயின் அன்பு தந்தைக்கில்லை என்பது உண்மைதான். இப்பொழுது என் தாயே என் தந்தையாகவும் எனக்குப் படிக்க உதவி செய்து வருகிருள். அம்மாவுக்கு இப்பொழுது முன்போல் வருமானமில்லை. அதனல் ரொம்பவும் கஷ்டப்படுகிருள். இன்னும் கொஞ்ச நாட்களுக்குள் நான் எனது படிப்பை முடித்துக் கொண்டு என் தாயைக் கஷ்டத்தினின்று விடுதலை செய்வேன். தாய்தான் குழந்தையைப் பெற்றது முதல் அதன் நலனுக்காகவே பாடுபடுகிருள். ஆனல் பையனே?......

அதிகாலையில் பறவைகளின் சங்கீதம் என்னைத் தூக்கத்தினின்றும் எழுப்பிற்று. தினந்தோறும் என்னை எழுப்புவது பறவைகள் தான். இவைகளுக்குத்தான் என் மீது எவ்வளவு அக்கரை! நான் காலைக்கடன்களை முடித்துக் கொண்டு அறைக்குத் திரும்பும் பொழுது ஜன்னலின் வழியாக சூரியன் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

எனது ஆசிரமத்தின் ஆண்டு விழாவிற்கு இன்னும் ஒரு வாரந் தான் இருக்கிறது. இவ்வருடம் புதிய நிகழ்ச்சிகள் பல இருக்க வேண்டும். தலைவர் என்னை சிரத்தை எடுத்துக் கொண்டு பாடுபடச் சொல்கிருர்.

சென்ற வாரப் பிரசங்கத்தில் சரஸ்வதி அம்மையார் நடனக் கலை பற்றிக் கூறினர்கள். நமது விழாவுக்கு அவர்கள் பள்ளியில் நடனம் பயிலும் சிறு பெண்களைக் கொண்டு நாட்டியம் ஏற்படுத்த வேண்டுவது அவசியம். நல்ல பிரசங்கம் ஒன்று வேண்டும். ராமானந்த சுவாமிகளுக்கு கடிதம் எழுதி அவர் விருப்பத்தை அறிய வேண்டும்.

மாலையில் உலாவச் சென்றேன். மாமரக்குயில் எவ்வளவு இனிமையாய்க் கூவுகிறது. தன் பேடையுடன் கொஞ்சிக் கொண்டிருக்கிறது போலும்! பின்னல் ஏதோ சப்தம் கேட்டது.

ஆம்! ஒரு பெண் ஓடையிலிருந்து நீர் எடுத்துக் கொண்டிருக்கிருள். நான் இருப்பது அவளுக்குத் தெரியவில்லை. தெரிந்திருந்தால் சிறுமியைப் போல

குடத்துடன் விளையாடிக் கொண்டிருப்பாளோ? மலர்ந்த புஷ்பத்தைப் போலிருக்கிறது அவள் முகம். மறையும் கதிரவன் தனது தங்கநிறக் கதிர்களால் அவள் மேனிக்கு மெருகு கொடுத்து விட்டுச் சென்றுன். குளிர்ந்த காற்று அவளை அணைத்துச் சென்றது.

திடீரென்று குடத்தை எடுத்துக் கொண்டு திரும்பும் போது என்னைப் பார்த்துத் திடுக்கிட்டாள். நாணம் என்ற போர்வையை அணிந்து குடம் கீழே விழுந்து சுக்கல் சுக்கலாய்ப் போயிற்று. குடத்து நீர் வழிந்து திரும்பவும் ஓடையில் கலந்து கொண்டது. ஆனுல் அவள் கண்களிலோ ஒரு சொட்டுத் தண்ணீர்கூட தோன்றவில்லை.

அதனுல் எதற்காக அவளைத் தேற்ற வேண்டும் என்று நினைத்தேன். மறு கணம் மின்னல் மறைவது போல விருவிருவென்று நடந்து சென்று மறைந்தாள். என்னை வழியில் எல்லாம் சபித்துக் கொண்டு செல்வாளோ என்னவோ? செல்லட்டும். ஆனுல் யார் குடத்தைக் கீழே போடச் சொன்னது?

இருட்டின பிறகு ஆசிரமம் திரும்பினேன். கலையிழந்த சந்திரன் போல என்மனம் ஒளியிழந்து இருந்தது. குருடன் ஒருவன் திடீரென்று இரண்டு கண்களும் ஒளி பெற்று மறுகணம் இழந்தது போன்ற நிலைமையை அடைந்தேன்.

மறுநாட்காலையில் சரஸ்வதி அம்மையாரிடம் சென்று ஆசிரமத்து ஆண்டு விழாவைப் பற்றிக் கூறினேன். அவர்கள் நடனத்தில் தேர்ச்சி பெற்ற சிறுமியை அனுப்புவதாக வாக்களித்தார்கள்.

* * *

## அநசூயா:

குடம் உடைந்த பொழுது என்ன நினைத்துக் கொண்டிருப்பார். அவர் உருவம் என் மனதை விட்டு அகலவேயில்லை. சாந்த மிக்க அவருடைய கண்கள் என்னை மலர வைக்கின்றன. அருள் ஒளி வீசும் அவரது முகம் சூரியனையும் தோற்கடித்து விடும். ஆனுல் அவர் யார்? எங்கிருக்கிறுர்? இவைகளை விசாரித்தறிய என் மனம் தூண்டுகிறது. என் போன்ற யுவதி ஒருத்தி இங்ஙனம் விசாரிக்கப் புகுந்தால்?......

"அக்கா," என்று கூப்பிட்டுக் கொண்டு மான் போல் ஓடி வந்தாள் கமலா. இவள் என் தங்கை. என் மீது அவளுக்கு அளவில்லாத பிரியம். தாயை இழந்த பிறகு நானே இவளுக்கு எல்லாம்.

கமலா என் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். என் கண்களில் நீர் ததும்பிற்று. கமலாவைப் பெற்ற ஒரு வருஷத்திற்குள் என் அன்னை இறந்தாள். தாயின் கைகளால் அமுதுண்ணும் பாக்கியத்தை என் கமலா பெறவில்லை. அன்னை அன்பொழுகும் சொற்களால் கூப்பிட அவள் கொடுத்து வைக்கவில்லை. சிறு உள்ளம் தாயின் ஆதரவு இன்றி வளர்ந்தது.

கமலா பார்க்காத வண்ணம் கண்களைத் துடைத்துக் கொண்டேன். அவளுடைய சந்தோஷம் எல்லை கடந்திருந்தது. அவள் முகம் அப்பொழுது மலர்ந்த ரோஜா மலர் போன்றிருந்தது.

"அக்கா, நான் ஞாயிறன்று நாட்டியம் ஆட வேண்டும். பிருந்தாவன ஆசிரமத்தில் ஆண்டுவிழாவாம். உபாத்தியாயினி என்னைத்தான் பொறுக்கி எடுத்திருக்கிருள். நீ எனக்குப் புது நடனம் ஒன்று சொல்லிக் கொடுக்கிருயோ, இல்லையோ, சொல்லடி' என்று ஆசை ததும்பக் கேட்டாள்.

எனக்கோ ஆச்சரியம் மேலிட்டது. எழெட்டு வயதுக்கு மேற்படாத இவள் நான் சொல்லித் தந்த நடனக்கலையை எவ்வளவு ஆசையுடன் கற்றிருக்கிருள். நான் வீணையை எடுத்து மீட்டிக் கொள்ள 'ஜல்ஜல்' என்ற சலங்கை ஒலியுடன் இணைந்து விடும்.

இன்னும் மூன்று நாட்கள் தான் இருக்கின்றன. கமலா என்னைத் தினமும் தொந்தரவு செய்கிருள். இன்றைய தினம் மாலை நேரத்தில் அவளுக்கு சொல்லித்தர வேண்டும். நடனத்தில் சிறப்படைந்து அவள் பெயர் எதிர்காலத்தில் பிரகாசிக்கும். இதைப் பார்க்க என் அன்னை இருந்தால்!......

மறுநாள் கமலா பின் தொடர சரஸ்வதி அம்மையார் என் வீட்டிற்கு வந்தார்கள். "அநுசூயா, கமலாவுக்கு நாட்டியம் நன்ருக வருகிறது. நீயும் பக்கத்திலிருந்து வீணை வாசித்தால் தான் நன்ருக ஆடுவேன் என்கிருள். நான் அவளை ஆண்டு விழாவுக்கு அனுப்புவ்தாக ஒப்புக்கொண்டு விட்டேன். நீயும் அன்று கமலாவுடன் தவருமல் வா." என்று வற்புறுத்தினர்கள்.

"தங்களிஷ்டப்படி வருகிறேன் அம்மா" என்று கூறிவிட்டேன்.

நான் ஏன் ஒப்புக் கொண்டேன் என்று அவர்கள் சென்ற பிறகு தான் உணர்ந்தேன். என் தந்தை இதை அறிந்தாராளுல் அவர் உள்ளம் ஒருக்காலும் சம்மதிக்காது. கமலா சிறுமி. அவள் சென்ருல் என்ன? ஆனல் எனக்கு?

அப்பாவுக்கு நாங்கள் செய்யும் எதுவும் பிடிக்காது. வீணை வாசிப்பும் அவர் காதில் ஏற்காது. எப்படி ஏற்கும்? பண ஆசை பிடித்த அவருக்கு எப்பொழுது பார்த்தாலும் வியாபார நோக்கமே. ஏன் இப்படி பைத்தியம் பிடித்து அலைகிருரோ தெரியவில்லை. எனக்கு அப்பாவின் மீது பயம் அதிகம். கமலாவுக்கோ கேட்க வேண்டியதில்லை. ஒவ்வொரு சமயம் கமலாவையும் பிடித்துத் திட்டுவார். நான் குறுக்கே சென்ருல் எனக்கும் திட்டுக் கிடைக்கும்.

நான் கற்றுக் கொடுத்த பிறகு வீணையை எடுத்துக் கொண்டேன். கமலா ஆட ஆரம்பித்தாள். என் வீணை ஒலி அவள் சலங்கை சப்தத்துடன் ஒன்றுபட்டிருந்தது. மெய் மறந்து நாட்டியத்தில் அவள் ஈடுபட்டிருந்தாள். வீணை தன் இனிய நாதத்தால் என்னைக் கவர்ந்திருந்தது.

'தடா'லென்று கதவு திறந்த சப்தம் கேட்டது. வீணை கையிலிருந்து நழுவிற்று. கீழே விழப்போன வீணையைப் பிடித்துக் கொண்டேன். கமலாவும் என் பின்னல் வந்து ஒளிந்து கொண்டாள்.

வேறு ஒன்றுமில்லை, அப்பா தான் என் முன்னல் நின்று கொண்டிருக்கிருர்.

"ஏது, வரவர ரொம்பவும் மீறிவிட்டீர்கள் போலிருக்கிறதே!

அநுசூயா, உனக்கு எத்தனை தரம் சொன்னாலும் நீ கவனிப்பது கிடையாது. கமலாவைக் கெடுப்பது நீ தான். இந்த நேரத்தில் இப்படி வருவது ஒன்றும் தெரியாமல் ஆடிக் கொண்டிருந்தால்'' என்று கர்ஜித்தார்.

கமலாவின் கண்களில் நீர் துளிர்த்தது. முகங் குப்புற என் மடிமீது விழுந்து அழுதாள்.

"அழவேண்டாம் கண்ணே! அப்பா கோபத்தில் இன்று திட்டியிருக்கிறார். கவலைப்படாதே'' என்று தேற்றினேன்.

* * *

இன்று சனிக்கிழமை. அப்பா வியாபார விஷயமாய் ஊருக்குப் போகிறார். திரும்பிவர நாலைந்து நாட்கள் ஆகும். நல்லகாலம்! அவரிடம் அனுமதி கேட்டு திட்டுப் பெற்றுக் கொண்டு போவதைக் காட்டிலும் அவரைக் கேட்காமலே செல்வது நல்லது.

"கமலா''

"அக்கா''

"நாளைக்கு நானும் வருகிறேன்.''

அவளுக்கென்ன் அவ்வளவு மகிழ்ச்சி பொங்கிற்று! உலகத்திலுள்ள சந்தோஷம் எல்லாம் திரண்டு வந்து அவள் முகத்தில் பிரதிபலித்தது போலிருந்தது. என்னை மறந்து அவளைத் தழுவிக் கொண்டேன்.

மறுநாள் காவற்காரனிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டோம் ஆசிரமத்திற்கு.

என்ன அற்புதமாக சிங்காரித்திருக்கிறார்கள்! பிருந்தாவனத்தில் ஒரு பிருந்தாவன மேற்படுத்தியிருக்கிறார்கள். தேவர்கள் வந்தாலும் வெட்கி ஓடிப்போக வேண்டும். அழகு என்பது இயற்கையாக அமைந்தாலும் அதை மெருகு கொடுக்க செயற்கை அழகும் வேண்டியிருக்கிறது!

முதலில் வரவேற்புத் தலைவர் முன்னுரை. ராமானந்த சுவாமிகள் வரவில்லையாம். அதற்குப் பதில் மாணவர் ஒருவர்தான் பேசப் போவதாகக் காணப்படுகிறது.

நடனம் ஆரம்பமாயிற்று. நான் கமலாவிற்குப் பின்னால் எனது வீணையுடன் உட்கார்ந்து கொண்டேன். சுமார் ஒரு மணி நேரமாக கமலா பொழுது போவது தெரியாமல் ஆடினாள். நடனம் முடிந்தபிறகு விழாவிற் கலந்து கொண்டவர்களின் கர கோஷம் எத்திக்கும் முழங்கிற்று. சிற்றுண்டிக்குப்பின் பிரசங்கம். மாணவர்தானே பிரசங்கி. என்ன விசேஷம் இருக்குமென்று நினைத்தது என் உள்ளம்.

தலைவருக்குப்பின் அதோ நிற்கிறாரே பிரசங்கி!..............என் மனம் துணுக்குற்றது. ஓடையில் சந்தித்த அவரே பேசப் போகிறவர். இருட்டில் தடுமாறிக் கொண்டு நடப்பவனுக்கு வெளிச்சம் காண்பித்து உதவுவது போலிருந்தது அவரைக் கண்ட எனக்கு.

அவர் பேசினார் என்று சொல்வது அவ்வளவு பொருந்தாது. தன்னுடைய உள்ளத்தில் பொங்கும் உணர்ச்சி வெள்ளத்தை அல்லவா வெளியே கொட்டிக் கொண்டிருக்கிறார். நீரோட்டம் போன்று அவர் பேச்சு தங்கு தடையின்றி ஓடுகிறது. அம்மம்ம! எத்தனை மேற்கோள்கள்; கம்ப

ரும் வள்ளுவரும் இவருக்கு உணவு போலும். சிறு கதைகளை இணைத்து கேட்பதற்கு இனிமையான குரலில் கம்பீரம் வாய்ந்த சொற்கள் வெளிவருவது அவருக்கேற்பட்ட ஒரு தனிச் சிறப்பு.

பிரசங்கம் முடிந்தது. எல்லோரும் வந்தனம் தெரிவித்துக் கொண்டு கிளம்பினோம். அப்பொழுதுதான் என்மனம் சுய அறிவுக்குத் திரும்பிக் கொண்டிருந்தது. அவரைப் பார்த்து 'உங்கள் பிரசங்கம் நன்றாக இருந்தது' என்று ஒரு வார்த்தை பேசிவிட்டுப் போனால்தான் என்ன? என்று கேட்டது என் உள்ளம்.

வாயிற்படி அருகில் வரும்போது அவரே என்னருகில் வந்தார். சரஸ்வதி அம்மையின் பக்கத்தில் நின்று கொண்டிருந்தேன் நான். நடனம் வெகு நன்றாய் அமைந்தது என்பதை சரஸ்வதி அம்மையாரிடம் வந்தனம் தெரிவிக்கும் போது மகிழ்ச்சி பொங்கக் கூறினர். நானும் ஏதாவது சொல்லலாமென்று நினைத்து அவரை நோக்கியதும் என் மனதில் சொல்லமுடியாத பயம் ஏற்பட்டு விட்டது. என் தங்கை பின் தொடர நான் வீடு வந்து சேர்ந்தேன்.

நாம் நினைத்த மாதிரி எதுவும் முடிவதில்லை. மாறாகவே முடிகிறது. அற்ப சந்தோஷம், மலையத்தனை துன்பம். அப்பா நாலு நாட்கள் கழித்து வருவதாகச் சொல்லிப் போனவர் இன்றைய தினம் சாயங்காலம் வந்துவிட்டார். வாசற்படியில் நின்று கொண்டே எங்களுக்கு ஆசீர்வாதம் சொன்னர்: "வீட்டில் எஜமான் நானு, நீங்களா? ஒருவருமில்லாத பொழுது வீட்டை விட்டு எப்படிப் போகலாம்'' என்று.

அன்றிரவு எனக்குச் சாப்பாடு கொள்ளவில்லை. என் படுக்கைக்குச் சென்றேன். தங்கை அதில் முன்னமே தூங்கிக் கொண்டிருந்தாள்.

**சுவாமி:**

அவள் பெயர் அநுசூயா என்று சொல்லிக் கொண்டார்கள். நடனத்தைவிட நான் ரசித்தது வீணகானம் என்பது என் உள்ளத்திற்கல்லவா தெரியும். ஆம்! அவள் வீணையின் நரம்புகளை இசைக்கவில்லை. என் உள்ளத்தையல்லவோ மீட்டிக் கொண்டிருந்தாள்.

அன்றைய தினம் ஓடையில் அவளைப் பார்த்தபொழுது இவ்வளவு பிரமாதமாய் வீணைவாசிக்கத் தெரியும் என்று நினைக்கவில்லை. அழகும், இருக்கும் இடத்தில் இருந்தால் அல்லவா சோபிக்கிறது? வீணைக்கலையும் அழகில் சிறந்த அவளுக்கு ஒரு தனி மெருகைக் கொடுக்கிறது.

அவள் உருவம் என் மனத்தை விட்டு அகலவேயில்லை. என் மனக்கண்ணாடியில் அவள் அழகிய பிம்பம் ஒளி வீசிக்கொண்டிருந்தது.

சாயங்கால வேளையில் ஓடைக்குச் சென்றேன். அவள் வருவாள் என்று எதிர்பார்த்துத்தான். பகலவனைக்காணத் துடித்துக் கொண்டிருக்கும் மலர்கள் போலிருந்தது என் மனம். அவள் வந்த பிறகு என் மனத்தைத் திறந்து அவளுக்குக் காண்பிப்பதாக எண்ணியிருக்கிறேன்.

எல்லாம் பொறுத்திருந்து பார்க்கலாம் மனமே பொறு!

**(அடுத்த இதழில் முடியும்)**

# கலைக் கோயில்

சுவாமி சுத்தானந்த பாரதியார்

வாழ்க்கை இருவினைக்களன்: அதில் இன்ப துன்ப அலைகள் வீசிக்கொண்டேயிருக்கும். ஒவ்வொரு நொடியிலும் மனித மனம் இரு விகாரமாக விளையாடுகிறது. அந்த விளையாட்டின் முழுத்தீவிரமும் காளிதாஸ் வீட்டில் காண்கிறோம்.

இரவில் நீண்ட நேரம் பைரவிக் கூத்து நடந்து ஒருவாறு எல்லாரும் கண்ணயர்ந்தனர். காளிதாஸுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. ஏன்? தனக்குப் போட்டியாக வந்த மதன்பாபுமேல் அவனுக்கு அடங்காக் கோபம்; அவன் பணம் வேறு பையுடன் தந்து பிஜிலியை வசப்படுத்திக் கொண்டான். ஆளும் கட்டு மஸ்தாயிருக்கிறான்; நடு வயது. இந்தப் பெண்ணை நம்பியே காளிதாஸ் பெரிய பெரிய யோசனைகள் செய்திருந்தான். பைரவியின் சக்தியெல்லாம் மந்திரபலத்தால் அவளிடம் ஏற்றி அவளையே பராசக்தியாக்கி தாந்திர யோகத்தை இக்கலியுகத்தில் மறுபடியும் பரப்பி மனித சமுதாயத்திற்கே மகத்தான சேவை செய்யக்கருதினான். தனது நினைப்பு பாழானது! நம்பிக்கையில் மண் விழுந்தது. காளிதாஸினால் இதைச் சகிக்க முடியவில்லை. உலகில் நட்பிலும் ஒரு தீமையுண்டு; மிகவும் நெருங்கிப் பழகிய நட்பு சூடேறிய சிம்னி போலாகிவிடும். அதில் ஒரு துளி நீர் பட்டால் பட்டென்று வெடித்துப் போகும்; அப்படியே காளிதாஸ் உள்ளமும் ஆனது. சில நாட்களாகவே பிஜிலி அவனை அலட்சியம் செய்து வந்தாள். காரணம்? காளிதாஸ் இருவரை மணந்தான்; பஞ்சாக்னி தபஸ் என்று அவர்களுடன் மூன்று பேரைச் சேர்த்துக் கொண்டான். தபஸின் பலன் அவனுக்குக் காசநோய் கண்டது; உடம்பு மெலிந்தது; முகத்திலும் காலதேவி கோடு போட்டு விட்டாள். அவன் முன் கோபமும் ஊழிப்புயல் மாதிரிதான். கோபம் வந்தால் அவனே காளியாய் விடுவான். அவன் முன்போலப் பணமும் தாராளமாகத் தருவதில்லை; கணக்குப் பார்க்கத் தொடங்கினான்; பைரவி வட்டத்தில் வரும்படி தேடவும் விரும்பினான்; அதற்காகக் காணிக்கைப் பெட்டி வைத்தான். பணம் தருவோர் எந்தப் பெண்ணிடமும் தராது உண்டியலில் போட வேண்டும் என்று உத்தரவிட்டான். இரவில் மதன் பாபு தந்த இலட்ச ரூபாய் பைரவி உண்டியலிற் சேர வேண்டும் என்று குடி வெறியில் கூப்பாடு போட்டான். பிஜிலியைக் கண்டபடி திட்டினான். அதனால் இரவு ஒரு மணி வரையில்

பைரவி வட்டம் சக்களத்திச் சண்டை வட்டமானது — ரகளை தான்.

விட்டேனு பார் என்று காளிதாஸ் "ஓம் க்லீம் ஹும் ஹூம் ஜய பைரவி" என்ற மந்திரத்தை ஜபமாலையில் உருட்டித் தனது பஞ்சாக்னிகளைத் தழுவிக்கொண்டு "வந்துவிட்டது சக்தி" என்முன். பைரவி கையில் இருந்த வாளை எடுத்துக்கொண்டான். கோபாக்னியுடன் பிஜிலி அறைக்குச் சென்முன். கதவைத் தட்டினுன். யாரது என்று ஆண் குரல் கேட்டது — மதன் பாபு பிஜிலியுடன் இருந்தான். "ஐயோ என் குடி கெட்டதே; ராஸ்கல், திறகதவை. உன்னை பைரவிக்குப் பலி வைக்கிறேன்" என்று காளிதாஸ் கூச்சலிட்டான். கூச்சலைக் கேட்டு அடுத்த அறையிலிருந்த அந்த உல்லாச ஜோடிகள் வெளியே வந்தனர். அவர்கள் பிஜிலியின் ஆட்களே; அவர்களை வாசகர் பின்பு அறிந்து கொள்வார்கள். உல்லாச வாலிபன், காளிதாஸின் குணமறிந்தவன்! மனமும் அறிந்தவன். அவனை மிரட்டவும் தந்திரமறிந்தவன்! பலே எத்தன். வங்க பாஷை தெரிந்தவனுதலால் அவன் காளிதாஸ் பாபுவைச் சமாதானப் படுத்த முயன்முன்.

"பைரவி தங்களிடம் வெகு உக்கிரமாயிருக்கிருளே."

"ஆமாம்; இரண்டு பலி கேட்கிருள்."

"மேகபலியா?"

"நரபலி."

"பைரவி நரபலி கேட்கமாட்டாளே; எதற்கும் நாம் கொஞ்சம் ஜபம் செய்து அவள் உத்தரவைக் கேட்டு நடப்பது நல்லது."

"என் உத்தரவே அவள் உத்தரவு; என் வீட்டில் இரண்டு அதர்மர்கள் புகுந்து பைரவி வட்டத்தையும் சட்டத்தையும் கெடுத்தார்கள். அவர்கள் இரத்தத்தை பைரவிக்கு நிவேதிப்பேனடா?"

"பாபு, ஒரு தரம் நான் என் சகியிடம் கோபித்துக் கொண்டு, இப்படியே அவளை பைரவிக்குப் பலி வைப்பதாகத் துப்பாக்கியில் தோட்டா மாட்டினேன். உடனே பைரவி அதைப் பறித்துக் கொண்டு "என்ன காரியம் செய்தாயடா" என்முள். "தாயே உனக்கு நரபலி" என்றேன். சண்டாளா! எனக்கு மேக பலி தான் வேண்டும், நர ரத்தம் கூடாது; வைத்தால் உன்னை அழித்து விடுவேன்" என்முள். உடனே என் துப்பாக்கியை என் அபிமானத் தாயான பிஜிலியிடம் தந்துவிட்டு மனைவியுடன் சமாதானமானேன்; பைரவியின் ஆணைப்படி பிஜிலி எப்போதும் இப்போதும் அதே துப்பாக்கியை வைத்துக் கொண்டிருக்கிருள்."

இதைக் கேட்டதும் காளிதாஸ் நடுங்கிப் போனுன்; வாள் தளர்ந்தது. பிறகு வாய்வெடி விட்டுப் பார்த்தான். "அவள் என்னை மோசம் செய்தாள்; பதினுயிரக் கணக்கில் பணத்தைப் பறித்துக் கொண்டு வீண் செலவு செய்தாள்; எனது நம்பிக்கையைக் கெடுத்து நேற்று வந்தவனிடம் சேர்ந்து கொண்டாள். அவன் நேற்றுக் கொடுத்த லகாரம் என்னைச் சேரவேண்டும்; சும்மாவிட மாட்டேன். இவள் இனி பைரவி வட்டத்திற்கு லாயக்கில்லை; பைரவி இவள் கண்ணைக் கெடுக்கப் போகிருள். காலை ஒடிக்கப் போகிருள். ஹும் ஹூம்" என்று குதித்தான்.

இதற்குள் "ஐயோ! கொலை! கொலைகாரன்! என்று ஒரு இடி முழக்கம்; பிஜிலி கதவைத்திறந்து ஊழிக்காளி மாதிரி வந்தாள். ஐயோ! என்னைக் கொல்லுகிருனே!'' என்றலறினுள் பிஜிலி. அங்கே உறங்கிய பைரவி வட்டமெல்லாம் இங்கே வட்டமிட்டுக் கூடி "காளிதாஸ் பாபு, இது அநியாயம்! அநியாயம்'' என்று கூச்சலிட்டது. காளிதாஸ் "ஐயோ நான் ஒரு குற்றமும் அறியேனே; இவள் பொய் சொல்லுகிருள்—'' என்று பதறினுன். "இந்த வாலிபன் சாட்சி; கேளுங்கள்'' என்ருள் பிஜிலி.

வாலிபன்: "ஐயா பைரவி மேல் சத்தியம் செய்வீரா — நீர் பிஜிலியையும் மதன் பாபுவையும் கொல்லக் கத்தி ஓங்கவில்லையென்று? அவர்களை நரபலிதரவேண்டும் என்று என்னிடந்தானே சொன்னீர்? நீரே பொய்யர்'' என்று ஆத்திரமாகப் பேசவே பிஜிலிக்கு ஒரு கட்சி சேர்ந்து விட்டது. இனி விடுவாளா?

அவள் ஒரு பெரிய வசை புராணம் ஆரம்பித்து விட்டாள். அத்தனையும் சொல்ல இடம் காணுது; நமது கதைக்கும் அவசியமில்லை. குறிப்பாக சிலதைக் கேளுங்கள்:

"ஐயா, நீங்களெல்லாரும் பைரவியின் பரம பக்தர்கள்; இந்த அயோக்கியத்தை இங்கே கூடியிருக்கும் பைரவ பைரவிகளெல்லாரும் கேளுங்கள். இந்தக் காளிதாஸ் பாபு சுத்த அயோக்கியன். பணத்திமிரும் குடிவெறியும், காம வெறியும் பிடித்த மிருகம்; கலையுண்டு நானுண்டு என்றிருந்த என்னை இவன் கெடுத்தான்; எனது நடனத்தால் இவனுக்குப் பலர் நட்புக் கிடைத்தது; பல விதவைகளும், மனைவிகளும் இவனுல் கெட்டனர். அதன் பலனை இவன் அனுபவிக்கிருன். ஒரு மனைவி போதாதென்று இரண்டு கட்டி, மேற்கொண்டு பஞ்சாக்னிதவம் என்று மூன்று பேரைக் கெடுத்தான், தவமாவது சிவமாவது; ஒன்றுமில்லை; சுத்தத் தப்பிலி; பைரவி வட்டம் என்று உங்களையெல்லாம் மயக்கிப் பணந் தட்டுகிருன்; இந்தக் கனவான் எனது நண்பர், என் அன்பர்; என்னிடம் உயிர் வைத்தவர்; அவர் எனக்கெனத் தந்தது இவருக் கெப்படிச் சேரும்? காளிதாஸரே நான் இதுகாறும் முப்பத்தைந்து பைரவி வட்டங்களுக்கு நூற்றைம்பது மணி நேரம் நடனமாடியிருக்கிறேன். கணக்கு இதோ இருக்கிறது; மணிக்கு ஆயிரம் ரூபாய் வீதம் தரவேண்டும். மரியாதையாகத் தராவிட்டால் அதற்கு மேல் இரண்டு மடங்கு வாங்க வழியுள்ளது; கவனம்! எண்ணிவையும் என் பணத்தை.

காளிதாஸ்—உள்ளே பயம்; வெளியே தான் ஆண்பிள்ளை என்ற அவமானச் சினம். "அடி பிஜிலி! என்ன மிஞ்சிப்பேசுகிருய்; என் பணத்தையெல்லாம் விழுங்கி விட்டு நடனக் கூலிக்கு அடிப் போடுகிருயா? நீ பைரவி பக்தியால் ஆடியதற்கும் கூலி பேசியதுண்டா? பைரவி சந்நிதியில் சத்தியம் செய்வாயா? வா — பைரவியிடம். அவள் உன் கண்ணைப் பிடுங்காவிட்டால் பார்...'' என்று கூச்சலிட்டார்.

"உன் பைரவி முகத்தைப் பார்த்தாலே வாந்தி வருகிறது; ஒரு பயங்கரப் பொம்மையை வைத்துக்கொண்டு பைரவியாம்; நண்பர்காள் இதெல்லாம் சுத்தப் புரட்டு வாருங்கள் காட்டுகிறேன்''

பிஜிலி ஆவேசமாக பைரவி முன் சென்றாள். தன் கட்சியிலிருந்த பாடகரைப் பாடச் சொன்னாள். மதன் பாபுவும் பாடினார். பாட்டுக்குத் தக்கபடி பிஜிலி நடனமாடினாள். கூட்டம் மயங்கிவிட்டது. பிறகு ஆவேசம் நடித்து "இந்தப் பொம்மையா பைரவி? இந்த ஜடத்தை உடைக்கிறேன்; வரச்சொல் பைரவியை" என்று பைரவி சிலையைத் தூக்கி அடித்துக் காலால் மிதித்தாள். சிலை ஐந்து துண்டானது. "உன் பஞ்சாக்கினிக்கு ஆளுக்கொன்றுதா" என்று சொன்னாள். பைரவி வாளை முறித்து வீசினாள். "பைரவி என் கண்ணைப் பிடுங்குவது தானே" என்று தீப் பொரிய காளிதாஸைப் பார்த்தாள். அவள் கட்சியைச் சேர்ந்தவர்கள் கைதட்டிச் சிரித்தனர்; காளிதாஸ் தன் கட்சி யாட்களுக்குத் தூபம் போட்டான். இரண்டு கட்சிகளுக்கும் வாய்ச் சிலம்பம் நடந்தது; பிறகு கை கலந்தனர்; இதற்கிடையே பிஜிலி, காளிதாஸ் மனைவியரைத் தூண்டி விட்டாள்; "அம்மாக்களா, நீங்கள் இரண்டு பத்தினிகள் இருக்கும் போது இந்த மனிதர் இப்படி ஊர்ப் பெண்களைக் கூட்டம் போட்டு அக்கிரமம் செய்கிறாரே; நீங்கள் எப்படிப் பொறுத்திருக்கிறீர்கள்? இப்போது இந்த அக்கிரமத்திற்குக் காரணமான பைரவியை உடைத்தெறிந்தேன்; இனி ஒழுங்காய் நடக்கும்படி இவருக்குப் புத்தி சொல்லுங்கள்" என்றாள்.

மனைவியர் நீண்டகால வயிற்றெரிச்சலை யெல்லாம் கக்கி, எரிமலைபோலக் கிளம்பினர்; காளிதாஸுக்கு அவர்களிடம் முன்பே பயம்; இப்போது நடுக்கம். பிஜிலி இவ்வளவு ரகளை பண்ணுவாளென்று அவனுக்குத் தெரியாது. அன்புக்கிளி, ஆனந்தமயில் என்று கொஞ்சிய அதே பிஜிலி, தன்னை என் உயிரே என்ற பிஜிலி இப்போது தன்னை அடியோடு கெடுத்து விட்டாளே என்று அழுது விட்டான். "என்னடா அழுகை? என் நாட்டியப் பணத்தைக் கீழே வை. இன்றேல், நாளையே கோர்ட்டில் உன்னைப் பார்ப்பேன், உன்மேல் கொலை வழக்குத் தொடருவேன்; உன் வாள் துண்டு இதோ உள்ளது—" என்னவே காளிதாஸ் அவள் காலில் விழுந்து "பிஜிலி என் மானத்தைக் காப்பாற்று, உனக்கு 50000 தந்துவிடுகிறேன்" என்றான். "கூட ஒரு லக்ஷம் வேண்டும். இன்றேல் மூன்று லகாரம் கேட்பேன். எதற்கு என்பதை உனக்குச் சொல்ல வேண்டியதில்லை" என்றாள். கூட்டம் "சபாஷ் பிஜிலி! நீயே ஆண்பிள்ளை" என்றது." காளிதாஸ் பாபு பேசாமல் ரூ 150000 எண்ணி வைத்து "பரதேவதே என்னை இத்துடன் விடு" என்று காலில் விழுந்தான். பிஜிலி "இனி இந்த அயோக்கியத் தனத்தை விட்டுவிடு" என்று தன் நண்பரிடம் ஏதோ பேசினாள். உடனே அவள் பெட்டிகள் ஷ்டேஷனுக்குச் சென்றன; ஒரு மோட்டாரில் பிஜிலி, மதன், அந்த உல்லாச வாலிபர் எல்லாரும் ஏறி வண்டி நிலையத்திற்குச் சென்றனர்.

காளிதாஸின் பைரவி வட்டம் கேலிக் கூத்தாய் முடிந்தது; இதை அவர் குட்டாகவே மூடி வைத்தும் ஊரில் செய்தி பரவி விட்டது; அவர் வெளியே முகத்தைக் காட்ட முடியாமல் வீட்டில் பதுங்கி யிருந்தார். தொழிலும் போனது; பணமும் மானமும் போனது பஞ்சாக்னிகளில்

மூன்று பேர் அவன் மேல் கோபாக்னியைக் கொட்டிச் சென்றனர்; கட்டிக் கொண்ட இரண்டு அக்னிகள் இரவும் பகலும் அவனுக்குச் சூடு கொடுத்தன. பஞ்சமகாரத்தில் வந்த வினைகளும் விடவில்லை; காசமும் கவலையும் முற்றிக் காளிதாஸ் பாபு "ஹா பைரவி என்னைக் கெடுத்தாயே" என்று ஒருதரம் அலறி உயிர் விட்டார். பிறகு நடந்தது நமக்குத் தேவையில்லை! எனினும் கல்கத்தாவில் பலர் பிஜிலிக்குப் பரம விரோதிகளானார்கள்; அவள் இனி இந்தப் பக்கம் வர முடியாதபடி அவள் மேல் பொறாமை கொண்ட நடன மாதரும் பிரசாரம் செய்தார்கள். பிஜிலியின் மோகன வடிவில் கரந்த நெருப்பைக் காட்டவே இவ்வளவு கதையும் வளர்த்தோம். இனி இரங்கூனுக்கே செல்வோம்.

## 38. புதியவேஷம்

பிஜிலிக்குக் கடவுளிடம் சுத்தமாக நம்பிக்கையில்லை; அவள் ராதாகிருஷ்ண சிவபார்வதி லீலைகளைக் கூடச் சாதாரண மனித லீலைகளாகவே நடிப்பது வழக்கம். புராணக் கதைகளைக் கிண்டல் செய்வதில் அவளுக்கு ஒரு பரவசம்; அவளுக்குத் தன் மேல் அசாத்திய மதிப்பு; என் அழகு, என் கலை, என் படிப்பு, என் இங்கிலீஷ், என் டுணுக் பாஷை, என் நடனம், என் பணம், என் புடவை, என் ரவிக்கை, என் காதலன், என் அடிமை, என் ஜோடி என்ற தினுசில் அவள் அபிமானச் செருக்கு ஆகாசத்தில் ஏறும். அவள் அழகு பார்ப்பது கூட "என் கண்ணாடி" தான். தன்னைச் சுற்றி யிருப்பதெல்லாம் தன் மயமானாலொழிய அவளுக்குத் திருப்தியிராது. தன்மயமாகாதவற்றைத் தந்திரமாகக் கைப்பற்றுவதில் அவள் கைக்காரி. அவளிடம் ஆள் போனாலும், பெண் போனாலும் திரும்பிவர முடியாது; வந்தால் உருப்படாத நிலையிலே தான் வரும்; பெண்களே உயர்வு; அவர்களே உலகம்; ஆண்கள் அடிமைகளே என்பது அவள் நடை உடை பாவனை பேச்சு வழக்கு எல்லாவற்றிலும் வெளிப்படும். அவள் தனது அபினயத் திறமையால் ஆளுக் கேற்றபடி நடிப்பாள்; அவளுக்கு நூறு கண்கள் என்றால் பொய்யன்று; முகத்திலிருப்பது இரண்டே; ஆனால் சுற்றிலும் அவள் ஒற்றர் கண்களைச் சேர்த்தே கணக்கிட வேண்டும். ஒற்றர் மூலம் அவள் எல்லாந் தெரிந்தவள் போல நடிப்பாள். அவளிடம் யார் வருவதானாலும் எழுதிக் கேட்க வேண்டும்; அவள் நாள், மணி, நிமிஷம், எல்லாம் குறித்து தன் காரியதரிசி மூலம் பதில் அனுப்புவாள்; அத்துடன் தன் ஒற்றரையும் மெல்ல அனுப்பி ஆளின் பூர்வோத்திரங்களையும் அறிந்து கொண்டு, அதற்கேற்ற வேஷம் போடுவாள். அவர்களை முதல் முறை சந்திக்கும் போது முத்துதிரும் புன்னகையால் மோகப் படுத்திவிடுவாள். அப்படியே ஆளின் இயல்பையும் அறிந்து கொள்வாள். ஒவ்வொருவரும் எந்த வகையில் திறமையாளர், எதில் சோடை என்பதைக் கணக்காக அறிந்து அதற் கேற்றபடி நடந்து தன் காரியத்தைச் சாதிப்பாள்.

எல்லாம் நடிப்புத்தான்; அவள் மனத்தின் ஆழத்தைக் காணமுடியாது; முயன்றால் ஆழியை அளந்த உப்புப் பொம்மையின் கதைதான். அவளுக்குத் துளிக் கூட தெய்வ நம்பிக்கை கிடையாது; ஆனால் சிவபக்தரைக் கண்

டால் பரம சிவபக்தை போல் நடிப்பாள்; விஷ்ணு பக்தரைக் கண்டால் தானும் ஓர் ஆண்டாள் என்பாள். அழகான பணக்கார வாலிபனானால் அவனைத் தனக்கு அரங்கநாதனுக்கிக் கொள்வாள். பணம் கரையுமட்டும் கிறிஸ்து, இஸ்லாம் பௌத்தம் ஆகிய எந்த மதத்தினர் வந்தாலும் தக்கபடி நடித்து ஆளை அடிமைப் படுத்திக் காரியத்தைச் சாதிப்பாள். காரியம் ஆன மறு நாளே புதிய ஆளை வசப்படுத்திக் கொண்டு பழைய நண்பரைத் தன் ஒற்றரிடம் கண் காட்டிவிட்டு விடுவாள்; பிறகு அவர் உள்ளே வரமுடியாது; அந்தத் தெருப்பக்கமே வரமுடியாது; அம்மா தாயே என்று கெஞ்சிக் காலில் விழுந்தாலும் பலிக்காது; வேண்டுமானல் அவளுடைய அடிமைப் பட்டாளத்தில் சேரலாம். சோறு துணி கிடைக்கும். அவள் நெஞ்சு இரும்பும் கருங்கல்லும், ஈயமும் சேர்ந்து உருக்கி வார்த்த கடினங் கொண்டது; அதில் கருணை என்பதே கிடையாது; கருணை தயவு, கனிவு எல்லாம் உதட்டிலும் முகத்திலுமே காரியமாகு மட்டும் உண்டு.

ஆனல் அவள் கை வெகு தாராளம். பணத்தை அவள் தண்ணீர் போலச் செலவிடுவாள்; சேர்த்துப் பூட்ட விரும்பமாட்டாள். தன் புகழுக்காகவும், தன்னைச் சேர்ந்தவர் சுகமாயிருக்கவும் தான் இராணி போல வாழவும் அவள் எவ்வளவு வேண்டுமானலும் அள்ளிச் சொரிவாள். அவள் பெரிய செலவுக்காரி; பெரிய வரும்படியும் தேடுகிறவள். பெரிய கைகளையும் வசப்படுத்திப் பெரிய அள்ளாக்வே அள்ளுவாள். அவளால் பல குடும்பங்கள் திவாலாகி அவள் எதிரிலேயே கண்ணீர் வடிக்கும். அவள் மனம் இரங்காது; மற்றொரு புறம் அவளுக்கே அடிமைப் பட்டு அவள் சூழ்ச்சிகளுக் கெல்லாம் உடந்தையான பல குலாமிகள் செழிப்பார்கள்.

கல்கத்தாவிலிருந்து பிஜிலி இருபது சகாக்களுடன் புறப்பட்டு டாகாவுக்கு வந்தாள். அங்கே அவளுக்கு அடிமையான ஒரு கனவான் ஆசோபசாரம் செய்து நாட்டியக் கச்சேரி வைத்தான்; அதில் நாம் ரயிலிற் கண்ட உல்லாச ஜோடிகளும் நடித்தனர். இந்த உல்லாச ஜோடிகள் பிஜிலிக்கு மிக்க அபிமானமுள்ள உறவினரே; அந்த வாலிபன் பெயர் சங்கர்; பிஜிலி தந்த பெயர் டக்கர். ஆள் மிகவும் "டக்" அடிப்பான்; அதனல் அப்பெயராம். அவன் காதலியின் பிறப்பு வளர்ப்பு மூடுமந்திரம்; பிஜிலியின் மகள் ஒரு பர்மியனுக்குப் பிறந்தவள் என்றும் பேச்சு; நாம் நேரே மூச்சுவிடமுடியாது; பிஜிலி அவளை "ரோஜா" என்றழைக்கிருள். அவளிடம் பிஜிலிக்கு உயிர்; அவளை அலங்கரித்து அழகு பார்ப்பதில் அவளுக்கு மோகம். ரோஜாவை பிஜிலி அலஹாபாதில் படிக்க வைத்தாள். அவள் மெட்ரிக் படித்த போது தான் டக்கர் பி. ஏ. படித்தான். இருவருக்கும் நட்புண்டாகக் காதலர் ஆனர்கள்; பிஜிலி தந்தி மூலம் அவர்களைச் சேர்ந்து வாழச் சொல்லிவிட்டாள். டக்கர் பெற்றோரற்ற வாலிபன்; கலைப் பித்தன்; கவியுங்கூட; ரோஜாவும் மேற்படியே. ஆதலால் இருவரும் பிஜிலியின் கலா சேவையிலேயே ஈடுபட்டு நாட்டியமும் சங்கீதமும் பழகிக் கொண்டனர். டக்கர் பக்கா எத்தன். பிஜிலி வேலைக்குச் சரியான மந்திரி;

ரோஜாவுக்கு அவன் அடிமை; பிஜிலிக்கு தாஸானு தாஸன். அவனே பிஜிலியின் காரிய தரிசி; டில்லி நடனத்திற்குப் பிறகு சில ஊர்களில் பிஜிலிக்குச் சேர வேண்டிய தொகைகளை வசூலித்துக் கொண்டு அவன் கல்கத்தாவுக்கு வந்தான். ரோஜாவும் டக்கரும் தாராளமாகக் கொஞ்சிக் குலாவுவதைப் பார்ப்பது பிஜிலிக்கு ஓர் ஆனந்தம்; இருவரையும் ஆடச் சொல்லுவாள்! பாடச் சொல்லுவாள், பிணங்கச் சொல்லுவாள், கேலி நையாண்டி செய்து கொள்ளச் சொல்லுவாள். இருவருக்கும் நாடகக் கலை பயிற்றுவாள். இவர்களைத் தவிர அவளிடம் ஆறு இளம் பெண்களும், பன்னிரண்டு ஆண்களும் எப்போதும் சுற்றியிருப்பதுண்டு; இடத்திற்கேற்றபடி இந்தத் தொகை பெருகும். அவள் எல்லாரையும் சக்கையாக வேலை வாங்குவாள்; ஆனால் அவர்கள் வயிற்றுக்குத் தாராளமாகத் தருவாள். உயர்ந்த ஆடையாபரணங்களைத் தருவாள். உதாரணமாக அவள் ரோஜாவுக்கு மட்டும் 10000 ரூபாய் நகை போட்டிருக்கிறாள். டக்கரின் மாதச் செலவு ரூ 400.

டாகாவில் ரோஜாவைப் பெற்ற பர்மியன் வந்து சேர்ந்தான். அவன் ஒரு கலைப்பித்தன். ரோஜாவிடம் அவனுக்கு உயிர். பிஜிலிக்கு அவள் பிறந்ததாக வெளியில் சொல்லக்கூடாது; ஒப்பந்தம். ஆனால் இருவருக்கும் ரோஜாவிடம் உள்ள அபிமானத்தால் ஊகிக்கலாம். அவனை அவள் "சிங் சிங்" என்று அழைப்பதுண்டு. இப்போது 55 வயதானவன்; வயதால் தளர்ந்து நோயாளியானான்; அவனுக்கு இரங்கூனில் ஒரு பெரிய மாளிகையும் நாடகக் கொட்டகையும் உண்டு. இரண்டின் வாடகையைக் கொண்டே அவன் பிழைத்தான். பெற்றோர் மனைவி மக்கள் எல்லாரும் பரிதாபகரமாகக் கொள்ளை நோயில் இறந்து போனார்கள். இப்போது அவன் ஏகாங்கி. நோய் அவனையும் சீக்கிரம் கொண்டு போய்விடும் என்பதை அறிந்துதான் பிஜிலியிடம் வந்தான். பிஜிலி, "நான் அதிக நாள் இருக்கமாட்டேன்; என் மாளிகை கொட்டகை இரண்டையும் ரோஜா பேருக்கே எழுதி வைத்திருக்கிறேன். நீங்கள் அங்கே வசிக்கலாம்; கொட்டகை உங்கள் ஆட்டத்திற்கே இருக்கட்டும்." என்றான். "சபாஷ்! சிங்சிங்" என்று பிஜிலி தன் பரிவாரங்களுடன் புறப்பட்டு விட்டாள்.

சிங்சிங் மாளிகைதான் உல்லாச மாளிகையானது. பிஜிலி சென்ற சமயம் அங்கே நாடகம் நடந்து கொண்டிருந்தது. குப்பையா தான் நாடகங்களை நடத்தினான். அவனை பிஜிலி கைக்குள் போட்டுக் கொண்டாள் — பலமாகத் தான். தன் பரிவார தேவதைகளில் கிரண என்பவளிடம் அவனைச் சிக்க வைத்துத் தன் அடிமையாக்கிக்கொண்டாள். அவனுக்கு "குப்" என்று புதுப் பெயரும் அளித்தாள். குப்குப் என்று நீராவி யந்திரம் மாதிரி அவன் வாயும் புகையும். சிங்சிங் இறந்த பிறகு உல்லாச மாளிகையை ரோஜாவிடமிருந்து பிஜிலி கைப்பற்றிக் கொண்டாள். நாடகக் கொட்டகை மேல் இலட்சரூபாய் கடனிருந்தது; அதைத் தீர்க்கத் தான் குப்பு முன்னே முத்தையா(டை) வைத் தலை தடவினான். குப்புவின் நாடகக் கூட்டத்தையும் பிஜிலி அறிந்தாள். அவள் நல்ல ஆங்கில நவீனங்களைப் படித்து,

அவற்றையே தன் பார்வையில், தமிழ், ஹிந்துஸ்தானி, பர்மியம், ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளிலும் நாடகமாக தக்கவரை எழுதச் செய்து தானே தயாரித்து அரங்கேற்றினுள். ஒவ்வொரு நாடகத்திலும் தனது நடனத்திற்குத் தக்க இடம் ஏற்படுத்திக் கொண்டாள். அவள் எதாவது செய்கிருள் என்ருல் அதன் பின்னே மதன் பாபுவும் இருப்பதாகக் கொள்ள வேண்டும்; இருவரும் ஒருவரே.

மதன் மாபு, இசை நடனம் நாடகம் மூன்றிலும் நிபுணர்; ஆங்கிலத்தில் புலி; ஹிந்துஸ்தானி வித்வான்; தமிழ் நன்ருகக் கற்றவர்; பர்மிய பாஷையை இரண்டே மாதத்தில் கற்றுக் கொண்டார். ஆதலால் பர்மியம் தவிர மற்ற பாஷைகளில் அவரே நாடகம் எழுதிப் பயிற்றி வந்தார். பிஜிலி பெண்களை மட்டும் பயிற்றி வந்தாள். இருபாலருக்கும் மதன் பாபுதான். மதன் பாபுவிடம் பிஜிலிக்கு அசாத்திய மோகம்; கடவுளிடம் அவளுக்கில்லாத நம்பிக்கை மதன் பாபுவிட முண்டு. மதன் ஆஸ்தி யெல்லாம் பிஜிலியிடமே தந்து விட்டான். அவள் என்ன செய்தாலும் அவன் தடை செய்வதில்லை. பிஜிலியின் குணம் மணிக்கொரு வகையாக மாறும்; அவள் முகம் நவரஸங்களையும் காட்டிக் கொண்டிருக்கும்—மதன் முகம் எப்போதும் சாந்தமாயிருக்கும்; அவள் பிணங்கினுலும் அவன் இணங்கிப் போவான். அவள் சினந்துரைத்தாலும் இவன் தணித்துரைப்பான். அவளுக்கு இவன் அடிமை— இரண்டு ஆண்டுகள் நாடகத்தில் அமோகமாக வரும்படி; பிஜிலியின் பர்மிய நடனத்திற்குப் பணம் வந்து குவியும்; சன்மானங்கள் குவியும்; எல்லாம் மறுநாளே செலவழிந்து போகும். தாம் தூம் என்றே அவள் நடப்பாள். நாடகம் நடனம் இரண்டின் பெயரால் அவளிடம் இளம் பெண்களும் வாலிபர் பலரும் வந்து சரண் புகுந்தனர். அப்பெண்களுக்காகப் பல வாலிபர்கள் அவள் வசம் சிக்கினர். அவர்களுக்கெல்லாம் அவள் கொழுத்த சாப்பாடு, (ஷாம்பைன் கூட) பட்டாடைகள், அலங்கார உறையுள் எல்லாம் தந்து ஆதரித்தாள். சும்மா இல்லை. வாலிபர் தமது பணத்தை யெல்லாம், சம்பாத்தியத்தை யெல்லாம் அவளிடம் கொட்டிவிட வேண்டும். பெண்கள் சம்பாதித்துத் தரவேண்டும். செலவு அபாரம். பணம் மிஞ்சுவதில்லை. இத்துடன் அவளுக்கு மற்ருெரு செலவு வந்தது; பிஜிலியிடமும் குப்புவிடமும் சிலர் பொருமை கொண்டனர். இளம் பெண்கள் விஷயமாக ஏகக் கலவரம்; ஆசை நாயகர்களிடையே போட்டி பொருமை அடிதடிகள் கிளம்பின. இன்னும் பல காரணங்களால் பிஜிலி ஒரு குண்டர் படையைத் தயாராக்க நேர்ந்தது. அவளுடன் பகைத்துக் கொண்டால் அடி தவராது; அவளைப்பற்றி மூச்சு விட்டால் ஒற்றர் மூலம் அறிந்து பேச்சில்லாமல் ஆளைச் சரி பண்ணிவிடுவாள். குண்டர் படைக்கு அவளிடம் பரம விசுவாசம்—ஊனும் கள்ளும் சர்க்கஸ் மிருகங்கள் போல். அவர்களைத் தன் ஏவலுக்குப் பழக்கி வந்தாள். பகல் வேஷ, இரா வேஷம் இரண்டும் போட்டு எப்படி வேண்டுமானுலும் அவர்கள் நடிப்பார்கள்

போதும் உல்லாச மாளிகையின் விஷயங்களை முன்பே சொல்லிவிட்டேன். மதன் பாபுதான் டுணுக்கேசர் என்பதை மனதில் வைத்துக் கொண்டு பின்னே வாருங்கள்.

(தொடரும்)

# புத்தக ஆராய்ச்சி

[பரதசேனபதீயம். கிடைக்குமிடம்: கலாக்ஷேத்திரம், அடையாறு, சென்னை. விலை ரூ. 1-4-0.]

நாட்டிய சாஸ்திரத்தை, ரத்தினச் சுருக்கமான செய்யுட்கள் மூலம் விளக்குகிறது இந்நூல். காலஞ் சென்ற தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாதையர் தேடிச் சேகரித்த அரிய தமிழ் நூல்களில் இதுவும் ஒன்று.

பரதசேனபதீயத்தை எழுதிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை. என்ருலும், அவர் பூரண கலா ஞானம் பெற்றவரென்றும், ஒரு தத்வ போதகர் என்றும் தெரிகிறது.

செய்யுள் நடையழகையும், அதில் பிணைத்துள்ள கருத்துக்களையும் பார்க்கும் போது, சிலப்பதிகார அரங்கேற்று காதையில் குறிப்பிட்டுள்ள பாடல்களையே இவர் மெருகாக மாற்றியமைத்திருக்கிருர் என்று புலப்படுகிறது. எனினும், இந்நூலில் பல புதிய விஷயங்கள் தெரிய வருகின்றன.

உதாரணமாக:

"இராவணன் மறைகளை இசையோடோதவும் எழுதாதினின்றும் மேழ்சுர மெடுத்தும் பத்தியிற் சாமம் பாடி......"

என்பதைக் குறிப்பிடலாம். இராவணன், தான் ஏழு சுரமான "சரிகமபதநி" என்னும் நாத தாதுக்களை முறையாக இசைத்ததோடல்லாமல் அவன்தான் முதலில் உண்டாக்கியவன் என்றும் தெரிகிறது.

இந்நூல், நாட்டிய ரகசியத்தை மட்டுமல்லாமல் சங்கீத முறைகளையும் நுட்பமாகக் கூறுகிறது.

பொதுவாக அருங் கலைகளைப் பற்றிய நூல்கள் தமிழில் அதிகம் வெளிவர வேண்டும். ஒரு தேசம் முன்னேற்றமடைய வேண்டுமானல் முதலில் இலக்கிய அபிவிருத்தி நிச்சயம் ஏற்பட வேணும். இலக்கியப் பற்று அதிகரிக்க அதிகரிக்க உள்ளம் பக்குவமடையும். மனம் கனிந்தால் வாழ்விலே புதிதாக ஒரு மலர்ச்சி ஏற்படும். அதைத்தான் எல்லா நாகரிக மடைந்த மக்களும் விரும்புகிருர்கள். ஆகவே கலை வளர்ச்சிக்கு அருமையான நூல்கள் முதலில் தேவை.

நாதமயமான ஆண்டவனை நடராஜ வடிவமாகக் கற்பனை செய்த தமிழ் நாட்டில், இந்நூல் பொக்கிஷம் போல வைத்து காப்பாற்றப்பட வேண்டியதாகும். இந்நூலை வெளியிட்டதற்காக ஸ்ரீமதி ருக்மணி தேவியை கலைஞர்களும், ரசிகர்களும் போற்றத்தான் வேண்டும்!

— "கம்பதாசன்"

## 7. கானல்வரி

### (தொடர்ச்சி)

### தலைவன் தோழனுக்குச் சொல்வது

### (8—10)

ஒரு நாள் தலைவன் கடற்கரைக்குப் போனான். அங்குப் புன்னை மரத்தின் பூக்கள் உதிர்ந்து கிடக்கும் அழகிய சோலை ஒன்று இருந்தது. அந்தச் சோலையில் நின்று கொண்டிருந்த செம்படவப் பெண்ணைப் பார்த்து அவள் மீது அடங்காத காதலைக் கொண்டு விட்டான். எப்பொழுது பார்த்தாலும், அவளுடைய நினைவாகவே இருக்கிறது அவனுக்கு. இந்த நிலைமையில் தன் தோழனைப் பார்த்து சொல்லுகிறான்.

“கடற்கரைச் சோலையில், நான் கண்ட பெண்ணின் முகம் முழுச் சந்திரனைப் போல் ஒளி பொருந்தியது. கயல் மீன் போன்ற அவளுடைய நீண்ட கண்கள், எனக்கு நோயை உண்டு பண்ணி விட்டன. இந்த நோய் எந்த மருந்தாலும் தீர்க்க முடியாது. அழகுத் தேமல் படர்ந்த அவளுடைய மார்புகளால் தான் எனக்கு இது தீரவேண்டும்.

“சோலையின் அருகில் கருவாடு உலர்ந்து கொண்டிருந்தன அவைகளைப் பறவைகள் தின்று விடாதபடி ஒரு தாழம் பூக் கொம்பைக் கையில் பிடித்துக் கொண்டு, அவள் பறவைகளை ஓட்டிக் கொண்டிருந்தாள். அவள் பிடித்திருந்த கொம்பில் வண்டுகளும் மொய்த்துக் கொண்டிருந்தன. சோலையில் பூக்களின் மணம் வீசிக் கொண்டிருந்தது, அந்தச் சோலை, ஒரு பெண் தெய்வம் வாழுமிடம் என்று எனக்குத் தெரியவில்லை. தெரிந்திருந்தால். அங்குச் சென்றிருக்க மாட்டேன். தவ்றி அங்கு சென்ற காரணத்தால் தான், இப்பொழுது வருந்த வேண்டியிருக்கிறது.

“சோலையின் அருகில், செம்படவர்கள் வாழும் சேரியில், கருவாட்டைப் பாதுகாப்பதற்குக் கையில் மலர்க் கொம்பைப் பிடித்து ஒரு

பெண்ணுருவாக எமன் தான் வந்திருக்க வேண்டும். குளிர்ந்த கடற் கரைச் சோலையில், கொடிய எமன் நடமாடும் என்று எனக்குத் தெரிந் திருந்தால், நான் அங்கே சென்றிருக்க மாட்டேன். அங்கே சென்ற குற்றத்தால்தான், நான் இவ்வாறு வருந்த வேண்டியிருக்கிறது'' என்று இவ்விதமாகத் தலைவன் தன் காம நோயைப் பற்றித் தோழனிடம் முறையிட்டான்.

(8)

துறைமேய் வலம்புரி, தோய்ந்து,
மணல் உழுத தோற்றம், ஆய்வான்
பொறைமலி பூம்புன்னைப் பூவுதிர்ந்து
நுண்தாது போர்க்கும் கானல்,
நிறைமதி வாண்முகத்து நேர்கயற்கண் செய்த
உறைமலி உய்யா நோய், ஊர்சுணங்கு
மென் முலையே தீர்க்கும் போலும்!

பதவுரை

[துறை மேய் வலம்புரி — கடல் துறையில் ஊருகின்ற வலம்புரிச் சங்கு; தோய்ந்து மணல் உழுத தோற்றம் — படிந்து மணலில் உழுத தோற்றத்தை; ஆய் வான் பொறை மலி பூம் புன்னை — அழகிய வான மளாவிய சுமையான மிக்க பூக்களையுடைய புன்னை மரத்தின்; பூ உதிர்ந்து — பூக்களிலிருந்து உதிர்ந்து; நுண் தாது — நுண்ணிய தாதுக் கள்; போர்க்கும் — மறைக்கின்ற; கானல் — கடற் கரைச் சோலை யில்; நிறைமதி வாள் முகத்து — முழுச் சந்திரனைப் போன்ற ஒளி பொருந்திய முகத்திலுள்ள; நேர் கயல் கண் — நீண்ட கயல் மீன் போன்ற இவள் கண்கள்; செய்த — உண்டு பண்ணின; மலி உறை உய்யா — மிகுந்த மருந்தாலும் தீர்க்க முடியாத; நோய் — என் காதல் நோயை; ஊர் சுணங்கு மென் முலையே — அழகிய தேமல் பரவிய மெல்லிய அவள் மார்பே; தீர்க்கும் போலும் — தீர்க்க வல்ல வை போலும்.

சங்கு மணலில் உழுத தோற்றமாவது, அது மணலில் ஊர்ந்து சென்றதால் விளைந்த கோடுகள். அவற்றின் மேல் புன்னை மரத்தின் தாதுக்கள் விழுந்து மூடிவிடும். அவ்வளவு பூ மலிந்த சோலை என்பது கருத்து. சங்கு உழுத கோடுகளைப் புன்னை மரத்து நுண்ணிய தாதுக் கள் உதிர்ந்து மூடி விட்டன என்றதனால், இம் மெல்லிய சாயலையுடைய தலைவி, தலைவனுடைய அறிவும் திடமுமுள்ள நெஞ்சைக் கலக்கி விட் டாள் என்னும் கருத்து, குறிப்பாகச் சொல்லப் பட்டது. உறை—மருந்து]

(9)

நிணம் கொள் புலால் உணங்கல் நின்று, புள்
ஒப்புதல் தலைக்கீடாகக்,
கணம் கொள் வண்டு ஆர்த்து உலாம் கன்னி
நறும் ஞாழல் கையில் ஏந்தி,

**மணம் கமழ் பூம்கானல் மன்னி, மற்று ஆண்டு ஓர்**
**அணங்கு உறையும் என்பது, அறியேன் ;**
**அறிவேனேல் அடையேன் மன்னே!**

199799

பதவுரை

[நிணம் கொள் புலால் உணங்கல் — கொழுப்போடு கூடிய தசைகளின் வற்றலாகிய கருவாடுகளுக்கு ; நின்று — காவலாக நின்று ; புள் ஓப்புதல் — அவற்றில் படியும் பறவைகளை ஓட்டி விடுவதை : தலைக்கீடாக — ஓர் சாக்காகக் கொண்டு ; கணம் கொள் — கூட்டமாக இருக்கின்ற ; வண்டு ஆர்த்து உலாம் — வண்டுகள் ஒலித்துத் திரிகின்ற ; கன்னி நறும் ஞாழல் — அழியாத நறுமணத்தையுடைய தாழம் பூவை ; கையில் எந்தி — கையில் பிடித்துக் கொண்டு ; மணம் கமழ் பூம் கானல் — மணம் வீசுகின்ற பூக்களையுடைய கடற்கரைச் சோலையில் ; மன்னி — நிலை பெற்று ; ஆண்டு ஓர் அணங்கு உறையும் என்பது அறியேன் — அங்கு ஒரு பெண் தெய்வம் வாழும் என்பதை நான் அறியேன் ; அறிவேனேல் — அறிந்திருந்தால் ; அடையேன் — அங்கு சென்றிருக்க மாட்டேன் ; மன் — ஆனால் தவறிச் சென்று இப்பொழுது வருந்துகிறேன்.

உணங்கல்—வற்றல்; தலைக்கீடு — பொய்யாகத் தன்மேல் ஒரு காரணத்தை இட்டுக் கொள்வது ; கன்னி — அழியாத் தன்மை ; கன்னி ஞாழல் என்பது மடல் அவிழாத புதுப் பூக்களைக் கொண்ட தாழை. மன் என்னும் சொல், நடக்க வேண்டாத ஒரு தொழில் நடந்து விட்டால், "நடந்து விட்டது ; என் செய்வது" என்ற கருத்துடைய இடங்களில் வரும்.]

(*10*)

**வலைவாழ்நர் சேரி வலை உணங்கும்**
**முன்றில் மலர்க்கை ஏந்தி,**
**விலைமீன் உணங்கல் பொருட்டாக**
**வேண்டு உருவம் கொண்டு, வேறோர்**
**கொலை வேல் நெடுங்கண் கொடுங் கூற்றம் வாழ்வது,**
**அலைநீர்த் தண் கானல் அறியேன் ;**
**அறிவேனேல் அடையேன் மன்னே!**

பதவுரை

[வலை வாழ்நர் சேரி — வலை வீசி வாழ்கின்ற வலைஞர்களின் சேரியில் ; வலை உணங்கு முன்றில் — மீன் வலை காய்கின்ற வீட்டு வாயிலில்; மலர் கை ஏந்தி — கையில் மலரை ஏந்தி ; விலை மீன் உணங்கல் பொருட்டாக — விற்கின்ற மீன் வற்றலின் (கருவாடு) காரணமாக ; வேண்டு உருவம் கொண்டு — தாம் விரும்பிய வேற்றுருவத்தோடு ; வேறோர் — வேறொரு ; கொலை வேல் நெடுங்கண் — கொல்லும் வேல் போன்ற நீண்ட கண்ணையுடைய ; கொடுங் கூற்றம் — கொடிய எமன் ; வாழ்வது — வாழ்கின்ற இடம் ; அலை நீர் தண் கானல் — அலை புரளும்

நீரையுடைய குளிர்ந்த கடற்கரைச் சோலையில்; என்று — ; அறியேன் — யான் முன்பு அறியேன் ; அறிவேனேல் — அறிந்திருப்பேனுயின் ; அடையேன் — அங்குச் சென்றிருக்க மாட்டேன்; மன் — அது தவறி மாருக முடிந்தது.]

★

## தலைவியின் அழகு

(11)

தலைவியின் அழகைத் தலைவன் பலவாருகப் புகழ்ந்து பேசுகிருன் அவளுடைய முகம் சந்திரனைப் போன்று இருக்கிறது. அவளுடைய கண்கள் கயல் மீனை எழுதினுற் போல் இருக்கின்றன. மேகத்தைப் போல் கருமையாய் இருக்கிறது அவள் கூந்தல். காமனுடைய தொழில் முழுவதையும், அவள் முகத்தில் ஓவியன் எழுதி விட்டானே என்று, எல்லோரும் வியப்படைய வேண்டும். அவளுடைய முகத்தைப் பார்த்தால், சந்திரன் தன்னை விழுங்கும் பாம்பிற்குப் பயந்து வானத்தை விட்டுச் செம்படவர் வாழும் இந்தச் சிறிய ஊருக்கு ஓடி வந்து விட்டானே என்று தோன்றுகிறது.

(12)

கடற்கரையில் அலைகள் சங்குகளை வீசி எரியும் ஆரவாரம் நிறைந்திருக்கிறது. இந்த வேடிக்கையைப் பார்த்துக் கொண்டு இரண்டு பக்கமும் மருண்டு மருண்டு ஓடுகின்ற இவள் கண்கள், கொடிய எமனுகத் தோன்றுகின்றனவே! செம்படவர்கள் வசிக்கும் இந்தச் சிறிய ஊரில், எமனே, ஒரு இளம் பெண் உருவாக வந்து விட்டானே! இது என்ன வியப்பு!

(13)

தலைவியை எமனுக்கு உவமையாகச் சொல்லி விட்டோமே என்று தலைவன் சிந்திக்கிருன். இவ்வளவு அழகான ஒரு இளம் பெண்ணை எமனுக்கு ஒப்பாகவா சொல்வது? இல்லை, இவள் ஒரு தெய்வப் பெண்ணுகவே இருக்க வேண்டும். ஒரு தேவதை தான், அழகிய கூந்தலையுடைய ஒரு பெண்வடிவு கொண்டு, புலால் மீது படுகிற பறவைகளை ஓட்டிக் கொண்டிருக்கிறது. அடும்ப மரம் அடர்ந்த இந்தக் கடற்கரைச் சோலைக்கு வருகிறவர்கள் இவளைக் கண்டால் காம நோயடைந்து தடுமாறுகிருர்கள். என்ன இந்த வியப்பு!

(11)

**கயல் எழுதி, வில் எழுதிக், கார் எழுதிக், காமன்**
**செயல் எழுதித், தீர்ந்த முகம் திங்களோ காணீர்!**
**திங்களோ காணீர்! திமில் வாழ்நர் சீறூர்க்கே,**
**அங்கண் வானத்து அரவு அஞ்சி வாழ்வதுவே.**

**பதவுரை**

[கயல் எழுதி — கயல் மீனை எழுதி; வில் எழுதி — வில்லின் உருவத்தையும் எழுதி; கார் எழுதி — கரிய மேகத்தையும் எழுதி; காமன்

செயல் எழுதி — காமனுடைய தொழிலையும் எழுதி; தீர்ந்த முகம் — ஆக எல்லா வேலைப் பாடுகளும் நிறைந்த முகம்; திங்களோ காணீர் — சந்திரனே என்று வியக்கும்படி இருக்கின்றது, இதனைக் காண்பீராக! திங்கள் — சந்திரன்; அம் கண் நேர் வானத்து — அழகிய இடத்தையுடைய நீண்ட வானத்தில்; அரவு அஞ்சி — தன்னைப் பிடிக்கும் பாம்பிற்கு அஞ்சி: திமில் வாழ்நர் — மீன் படகில் மீன் பிடித்து வாழுவோரின்; சீறூர்க்கு — சிறிய ஊரில்; வாழ்வது — வாழ்கின்றது; காணீர் — ;]

(12)

எறிவளைகள் ஆர்ப்ப இருமருங்கும் ஓடும்
 கறைகெழு வேல் கண்ணோ, கடுங் கூற்றம் காணீர்!
கடுங் கூற்றம் காணீர்! கடல் வாழ்நர் சீறூர்க்கே,
 மடம்கெழு மென் சாயல் மகளாயதுவே.

பதவுரை

[எறிவளைகள் ஆர்ப்ப — கரையில் அலைகள் வீசி எறியும் சங்குகள் ஆரவாரிப்பதைப் (பார்த்து); இரு மருங்கும் ஓடும் — இரண்டு பக்கமும் மருண்டு மருண்டு ஓடுகின்ற; கறைகெழு வேல் — இரத்தக்கறையுடைய வேலைப் போன்ற; கண்ணோ — கண்களோ; கடும் கூற்றம் — கொடிய எமனாக இருக்கின்றது; காணீர் — ; கடுங் கூற்றம் — எமனே; கடல் வாழ்நர் சீறூர்க்கு — கடலில் வலை வீசி வாழ்கின்றவர்களுடைய இச்சிறிய ஊருக்கு; மடம் கெழு — இளமை பொருந்திய; மென் சாயல் — மெல்லிய தன்மையுடைய; மகள் ஆயது — பெண்ணுருவாக வந்துள்ளது; காணீர் — ;]

(13)

புலவுமீன் வெள் உணங்கல் புள் ஓப்பிக், கண்டார்க்கு
 அலவ நோய் செய்யும் அணங்கு இதுவோ காணீர்!
அணங்கு இதுவோ காணீர்! அடும்பு அமர் தண்கானல்,
 பிணங்கு நேர் ஐம்பால் ஓர் பெண் கொண்டதுவே.

பதவுரை

[புலவு மீன் வெள் உணங்கல் — புலால் நாற்றம் வீசும் மீனின் வெள்ளை நிறமான கருவாடுகளில்; புள் ஓப்பி — படுகின்ற பறவைகளை ஓட்டி; கண்டார்க்கு — பார்ப்பவர்களுக்கு; அலவ நோய் செய்யும் — தடுமாற்றமாகிய காமநோயைச் செய்கின்ற; அணங்கு இது — தெய்வப் பெண்ணாகிய இவள்; காணீர் — ; அடும்பு அமர் தண் கானல் — அடும்ப மரம் அடர்ந்த குளிர்ந்த கடற்கரைச் சோலையில்; பிணங்கு — நெருங்கிய; நேர் ஐம்பால் — நீண்ட ஐந்து பிரிவாக்கப்பட்ட கூந்தலையுடைய; ஓர் பெண் கொண்டது — ஒரு மானிடப் பெண்ணாகி வந்திருக்கிறாள்; காணீர் — ;]

## தலைவன் தன் தோழனிடம் தன் நோய்க்குக் காரணம் கூறுவது

(14—16)

தலைவியைக் கண்டு காதல் கொண்ட தலைவன், ஒரே கவலையால் நோய் பிடித்தவன் போல் இருந்தான். இதைப் பார்த்த அவன் தோழன், உன்னை வருத்துகின்ற நோய் என்ன என்று கேட்டான். அதற்குத் தலைவன் சொல்லுகிறான்: "தோழனே, என் நோய்க்குக் காரணம் சொல்லுகிறேன் கேள். புதிய மணல் நிறைந்து நறுமணம் வீசும் மலர்ச் சோலையில், அலைகள் பரந்து ஓடுகின்ற கடலோரத்தில், சங்குகள் நிறைந்த நீர்த் துறையில், தன்னந் தனியாக ஒரு பெண் திரிந்து கொண்டிருந்தாள். அவளுடைய இனிய மொழிகளும், பருத்த வனப்பு மிக்க மார்புகளும், முழுநிலாவைப் போன்ற முகமும், வளைந்த புருவங்களும், நுண்ணிய இடையும், நறுமணம் நிறைந்த கூந்தலும், கயல் மீன்கள் போன்ற கண்களும், இளம் பற்களும் — ஆகிய இவைகள்தாம், என்னை வருந்தச் செய்து எனக்கு நோயைக் கொடுத்தன. இதுவே, எனது நோய்."

(14)

பொழில்தரு நறுமலரே, புது மணம் விரிமணலே,
பழுது அறு திருமொழியே, பணையிளவன முலையே,
முழுமதி புரை முகமே, முரி புரு வில் இணையே,
எழுது அரும் மின் இடையே எனை இடர் செய்தவையே

பதவுரை

[பொழில் தரு நறுமலரே — சோலையில் பூத்த மணம் நாறுகின்ற மலர்களும்; புது மணம் விரி மணலே — புதிய மணம் வீசிப் பரந்த மணலும்; பழுது அறு திருமொழியே — குற்றமற்ற இனிய மொழிகளும்; பணை இளவன முலையே — பருத்த வனப்பு மிக்க இளம் முலைகளும்; முழுமதி புரை முகமே — முழுநிலாப் போன்ற அழகிய முகமும்; முரி புரு வில் இணையே — வளைந்த புருவங்களாகிய இரண்டு வில்களும்; எழுது அரும் நுண் இடையே — படத்தில் எழுதுவதற்கு அரிய மெல்லிய இடையும் (ஆகிய இவ்வயே); எனை இடர் செய்தவையே — என்னை வருந்தச் செய்தவை.]

(15)

திரைவிரி தருதுறையே, திருமணல் விரி இடமே,
விரைவிரி நறுமலரே, மிடைதரு பொழிலிடமே,
மருவிரி புரிகுழலே, மதிபுரை திருமுகமே,
இருகயல் இணைவிழியே எனை இடர் செய்தவையே

பதவுரை

[திரை விரிதரு துறையே — அலைகள் பரந்தோடுகின்ற கடலின் துறைகளும்; திருமணல் விரியிடமே — அழகிய மணல் பரந்த இடமும்; விரைவிரி நறுமலரே — மணம் வீசுகின்ற நல்ல மலர்களும்; மிடைதரு பொழிலிடமே — அடர்ந்த சோலையின் இடங்களும்; மருவிரி புரி குழலே — மணம் வீசுகின்ற ஐந்து பிரிவாகப் பிரித்த கூந்தலும்; மதிபுரை திருமுகமே — திங்களைப் போன்ற அழகிய முகமும்; இரு கயல் இனை விழியே — இருகயல் மீன்களைப் போன்ற இரட்டையான விழிகளும் (ஆகிய இவையே); எனை இடர் செய்தவையே — என் உள்ளத்தை வருத்தம் செய்தவை.]

மிடைதல் — நெருங்குதல். மரு — மணம்.

(16)

வளைவளர் தரு துறையே, மணம் விரிதரு பொழிலே,
தளை அவிழ் நறுமலரே, தனியவள் திரியிடமே,
முளை வளர் இளம் நகையே, முழுமதி புரைமுகமே,
இளையவள் இணை முலையே எனை இடர் செய்தவையே.

பதவுரை

[வளைவளர் தருதுறையே — சங்குகள் நிறைகின்ற நீர்த்துறைகளும்; மணம் விரிதரு பொழிலே — நறுமணம் வீசுகின்ற சோலைகளும்; தளை அவிழ் நறுமலரே — கட்டவிழ்ந்த நறுமணம் வீசும் மலர்களும்; தனி அவள் திரி இடமே — தனியாக அவள் திரிகின்ற இடமும்; முளை வளர் இளநகையே — முளைத்து வளரும் அவள் இளம் பற்களும்; முழுமதி புரைமுகமே — முழுநிலாவைப் போன்ற அழகிய முகமும்; இளையவள் இணைமுலையே — அம்மங்கையின் ஒன்றுக்கொன்று எதிராக வளர்ந்த மார்புகளும் (ஆகிய இவையே); எனை இடர் செய்தவையே — என்னை வருந்தச் செய்தவை.]

★

## தலைவன் தலைவியிடம் தன் காதலைக் கூறுவது

(17—19)

பல தடவைகளில், கடற்கரைச் சோலையில், தலைவியைக் கண்டு, அவள் அழகில் மயங்கிய தலைவன், கடைசியில் அவளை அடைந்து விட்டான். இருவருக்கும், நல்ல நேசம் உண்டாகி விட்டது. இது வரையில், அவளை எமனென்றும், கொலைத் தொழிலுள்ள வேலென்றும் பலவிதமாக தோழனிடம் கூறினன். ஆனல், இப்பொழுது காதலியிடம் விளையாட்டாய்ப் பேசுகிருன்.

"கடலுக்குள் புகுந்து அங்கிருக்கும் மீன்களைக் கொன்று, உன் தமையன்மார் வாழ்கின்றார்கள். நீயோ, என் நெஞ்சில் புகுந்து என் உயிரை வருத்தி வாழ்கின்றாய். உன்னுடைய தந்தை கொடிய கண்களையுடைய வலையினால், மீன்களைப் பிடித்து, அவற்றின் உயிர்களைக் கொல்வான். நீயோ, நீண்ட கண்களாகிய வலையால் என்னைப் பிடித்து என் உயிரைக் கொல்லுகின்றாய். கடல் நீரைக் கிழித்து ஓடுகின்ற படகினால், உன் தமையன்மார், மீன்களின் உயிரைக் கொல்லுவார்கள். நீயோ, வளைந்த உன் புருவத்தால், என் நெஞ்சைக் கிழித்து, என்னைக் கொல்லுகிறாய். நீ செய்யும் இந்தக் கொடுமையான தொழிலுக்கு உனக்குத் தண்டனை உண்டாகும். என்னவென்றால், கட்டுக் கடங்காது பெருத்த உன் மார்பின் கனத்தைத் தாங்காமல், மின்னலைப் போன்ற உனது நுண்ணிய இடை முறிந்து விடும். ஆகையால் என்னை வருத்தாதே."

(17)

கடல்புக்கு உயிர் கொன்று வாழ்வர் நின் ஐயர் ;
உடல்புக்கு உயிர் கொன்று வாழ்வைமன் நீயும் ;
மிடல்புக்கு அடங்காத வெம் முலையோ பாரம் !
இடர்புக்கு இடுகும் இடை இழவல் கண்டாய் !

பதவுரை

[கடல் புக்கு — கடலில் சென்று ; உயிர் கொன்று — அங்குள்ள மீன்களின் உயிரைக் கொன்று ; வாழ்வர் நின் ஐயர் — உன் தமையன்மார் உயிர் வாழ்வர் ; நீயும் — ; உடல் புக்கு — என்னுடைய உடலில் புகுந்து (நெஞ்சில் புகுந்து) ; உயிர் கொன்று வாழ்வை — என் உயிரை வருத்தி வாழ்கின்றாய் ; மன் — இது இரங்கத்தக்கது ; மிடல் புக்கு அடங்காத — வலிமை புகுந்து அடங்காது வளர்ந்த ; வெம் முலையோ — விருப்பந்தரும் உனது மார்புகளோ ; பாரம் — மிகச் சுமையுடையன ; இடர்புக்கு — துன்பத்திலே உழந்து ; இடுகும் இடை — வருந்துகின்ற இடுப்பை ; இழவல் கண்டாய் — நீ இழந்து விடாதே !
வெம்மை — விருப்பம். இடுகும் — வருந்தும்.]

(18)

கொடும்கண் வலையால் உயிர் கொல்வான் நுந்தை ;
நெடும்கண் வலையால் உயிர் கொல்வைமன் நீயும் ;
வடம் கொள் முலையால் மழை மின்னும் போல,
நுடங்கி உகும் மென் நுசுப்பு இழவல் கண்டாய் ;

பதவுரை

[கொடும் கண் வலையால் — கொடிய கண்களையுடைய வலையினால் ; நுந்தை — உன் தந்தை ; உயிர் கொல்வான் — மீனின் உயிரைக் கொல்வான் ; நீயும் — ; நெடும் கண் வலையால் — நீண்ட கண்களாகிய வலை

யினால்; உயிர் கொல்வை — என்னுடைய உயிரைக் கொல்லுவாய்; மன் — இது இரங்கத்தக்கது; வடம் கொள் முலையால் — முத்தாரம் புரளும் மார்பின் சுமையால்; மழை மின்னும் போல — மேகத்தினிடத்தில் மின்னல் போல்; நுடங்கி உகும் — அசைந்து விழுகின்ற; மென் நுசுப்பு — மெல்லிய இடுப்பினை; இழவல் கண்டாய் — இழந்து விடாதே!

(19)

ஓடும் திமில் கொண்டு உயிர் கொல்வர் நின் ஐயர்;
கோடும் புருவத்துஉயிர் கொல்வை மன் நீயும்;
பீடும் பிறர் எவ்வம் பாராய்; முலை சுமந்து
வாடும் சிறு மென் மருங்கு, இழவல் கண்டாய்!

பதவுரை

[ஓடும் திமில் கொண்டு — நீரைக்கிழித்து ஓடுகின்ற மீன் படகினால்; நின் ஐயர் — உன் தமையன் மார்; உயிர் கொல்வர் — மீனின் உயிரைக் கொல்லுவர்; நீயும் — ; கோடும் புருவத்து உயிர் கொல்வை — வளைந்த உன் புருவத்தால் காண்பார் உயிரைக் கொல்லுகின்றாய்; மன் — இது இரங்கத்தக்கது; பீடும் — உனக்கு பெருமை என்பதையும்; பிறர் எவ்வம் — பிறர் துன்பத்தையும்; பாராய் — ; முலை சுமந்து வாடும் சிறு மென் மருங்கு — நின் முலைகளைச் சுமந்து வாடும் சிறிய மெல்லிய உன் இடுப்பினை; இழவல் கண்டாய் — இழந்து விடாதே!]

★

## தலைவியைப் பற்றித் தலைவன் தானே பேசிக் கொள்வது

(20—22)

கடற்கரைச் சோலையில் காதலித்த செம்படவப் பெண்ணின் மீது அடங்காத ஆசையைக் கொண்டு விட்டான் தலைவன். அவளை விட்டுப் பிரிய மனம் வரவில்லை. இந்த நிலைமையில், தனக்குத் தானே சொல்லுகின்றான்.

"பவளத்தாலாகிய உலக்கையைக் கையில் பிடித்து, வெண்ணிறமான முத்துப் போன்ற அரிசியை இவள் குத்துவாள். புலால் வீசுகின்ற கடற்கரையில், புன்னை மரத்து நிழலில், அன்ன நடை நடப்பாள். தேன் நிறைந்த நீலோற்பலப் பூவின் தண்டுகளை கையில் ஏந்திப் புலாலை உண்ணவரும் பறவையை வெருட்டுவாள். ஆனால், இவளுடைய வேல் போன்ற கண்களோ, மிகவும் கொடியன" என்று இவ்விதமாகத் தனக்குள்ளே நினைத்துக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறான்.

(20)

பவள உலக்கை கையால் பற்றித்,
தவள முத்தம் குறுவாள் செங்கண் —

தவள முத்தம் குறுவாள் செங்கண் —
குவளை அல்ல, கொடிய கொடிய ;

பதவுரை

பவள உலக்கை — பவளத்தாலாகிய உலக்கையை ; கையால் பற்றி — கையால் பிடித்துக் கொண்டு ; தவளமுத்தம் — வெண்ணிறமான முத்துக்களைப் போன்ற அரிசியை ; குறுவாள் — குத்துகின்ற இவளுடைய ; செங்கண் — சிவந்த கண்கள் ; தவளமுத்தம் குறுவாள் செங்கண் — ; குவளை அல்ல கொடிய கொடிய — குவளை மலர்கள் அல்ல, அவை கொடியன கொடியன.

(21)

புன்னை நிழல் புலவுத் திரைவாய்,
அன்னம் நடப்ப நடப்பாள் செங்கண் —
அன்னம் நடப்ப நடப்பாள் செங்கண் —
கொன்னே வெய்ய, கூற்றம் கூற்றம் :

பதவுரை

[ புன்னை நிழல் — புன்னை மரத்து நிழலில் ; புலவுத் திரைவாய் — புலால் வீசுகின்ற அலை வீசும் கரையில் ; அன்னம் நடப்ப — அன்னம் இவள் நடையைப் பார்த்து நடக்கும்படி ; நடப்பாள் — அழகாக நடக்கின்ற இவளின் ; செங்கண் — சிவந்த கண்கள் ; அன்னம் நடப்ப நடப்பாள் செங்கண் — ; கொன்னே வெய்ய — மிகவும் கொடியன; கூற்றம் கூற்றம் — எமன், எமன் ! ]

(22)

கள்வாய் நீலம் கையின் ஏந்தி ;
புள்வாய் உணங்கல் கடிவாள் செங்கண் —
புள்வாய் உணங்கல் கடிவாள் செங்கண் —
வெள்வேல் அல்ல, வெய்ய வெய்ய ;

பதவுரை

[ கள்வாய் நீலம் — தேன் வாய்ந்த நீலோற்பலப் பூவை ; கையின் ஏந்தி — கையில் பற்றிக் கொண்டு ; புள் வாய் உணங்கல் — கருவாட்டின்மீது வருகின்ற பறவையை; கடிவாள் செங்கண் — வெருட்டுபவளின் சிவந்த கண்கள் ; புள்வாய் உணங்கல் கடிவாள் செங்கண் — — ; வெள் வேல் அல்ல — வெள்ளை நிறமான வேல்கள் அல்ல ; வெய்ய வெய்ய — அவை கொடியன, கொடியன.]

★

## தலைவியின் அழகிய நடை

(23)

இப்படித் தன் காதலன் சிந்தித்துக் கொண்டிருப்பதைப் பார்த்துத் தலைவி, விளையாட்டாக ஓடுகிருள். தலைவன் அதைக் கண்டு, சொல்லுகிருன்.

"அழகிய அன்னமே! இந்தக் கடற்கரையில், ஒரு பெண் விளையாடித் திரிகிறாள். நீ அவளுடன் சேராதே; அவளுடைய நடைபோல், உன்னால் நடக்க முடியாது. நீ அவளுடன் சேராதே."

(23)

சேரல் மட அன்னம்; சேரல் நடை ஒவ்வாய்;
சேரல் மட அன்னம்; சேரல் நடை ஒவ்வாய்;
ஊர் திரைநீர் வேலி உழக்கித் திரிவாள் பின்,
சேரல் மட அன்னம்; சேரல் நடை ஒவ்வாய்;

பதவுரை

[சேரல் மட அன்னம் — அழகிய அன்னமே நீ அவளுடன் சேராதே; சேரல் — சேராதே; நடை ஒவ்வாய் — அழகிய நடையில் நீ அவளைப் போல் ஆகமாட்டாய்; சேரல் மட அன்னம் சேரல் நடை ஒவ்வாய் —; ஊர்திரை நீர் வேலி — அலைகள் புரளும் கடலை வேலியாகக் கொண்ட இவ்வுலகத்தாரை; உழக்கி — வருத்தி; திரிவாள் பின் — திரிகின்ற இவள் பின்; சேரல் மட அன்னம் — அழகிய அன்னமே சேராதே; சேரல் — நீ சேராதே; நடை ஒவ்வாய் — அவள் நடைக்கு உன் நடை ஒப்பாகாது.]

★

## மாதவி யாழை வாங்கிப் பாடத் தொடங்குகிறாள்

(24)—கட்டுரை

இதுவரையில் கோவலன் பாடிய பாட்டுக்கள், காதலில் மூழ்கியிருந்த ஒருவன், தான் காதலிக்கும் ஒரு பெண்ணைப் பார்த்துப் பாடுவது போல் இருந்தன. உண்மையில், மாதவியின் மேல் இருக்கும் மையலால், அவன் இப்படிப் பாடினான். இப்பாட்டுகளைக் கேட்ட மாதவிக்குச் சந்தேகம் உண்டாகி விட்டது. இவன் வேறொரு பெண்ணை மனதில் எண்ணி, இப்படிப் பாடுகிறான் என்று அவள் நினைத்து விட்டாள். வீம்புக்கென்றே தானும் இம்மாதிரிக் குறிப்பைக் காட்ட வேண்டுமென்று நினைத்து, வெளிப்பார்வைக்கு, மகிழ்ச்சி யடைந்தவள் போல் பாசாங்கு செய்து, யாழைத் தன்கையில் வாங்கினாள். தானும் வேறொரு காதலனை நினைத்தது போல், கானல் வரிப் பாட்டுகளைப் பாடத் தொடங்கினாள். மாதவியின் இனிய இசையைக் கேட்டு, நிலமகளும் வியப்படைந்தாள். மக்களின் உள்ளமும் புளகாங்கிதம் அடைந்தன. யாழின் இசையோடு சேர்ந்த இவளுடைய குரல், அவ்வளவு இனிமையாக இருந்தது.

(24)

ஆங்குக்,
கானல் வரிப் பாடல் கேட்ட மாநெடுங்கண் மாதவியும்.
'மன்னும் ஓர் குறிப்பு உண்டு; இவன் தன் நிலை மயங்கினான்' எனக்

கலவியான் மகிழ்ந்தாள் போல் புலவியான் யாழ் வாங்கித்,
தானும் ஓர் குறிப்பினள் போல், கானல் வரிப் பாடல் பாணி,
நிலத் தெய்வம் வியப்பு எய்த, நீள் நிலத்தோர் மனமகிழக்,
கலத்தோடு புணர்ந்தமைந்த கண்டத்தால் பாடத் தொடங்கும் மன்.

### பதவுரை

[ஆங்கு — அவ்விடத்தில்; கானல்வரிப்பாடல் கேட்ட — கோவலன் பாடிய கானல்வரிப் பாடல்களைக் கேட்ட; மாநெடுங்கண் மாதவியும் — பெரிய நீண்ட கண்ணையுடைய மாதவியும்; இவன் தன் நிலை மயங்கினான் — இவன் தனது நிலையினின்று கலங்கி மாறினான்; மன்னும் ஓர் குறிப்பு உண்டு என — நிலையானவேறோர் குறிப்பும் இவன் உள்ளத்தில் உண்டு என்று கருதி; (என்றது, வேறொருத்தி மீது இவன் விருப்பம் சென்றது என்று) கலவியாள் மகிழ்ந்தாள் போல் — புணர்ச்சியால் களித்தவளைப் போல; புலவியால் யாழ்வாங்கி — ஊடல் வெறுப்போடு யாழைத்தன் கையில் வாங்கி; தானும் ஓர் குறிப்பினள் போல் — தானும் வேறொரு குறிப்புடையவள் போல; கானல் வரிப் பாடல் பாணி — கானல் வரிப் பாடலாகிய பாட்டை; நிலத்தெய்வம் வியப்பெய்த — நிலமகள் வியக்கும் படியும்; நீள் நிலத்தோர் மனம் மகிழ — நீண்ட உலகத்து மக்கள் உள்ளங்குளிரவும்; கலத்தோடு — யாழின் இசையோடு, புணர்ந்து அமைந்த — சேர்ந்து பொருந்திய; கண்டத்தால் பாடத் தொடங்குமன் — குரலோடு பாடத் தொடங்கினாள்.

மாதவியைக் கோவலன் பிரியப் போவதால் கண்ணகிக்கு நலம் உண்டாகும் என உலகோர் மகிழவும், பிரியாத இருவர் பிரிவது கண்டு நிலமகள் வியப்பெய்தவும் பாடத் தொடங்கினாள் மாதவி என்று சொல்லலாம். இன்னும் உலக முழுமையும் தான் கேளாத அவ்வளவு இனிமையாகப் பாடினாளாதலால், நிலமகள் வியப்பெய்தினாள் என்றும், உலகோர் கேட்டுக் கேட்டு மகிழ்ந்து திளைக்குமாறு பாடினதால், அவர்கள் மனம் மகிழ்ந்தனர் என்றும் பொருள் செய்யலாம், மன்— அசை.]

(தொடரும்)

# முல்லை மலர்

[கோமதி சுப்ரமணியம்]

ஜானகி அன்று புதிதாய் வாங்கிய வைரக் கம்மலை அணிந்து கொண்டிருந்தாள். அன்று தான் அதைப்போட்டுக் கொள்வதற்குத் தினம் குறித்திருந்தது. அவள் அதை அணிந்து கொண்டதுடன் திருப்தி யடைந்து விடவில்லை. தன்னிடமுள்ள நகைகளை யெல்லாம் போட்டுக் கொண்டு, அழகாக வாரி முடித்துப் பட்டுப் புடவையைக் கட்டிக் கொண்டாள். அடிக்கடி கண்ணாடி முன் நின்று தன்னுடைய உருவத்தைக் கதம்ப மாலையாக மாறி மாறி அழகு பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தாள்.

வாசலில் செருப் போசை கேட்டதும், எட்டிப்பார்த்தாள். ரங்கநாதன் வீட்டிற்குள் நுழைந்தான்.

அடக்க முடியாத ஆனந்தத்துடன் குனிந்து, கால் தொட்டு கண்களில் ஒற்றிக் கணவனுக்கு நமஸ்காரம் செய்தாள்.

“இன்றைக் கென்ன விசேஷம்? ஓகோ வைரத்தோடு அணிந்து கொண்டிருக்கிறுப் போலிருக்கிறது. சரி எனக்குக் காப்பி எங்கே?”

“இதோ அஞ்சு நிமிஷத்திலே போட்டுக் கொண்டாரேன்.”

“இனிமேல் போடவா? உருப் பட்டாற் போலத்தான். இத்தனை நேரம் காப்பி கூடப் போட முடியாமல் என்ன சிங்காரம் செய்து கொண்டிருந்தாயாம். வெளியிலிருந்து வருகிறவனுக்குக் காப்பி கூட போட்டு வைக்க வில்லை. அழகு பண்ணிக் கொண்டிருந்தாளாம் அழகு.........”

இன்னும் என்ன வெல்லாமோ பேசிக் கொண்டிருந்தான். ஆனல் ஜானகி அவற்றை யெல்லாம் நின்று கேட்டுக் கொண்டிருக்கவில்லை. விறுவிறு என்று சமையலறைப் பக்கம் நடந்தாள். அவள் மட்டும் சமையலறைக்குச் சென்று கொண்டிருந்தாளே யொழிய அவள் மனம் எங்கெல்லாமோ சுற்றிக் கொண்டிருந்தது.

இன்று அவள் புது வைரத்தோடு அணிந்து கொள்ளப் போகிறதை அறிந்திருந்தும் அவன் என்றும் போல் கலகலப்புடன் சந்தோஷமாயில்லை. அதுதான் போகிறது என்றாலும் அவனை நமஸ்கரித்த பொழுதாவது அன்புடன் ஆசீர் வதித்தானு? அதுவும் இல்லை. அதற்குப் பதில் கிடைத்தது என்ன? வசவும் திட்டும் தான். இதற்குத்தானு சாயந்தரம் நாலரை மணியிலிருந்தே வாசலை எட்டிப் பார்த்து ஏங்கிக் கொண்டிருந்தாள்.

இன்று மட்டுமென்ன? அன்றைக்கு காத்தாயி வந்து சீட்டு விழுந்திருக்கிறது என்று சொன்

ளுள். அப்பொழுது ஜானகி வழக்கம் போல் தனக்கு வைரத் தோடு வாங்க வேண்டுமென்று சொன்ளுள்.

அதற்கு, "ஆஹா, அவசியம் வைரத்தோடு வாங்க வேண்டியது

அப்பொழுதெல்லாம் ஜானகிக்கு ஏதாவது பதில் சொல்ல வேண்டும் போல் துடிக்கும். தன்னைச் சமாளித்துக் கொண்டு பேசாதிருந்து விடுவாள். வைரத் தோடு போட்டுக் கொண்ட அன்றே இவ்வளவு சண்டை ஏற்

தான். பாவம், வருஷமெல்லாம் பாடு பட்டு குடும்பத்தைச் சிக்கனமாய் நடத்தி மீத்து வைத்த பணம். ... வைரத்தோடோ, காசுமாலையோ, மகராஜியா எது வேண்டுமோ வாங்கிக்கோ" என்று எவ்வளவு குத்தலாகப் பேசினுன்.

பட்டு விட்டதே! அந்த வைரத் தோடின் அதிர்ஷ்டத்தை நினைத்துக் கொண்டு பேசாதிருந்து விட்டாள்.

ரங்கநாதம் அந்த ஊர் பள்ளிக்கூடத்து ஹெட்மாஸ்டர். பெயரளவில் ஹெட்மாஸ்டரே தவிர

வருமானம் சொற்பந்தான். ஏதோ இரண்டொரு 'ட்யூஷன்' களும் உண்டு. குடும்பத்தைக் கட்டும் செட்டுமாக நடத்தி மாதா மாதம் பணம் மீத்து சீட்டுக் கட்டி வந்தார்கள்.

சீட்டுக் கட்ட ஆரம்பித்ததி லிருந்தே ஜானகி, "சீட்டு விழுந் தால் அந்தப் பணத்திற்கு எனக்கு ஒரு வைரத்தோடு வாங்கித்தர வேண்டும். என்ன, வாங்கித் தரு கிறீர்களா?" என்று ஊஞ்சலாடிய வண்ணம் கொஞ்சுதலாகக் கேட் பாள்.

ரங்கநாதமும் விளையாட்டுக்காக ஒப்புக்கொண்டு விடுவான். அப் பொழுதெல்லாம். தனது அகக் கண்களால், ஜானகியின் அழ குறும் வதனத்திற்கு அழகிய சிறு வைரக் கம்மல் அணிந்து அகமகிழ்ந்து கொள்வான்.

சீட்டு விழுந்தவுடன், ஜானகி யுடன் சண்டையிட விரும்பாமல் அவள் விருப்பப்படி வைரத்தோடு வாங்கியும் கொடுத்து விட்டான். நல்ல தினம் பார்த்துப் போடுவதற் காக இரண்டு தினம் கழித்துப் போட வேண்டியிருக்கிறதே யென்று கூட அவசரப் பட்டுக் கொண்டிருந்தான்.

ஆனால் இன்று ஆபீஸிலிருந்து வரும் பொழுது உடம்பெல்லாம் வலிக்கிறுப் போல் ஏதோ அசௌக்கியமாக இருந்ததினல் தான், வந்ததும் வராததுமாக ஜானகியிடம் சற்றுக் கடுமையாக நடந்து கொண்டான். எல்லாம் அந்த வைரத்தோடின் அதிர்ஷ்டம் என்று நினைத்துக் கொண்டு ஜான கியும் பேசாதிருந்து விட்டாள்.

மறுநாள் காலை வெகு நேரமா கியும் ரங்கநாதம் படுக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை. ஜானகி சென்று பார்த்தாள். கைகால்களை அசைக்க முடியாமல் படுத்துக் கொண்டிருந்தான். ஜானகியின் உள்ளத்தில், அன்று செட்டியார் கடையில் கேட்ட துர்சகுனத்தின் ஒலி எதிரொ லித்தது.

அவள் மனதிற்குப் பிடித்த அந்த அழகிய வைரக்கம்மலை வாங்கி விட்டுத் திரும்பிக் கொண் டிருந்தாள்.

அப்பொழுது பக்கத்தில் நின்று கொண்டிருந்த யாரோ ஒருவர், "இந்தக் காலத்தில் வைரம் வாங் கவே பயமாகத் தானிருக்கிறது. சில குடும்பங்களில் வைரம் வாங்கி யதிலிருந்து விருத்தியில்லாது போய் விடுகிறதே? அப்படித் தானு? செட்டியார்வாள்.

"எல்லா வைரமுமா அப்படி இருக்கும்? அதைப் பார்த்து வாங்கி விட்டால் போகிறது" என்று கடைக்காரச் செட்டியார் கூறிக் கொண்டிருந்தார்.

"நாமும் பார்த்துத் தானே வாங்கி யிருக்கிறோம்," என்று மனதைத் தேற்றிக் கொண்டாள்.

என்ன தான் தேற்றிக் கொண் டாலும் இப்பொழுது அவ்வெண் ணமே மேலோங்கி அவள் மனதை உறுத்தியது.

ரங்கநாதம் அன்று படுத்தவன் தான். நாளுக்கு நாள் வியாதி அதிகமாகிக் கொண்டே வந்தது.

ஜானகி மனதைத் தளரவிடாமல் தன்னல் இயன்ற அளவு சிகிச்சை செய்து வந்தாள். அல்லும் பகலும் கணவனுக்கு வேண்டிய வைகளைச் செய்து கொண்டு, அக்கம் பக்கத்தில் கைமாற்று

வாங்கி, வேண்டிய டாக்டர்களை அழைத்து வந்து, தன் கணவன் பிழைத்தெழுவதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்தாள்.

என்ன செய்தும் பலன் இல்லை. கடைசியாக ஊரிலிருந்து அண்ணாவைத் தனக்கு உதவியாக வரவழைத்துக் கொண்டாள்.

இரவும் பகலும் கண் விழித்து ஓடி ஓடி அலைவதாலும் வேளா வேளை சரியான ஆகாரம் உட்கொள்ளாததினாலும், ஜானகி இளைத்து ஒடுங்கி விட்டாள்.

தனிமையில் தவிக்கும் தன் தங்கையின் நிலைமையும் படுக்கையில் இருக்கும் தனது அத்தானின் நிலைமையையும் கண்டு பரிதாபப் பட்டான் அண்ணா.

"ஜானகி, இந்த டாக்டர்கள் பார்ப்பதிலெல்லாம் பிரயோஜனமில்லை. எனக்குத் தெரிந்த ஒரு நல்ல டாக்டர் இருக்கிறார். அவருக்கு மிகவும் கைராசி. அவரை அழைத்து வருகிறேன். ஆனால் ஒன்று. அவர் விஷயத்தில் கொஞ்சம் பணம் அதிகமாகத் தான் செலவழியும். சமயத்தில் அதையெல்லாம் பார்த்து முடியுமா?

"அதற்கென்ன அண்ணா! பணத்தைப் பற்றி என்ன? இப்பொழுது ஏதோ செலவழித்துக் கொண்டீர்களானால் பின்னால் தந்து விடுகிறோம்."

"நீ பேசுவது வேடிக்கையாக இருக்கிறதே. என்னிடம் ஏதம்மா பணம். இத்தனை நாளும் சம்பாதிச்சார்களே. கொஞ்சம் கூட மீதம் வைக்கவில்லையா என்ன?"

"மீதம் ஏதண்ணா பணம்? கொஞ்ச நஞ்சம் இருந்ததும் இத்தனை நாட்களாக செலவழிந்து வருகிறது."

"வருகிற அத்தனை பணத்தையும் செலவழித்துக் கொண்டு என்ன தான் குடித்தனம் பண்ணினீர்களோ. அன்றைக்குத் 'தாம்தூம்' என்று செலவு செய்யும் போது இப்படி ஏதாவது செலவு வந்தால் என்ன செய்வதென்று உத்தேசமாம்? இவ்வளவு பணம் சம்பாதித்த உங்களிடமே பணமில்லையென்றால் குறைந்த சம்பளக்காரனை என்னிடம் மட்டும் பணம் இருக்குமென்று என்ன நம்பிக்கை" என்று என்ன என்னவோ படபடப்பாகப் பேசிக் கொண்டிருந்தான்.

ரங்கநாதம் புரண்டு படுக்க முயற்சி செய்து கொண்டிருந்தான். பணம்......பணம் என்று பேசுவதை அரைகுறையாகக் கேட்டதும் ஜானகியைக் கூப்பிட்டான்.

கணவனருகில் சென்று, "என்ன உங்களுக்குக் கஞ்சி வேண்டுமா? ஏன் கூப்பிட்டீர்கள்" என்று கேட்டாள்.

"இல்லை, கஞ்சி ஒன்றும் வேண்டாம். என்ன, என்னவோ பணம் என்று பேசிக் கொண்டீர்களே. ஏதாவது ......பணம்...... வேண்டுமா?"

"இல்லை, அண்ணா கொஞ்சம் பணம் கொண்டு வந்திருந்தார். அதைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தோம். நீங்கள் படுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறி சமாளித்துக் கொண்டாள்.

டாக்டர் வந்து வைத்தியம் நடைபெற்றது. ஜானகியின் உள்ளம் முருகனையே தியானித்துக் கொண்டிருந்தது. ரங்கநாதம் நாளுக்கு

நாள் குணமாகிக் கொண்டு வந்தான்.

இப்பொழுது ரங்கநாதம் நன்கு கத்தேறி விட்டான். அன்று எதை யெல்லாமோ பேசிக் கொண்டிருந்தார்கள். திடீரென்று வியாதி வந்து விட்டதையும், அப்பொழுது ஜானகியடைந்த மனக் கிலேசத்தையும் பற்றியெல்லாம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"உன் அண்ணு எப்பொழுதுமே கொஞ்சம் படபடப்பாகப் பேசினுலும் எவ்வளவு நல்ல மனிதர் பார்த்தாயா? அந்த சமயத்தில் அவர்கள் பணம் கொடுத்து உதவாவிட்டால்......"

ஜானகி பதில் ஒன்றும் பேசாமல் சிரித்தாள்.

"ஆமா, ஜானகி உன் நகைகளையெல்லாம் எடுத்துப் போட்டுக் கொண்டாலென்ன? நான் தான் பிழைத்து விட்டேனே, இனிமேலென்ன? எடுத்துப் போட்டுக் கோயேன்" என்ருன்.

"இதோ போட்டுக் கொண்டு வருகிறேனே" என்ருள்.

"அன்றைக்கு அந்த வைரத் தோடு போட்டுக் கொண்டதைக் கூட நான் சரியாகப் பார்க்கவில்லையே. எங்கே இப்படி வா அதைப் பார்க்கலாம்" என்ருன்.

ஜானகி திகைத்தாள்.

செடியிலிருந்து ஒரு முல்லை மலர் அசைந்தது. அவளும் நடுங்கினுள்.

"அந்த வைரத்தைக் கொடுத்து வேறொரு வைரத்தை மீட்டு வைத்திருக்கிறேன்" என்று சொல்லிச் சிரித்தாள்.

"கம்மலை விற்று விட்டாயா என்ன?

"ஆமாம். விற்று விட்டேன். அந்த வைரத்தை அணிந்து கொண்ட அன்றுதான் நீங்கள் படுக்கையில் படுத்து விட்டீர்கள். அந்த வைரமா எனக்குப் பெரிது? இல்லை. அதனுல் அதைக் கொடுத்து விட்டேன்" என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினுள்.

ரங்கநாதம் அர்த்தம் தெரியாமல் விழித்தான். பூ மலர்ந்தது!



இலக்கிய ஆராய்ச்சி:

# இராமசரிதம்

[பௌத்தர்களும் ஜைனர்களும் கூறுவது]

(இராவ்பகதூர் புரொபஸர் ஏ. சக்கரவர்த்தி எம். ஏ; ஐ. இ. எஸ்; அவர்கள் எழுதியதின் மொழிபெயர்ப்பு.)

இனி ஜைனர்கள் கூறும் இராம கதையைக் கவனிப்போம். இராமனுடைய வரலாறு பௌத்த நூல்களில் காணப் பெறுவதைக் காட்டிலும் ஜைன இதிகாஸங்களில் அதிகமாக காணக்கிடக்கின்றது. ஜைன நூல்களில் இராமனைப் பற்றிய வரலாறுகள் இரண்டு உள்ளன,— ஒன்று ஜின ஸேனர் கூறுவது. மற்றொன்று ரவிஸேனருடையதாம். ஜினஸேனர் ராஷ்டிரகூட வம்சத்தினனான அமோக வர்ஷன் என்னும் அரசனுடைய மத குருவாய் விளங்கியவர். அவர் ஜைனர்களின் ஆதிகால வரலாற்றினையும் ஜைன சமயத்தை முதன் முதலில் போதித்த பகவான் ரிஷபதேவருடைய சரித்திரத்தினையும், ஆதி புராணம் என்னும் தாமியற்றியதொரு நூலுள் மிகவும் அழகாகவும் விரிவாகவும் எழுதியிருக்கின்றார். ஜைனர்களுடைய முழு வரலாற்றையும் எழுதி முடிப்பதற்கு முன்னேயே ஜினஸேனர் காலமானபடியால் எஞ்சிய பாகத்தை அன்னாரின் மாணக்கரான குணபத்திரர் இயற்றிப் பூர்த்தி செய்தனர். அது உத்தர புராணம் என்று வழங்குகின்றது. ஆதி புராணமும் உத்தர புராணமும் சேர்ந்து ஜைனர்களுடைய பிரசித்தி பெற்ற நூலாகிய மகா புராணமாகின்றது. இம்மகாபுராணத்தில் ஸ்ரீ விருஷபர் முதல் ஸ்ரீ மகாவீர வர்த்தமானர் ஈறாக இருந்த இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களுடைய சரித்திரத்தையும், அவர்கள் காலங்களில் விளங்கிய மற்ற பெரியார்களின் வரலாறுகளையும் விரிவாகக் காணலாம். இராம சரிதத்தில் கூறப்பெறும் சம்பவங்கள் இருபதாவது தீர்த்தங்கரராகிய முனிஸுவ்ரதர் காலத்தில் நிகழ்ந்தனவாக கருதப்படுகின்றன. ஸமஸ்கிருதமும் தமிழுங் கலந்த மணிப்பிரவாளம் என்னும் உரைநடையில் யாக்கப்பட்டுள்ள ஸ்ரீ புராணம் என்னும் நூலிலும் இராமசரிதம் காணப் பெறுகின்றது.

இரண்டாவது வரலாறு ரவிசேனர் இயற்றியதாகச் சொன்னோம். அவர் மிகவும் பாண்டித்தியம் பெற்றதொரு பெரிய கவியாவர். சற்று ஏறக்குறைய முப்பதாயிரம் சுலோகங்கள் அடங்கிய பத்ம புராணம் என்னும் தம்முடைய காவியத்தில் ராமனது வாழ்க்கையையும் அந்த சம்பவங்களையும் மிகவும் நன்றாக வருணித்துள்ளார். கன்னட மொழியில் பம்பன் இயற்றிய இராமாயணத்திற்கு இந்நூல் ஆதரவாக இருந்ததாகத் தெரிகின்றது. ஸர். எல். ரைஸ் (Sir L. Rice) என்பவரால் பம்ப இராமாயணம் சிறந்ததொரு ஆங்கில முகவுரையுடன் பதிப்பிக்கப் பெற்றது. சீதையின் பெற்றோர்களைப் பற்றிய விவரங்கள் இரண்டு வரலாறுகளுள்ளும் சிறிது வித்தியாசப்படினும் பெரும்பாலும் ஒத்திருக்கின்றன. வால்மீகி இராமாயணத்

இது இப்பொழுது சென்னை சர்வ கலாசாலையாரால் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

திற்கும் ஜைன இராமாயணத்திற்கும் ஒரு முக்கியமான வேற்றுமை வெளிப்படையாகக் காணப்பெறுகின்றது. ராக்ஷசர்களைப்பற்றியும் குரங்குகளைப் பற்றியும் யாவர்க்கும் நன்ருய்த் தெரியும். வகுப்புத் துவேஷம் ரிக்வேதத்தில் காணப்பெறுவது போலவே வால்மீகியிலும் வெளிப்படையாகக் காணப்படுகிறது. இராவணனும் ஹனுமானும் வேதங்களிலும் மற்றக் கலைகளிலும் தேர்ச்சியுடையவர்களா யிருந்தார்கள் என்று கூறப்படுவதோடு அவர்களுள் ஒருவனை ராக்ஷசனென்றும் மற்றவனை மிருகவகையில் சேர்ந்தவனுகவும் சொல்லியிருப்பது மிகவும் வியப்பைத்தருகின்றது. இந்த மனப்பான்மையானது, தால்பாய்ஸ் வீலர் (Talboys wheeler) என்பவர் கூறும் "இராமாயணத்தை இயற்றிய வால்மீகி பிராம்மணமதம் புத்துயிர் பெற்ற காலத்தில் இருந்ததாகத் தெரிகிறது. அக் காவியம் பிராம்மணர்களுக்கும் ராக்ஷசர்கள் என்று விவரிக்கப்பட்ட பௌத்தர்களுக்கும் இடையே நடந்த சண்டையை சித்திரிக்கின்றது" என்னும் கருத்தை வலியுறுத்துகின்றது. "பௌத்தர்கள்" என்னும் சொல்லை நீக்கி அவ்விடத்தில் "ஜைனர்கள்" என்னும் சொல்லைப் பெய்து வாசித்தால் சரித்திரத்தோடு எவ்வளவு பொருத்தமாயிருக்கும் என்கிற விஷயம் இனிமேல் நாம் கூறப்போவதிலிருந்து நன்கு விளங்கும். ஜைன ஸமய நூல்களிலும் ஜைன இலக்கியங்களிலும் இராவணனைப் பற்றி இழிவான குறிப்புகள் காணப்படவேயில்லை. இராவணனும் சுக்ரீவனும் தோன்றிய வம்சங்கள் இரண்டும் மிகப் பிரசித்தி பெற்ற வித்தியாதரர்களுடைய இரண்டு பிரிவுகளாம். அவர்களை ராக்ஷஸர்கள் என்ருவது குரங்குகள் என்ருவது குறிப்பிடவேயில்லை. இந்த வித்தியாதர வம்சம் பூர்வகாலத்திலிருந்தே மரியாதையோடு பாராட்டப் பெற்று வந்திருக்கின்றது. அதில் உதித்தவர்களனைவரும் ஜைன சமயத்தினராகவே இருந்தனர். ஆனல் இராவணனைப் போன்ற பலர் ஜைன சமய ஒழுக்கத்தை விட்டவர்களாயும் இருந்தனர்.

ஜைன சமயத்தைப் போதித்தவராகிய ரிஷப தேவரைப்பற்றி முன்பே குறிப்பிட்டோம். அவர் ஆரியர்களின் ஒரு பிரிவினராகிய புரு அல்லது இக்ஷுவாகு வம்சத்தினைச் சேர்ந்தவர். அவருடைய மூத்த குமாரனின் பெயர் பரதன். அவனுலேயே இந்த தேசத்திற்குப் பாரதவர்ஷம் என்னும் பெயர் உண்டாயிற்று. அவனே பாரத வர்ஷத்தின் முதல் சக்கரவர்த்தி. அவன் காலத்திலேயே அவனல் அங்கீகரிக்கப் பெற்ற வேறு சில அரச வம்சத்தினரும் இருந்தனர். இக்ஷுவாகு வம்சம், குரு வம்சம், ஹரி வம்சம், உக்ரவம்சம், நாத வம்சம் ஆகிய ஐந்து பெரிய அரச வம்சங்கள் முற்கால ஆரியர்களுக்குள்ளேயே இருந்தனவென்று மகா புராணம் தெரிவிக்கின்றது. ஜைனர்கள் போற்றும் இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களும் இந்த ஐந்து வம்சங்களிலேயே தோன்றினர்கள். முன்பு சொன்ன படியே, ரிஷபதேவர் இக்ஷுவாகு வம்சத்தில் உதித்தார். கடைசி ஜினர் அல்லது தீர்த்தங்கரர் மஹாவீரர் நாத வம்சத்தில் அவதரித்தார். அதனுலேயே அவரை பௌத்த நூல்களும் ஜைன நூல்களும் நாதபுத்தர் என்று குறிப்பிடுகின்றன. அவருக்கு முன் தோன்றிய பார்ஸ்வநாதர் உக்கிர

வம்சத்தில் உதித்தார். இருபத்தி இரண்டாவது தீர்த்தங்கரரான நேமிநாதர் அல்லது அரிஷ்ட நேமி என்பவர் ஸ்ரீ கிருஷ்ணனுடைய சிறிய தந்தையின் புதல்வராய்த் தோன்றி கிருஷ்ணனைப் போலவே ஹரி வம்சத்திலேயே பிறந்தார். பண்டைய இந்தியாவில் அவதரித்த எல்லாத் தீர்த்தங்கர்களும், புத்தரும், ஸ்ரீராமனும் ஸ்ரீ கிருஷ்ணனும் ஆகிய எல்லா பெரிய மதத் தலைவர்களும் மேலே சொல்லப்பட்ட க்ஷத்திரிய வம்சங்களிலேயே உதித்தனர் என்கின்ற முக்கியமான விஷயத்தை நாம் கவனிக்க வேண்டியது அவசியம். இந்துக்கள் இவர்களை விஷ்ணுபகவானின் அவதாரங்கள் என்று கொண்டாடி வருகின்றதிலிருந்தே இவர்களுடைய பெருமை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெள்ளிதின் விளங்கும்.

பகவான் ரிஷபதேவர் துறவரம் பூண்டு தவத்திற்குச் செல்லும் பொழுது தன் ராஜ்யத்தைப் பரதனுக்குக் கொடுத்து தேசத்தை ஐந்து அரச வம்சத்தினருக்கும் பங்கிட்டு பரதனையே எல்லாருக்கும் தலைவனாகச் செய்தார். சிறிது காலத்திற்குப் பிறகு கச்சர் மகா கச்சர் என்பவர்கள் பிள்ளைகளான, நமி, வினமி, என்னும் இரண்டு அரச குமாரர்கள் பகவான் ரிஷப தேவர் முன் தோன்றி தங்களுக்குச் சேர வேண்டிய ராஜ்ய பாகத்தைக் கேட்டார்கள். ஆரியா வர்த்தத்தில் அவர்களுக்குக் கொடுக்க நிலம் இல்லாதபடியால், விஜயார்த்தபர்வதம் அல்லது தற்காலத்தில் விந்திய மலை என்று சொல்லப்படும் மலைப் பக்கங்களில் தங்களுடைய ராஜ்யத்தை நிலை நாட்டிக் கொள்ளும்படி உத்தர விட்டார். இந்த இரண்டு அரச குமாரர்களே பிற்காலத்தில் வித்தியாதரர்கள் என்று புகழப்பெற்ற கூட்டத்தாருக்கு மூதாதைகளாய் இருந்தனர். இந்த வித்தியாதரர்கள் தெற்கே இலங்கை பரியந்தம் தங்கள் ராஜ்ஜியத்தைப் பரவச் செய்தார்கள். அவர்கள் தங்கள் மானச சக்தியினுலும் சரீர வன்மையாலும் வேண்டிய சரீர தோற்றங்களை எடுக்கவும் யாவரும் விரும்பத்தக்க உருவத்தைப் பெறவும் ஆகாயத்தில் விமானங்களிலும் வான ஊர்திகளிலும் செல்லவும் கூடிய திறமைவாய்ந்தவர்களாய் இருந்தபடியால் வித்தியாதரர்கள் அல்லது வித்தைகளைத் தரித்தவர்கள் என்று பாராட்டப் பெற்றனர். இந்த வித்தைகளேயல்லாமல் அவர்கள் ஆத்ம சம்பந்தமான வித்தைகளிலும் இதர லௌகீக நூற்பொருள்களிலும் பாண்டித்தியம் பெற்று திகழ்ந்தனர். இந்த வித்தியாதரர்கள் பூர்வகாலத்து இந்தியாவில் அரசு செலுத்திய ஒரு முக்கிய வம்சத்தினராயிருந்தனர். இக்ஷுவாகு வம்சத்தினரும் ஏனைய அரச வம்சத்தினரும் இந்த வித்தியாதரர்களோடு அடிக்கடி விவாக சம்பந்தமாகவும் ராஜீய சம்பந்தமாகவும் நேசம் பாராட்டி வந்ததாகத் தெரிகிறது. மேலே சொன்ன ஆரியாவர்த்தத்திலிருந்த ஐந்து பெரிய அரச வம்சத்தினருக்கும் வித்தியாதரர்களுக்கும் அனேக விவாக சம்பந்தங்கள் ஏற்பட்டிருந்தன. இதனுலேயே வித்தியாதரர்களும் ஆரியவர்த்தத்திலிருந்த அரச வம்சத்தின்ரோடு சமமான பதவியையும் நிலைமையையும் உடையவர்களாய் இருந்தார்கள் என்றும், ராஜீய விஷயங்களிலும் விவாக விஷயங்களிலும் கலந்து கொள்வதற்கு யோக்கியதையைப்

பெற்றிருந்தார்கள் என்றும் தெரிகின்றன. இராவணன், சிறிது விபரீத புத்தியையுடையவனாய் இருந்தபோதும் அவன் தோன்றிய வித்தியாதர வம்சமானது மேலே சொன்ன மாதிரி ஒரு முக்கிய வகுப்பாய் விளங்கியது.

கிஷ்கிந்தையில் அரசாண்டு வந்தவர்களும் அதே வித்தியாதர வம்சத்தைச் சேர்ந்தவர்கள். வாலி, சுக்கிரீவன், ஹனுமான் ஆகியவர்கள் இந்த வகுப்பைச் சேர்ந்த பெரிய வீரர்கள். அவர்கள் 'கபித்வஜர்கள்' அல்லது குரங்குக் கொடியுடையவர்கள் என்று குறிப்பிடப்படுகின்றார்கள் அவர்களுடைய கொடியில் குரங்கு அடையாளச் சின்னமாக இருந்தது. தற்காலத்தில் உள்ள பல நாட்டினர் சிங்கம், கழுகு, கரடி, சூரியன் ஆகியவற்றை தங்கள் கொடிகளில் அடையாளமாக வைத்திருப்பது போல கிஷ்கிந்தையிலிருந்த இந்த வித்தியாதரர்கள் குரங்கை தங்கள் கொடிக்கு அடையாளமாக வைத்திருந்தார்கள். அதிலிருந்து அவர்களை குரங்கு வம்சத்தினர் என்று சிலர் கருதினர். ரைஸ் (Rice) துரையவர் எடுத்துக் காட்டுவது போல பாண்டவர்கள் வீரனான அருச்சுனன் குரங்குக்கொடியை உடையவனாய் இருந்ததல்லாமல் கடம்பர்கள் என்று கூறப்படும் அரச பரம்பரையினரும் கபித்வஜர்களாய் இருந்தார்கள். இராவணன் தோன்றிய வித்தியாதரர்களைப் போலவே இந்த வித்தியாதரர்களும் ஜைன ஸமயத்தினராயிருந்தனர். வித்தியாதரர்களைப் பற்றிய இந்தக் குறிப்புக்களோடு நிறுத்திக் கொண்டு, மஹாபுராணத்தில் கூறப்படும் இராம கதையைக் கவனிப்போம்.

முன்னொரு காலத்தில் புரு அல்லது இக்ஷ்வாகு வம்சத்தில் தோன்றிய தசரதன் என்னும் ஓர் அரசன் காசியில் அரசாண்டு வந்தான். அவனுக்கு ராமன் என்றும் இலக்குமணன் என்றும் குமாரர்கள் பிறந்தார்கள். சகர சக்ரவர்த்தியின் வம்சத்தினர் அயோத்தியில் செங்கோலோச்சி வந்தனர். ஆனால் தசரதன் காலத்தில் அந்த வம்சம் ஆண் சந்ததியற்றுப் போகவே அயோத்தியின் சிம்மாசனம் காலியாயிருந்தது. ஆகையால் அயோத்தியாவாசிகள் காசிக்குச் சென்று தசரதனைக் கண்டு சாம்ராஜ்யத்தின் முக்கிய நகரமாகிய அயோத்தியாபுரிக்கு வந்து அரசாளும்படி அவனை வேண்டினார்கள். அவ்வண்ணமே தசரதன் அயோத்தியை யடைந்து அங்கிருந்தபடியே இரண்டு இராஜ்ஜியங்களையும் ஆண்டு வந்தான். அங்கே அவன் கைகேயி என்னும் ஓர் பெண்ணை மணந்து அவளிடம் பரதன் என்னுமோர் புத்திரனைப் பெற்றான். தசரதன் அதிக சக்தியும் கீர்த்தியும் பெற்று விளங்கிய காலத்தில் மிதிலை என்னும் நகரத்தில் ஜனகன் என்னும் மற்றொரு வன்மையுள்ள மன்னன் அரசு நடாத்தி வந்தான். ஜைனர்கள் கூறும் வரலாற்றின் படியே இந்த ஜனகன் ஹரி வம்சத்தைச் சேர்ந்தவனாகத் தெரிகிறது. அவனுக்கு ஜைன ஸமயத்தில் திடமான நம்பிக்கை இல்லை என்றும் தெரிகிறது. அவன் அடிக்கடி பிராணிவதையுடன் கூடிய பிராம்மணர்கள் செய்த யாகங்களில் பங்கு எடுத்துக் கொண்டதாகத் தெரிகிறது.

உபநிஷத்துக்களில் கூறப்படும் ஜனகனும் இந்த ஜனகனேயாவன். இவனே சீதையை வளர்த்த பிதா. இவன் சீதைக்குத் திருமணம் முடிக்க எண்ணி அதற்கு

முன்பாக வேதோக்தமான சில யாகங்களையும் செய்யக் கருதி அதற்காகப் பெரிய ஏற்பாடுகளைச் செய்து அக்காலத்தில் இராமனும் இலக்குமணனும் சிறந்த வீரர்க ளென்றும் பராக்கிரமசாலிக ளென்றும் எங்கும் புகழ் பரந் திருந்தபடியால் தான் செய்யும் மகத்தான காரியங்களுக்கு அவர் களுடைய உதவியை நாடி அவர் களை அழைத்தான்.

தசரதன் சிறந்த ஜைனனாய் இருந்தபடியால் தன்னுடைய குமாரர்களை ஜனகன் செய்கின்ற யாகங்களுக்கு உதவி புரியும்படி அனுப்புவது தகுதியா என்று தன்னுடைய அமைச்சர்களுடன் ஆலோசித்தான். ஜீவவதை யோடு கூடிய யாகங்களில் ஜைன அரசர்கள் தலையிடலாமா என் பதே முக்கிய விசாரணைக் குரிய விஷயமாய் இருந்தது. நீண்ட ஆலோசனை செய்தபிறகு ஜனக னுடைய யாகங்கள் அவ்வளவு கெட்டவைகளல்ல வென்றும் அரச குமாரர்களை ஜனகன் அழைப்புக்கு இணங்கி மிதிலைக்கு அனுப்புவதால் குற்றமில்லை என் றும் தீர்மானிக்கப்பட்டன. அவ் வாறு அனுப்புவதால் இரண்டு பெரிய நன்மைகள் உண்டாகும் என்றும் கருதப்பட்டது. ஒன்று அயோத்யை மிதிலை ஆகிய இரண்டு ராஜ்யங்களுக்கும் நெருங் கிய நேசப்பான்மை ஏற்படும் என்பது. இரண்டாவது ராமன் நிச்சயமாகவே சீதையை சுயம் வரத்தில் அடையக்கூடும் என்ப தாம். அங்ஙனமே இரண்டு குமாரர்களும் மிதிலைக்கு அனுப் பப்பட்டார்கள். சீதையின் சுயம்வரம் நடந்தது. சீதை இரா மனை மாலை இட்டனள். விவாகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. அரச குமாரர்கள் சீதையுடன் அயோத்தியாவுக்குத் திரும்பினர். சிறிது காலம் சென்றபிறகு இரா மன் காசியில் அரசாள நினைத்து தன் தந்தையின் உத்திரவை வேண்டினன். தசரதன் அதற் குச் சம்மதிக்கவே இராமன் சீதையுடனும் இலக்குமணனுட னும் காசிக்குச் சென்று அங்கே அறநெறி வழுவாமல் அரசு புரிந்து வந்தான்.

இப்பொழுது இலங்காபுரியின் தலைவனும் பெரிய வித்தியாதரனு மான இராவணனைப் பற்றிச் சிறிது கவனிப்போம். அவன் அதிக மகிழ்ச்சியோடு அரசாண்டு வருங்காலத்தில் ஒரு சோதிடன் இராவணனைப் பார்த்து “தங்க ளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்து அதனால் தங்கள் இராஜ் ஜியம் அழியும்” என்று அறிவித் தான். இதைக்கேட்ட இராவ ணன் திடுக்கிட்டுப் போனன். தன்னுடைய ராணி மண்டோதரி ஒரு பெண் குழந்தையைப் பெற்ற பொழுது அதை எடுத்துச்சென்று காட்டில் விட்டுவிடும்படி தன் னுடைய உத்தியோகஸ்தர்களுக் குக் கட்டளையிட்டான். ஆனல் தாயினுடைய உதவியால் அந்தக் குழந்தையையும் அக் குழந்தை யின் பெற்றோர்களின் வரலாற் றையும் அந்தக் குழந்தையைப் பார்த்து எடுக்கின்றவர்கள் அதைத் தங்கள் குழந்தையைப் போலவே கருதி வளர்க்க வேண் டும் என்னும் கோரிக்கையை யுடைய ஒரு கடிதத்தையும் ஒரு பெட்டியில் வைத்து இராவண னுக்குத் தெரியாமல் ஜனகனு டைய ராஜ்யத்திற்குக் கொண்டு வந்து அதை பூமி சோதகர்கள் செல்லக்கூடிய இடத்தில் வைத்து விட்டுச் சென்றார்கள். இந்த பூமி சோதகர்கள் அந்தப் பெட்டியை எடுத்து அதற்குள் இருந்த மிகவும்

அழகான குழந்தையைக் கண்டு சந்தோஷமுடையவர்களாகி அதனை ஜனகமகாராஜனுக்கு கொடுத்தார்கள். அவன் அக் குழந்தையைத் தன் புத்திரியாக ஏற்றுக்கொண்டு மிகவும் அன்போடு வளர்த்து வந்தான். இராவணன் குழந்தை இறந்துவிட்டதாகக் கருதி தன் ராஜ்யத்திற்குக் கெடுதி வரமுடியாது என்று நினைத்து பொய்யான சந்தோஷத்தில் ஆழ்ந்திருந்தான். ஆனால் குழந்தை சீதை என்னும் பெயருடன் வளர்ந்து தனக்கு (இராவணனுக்கு) சத்துருவாகப் போகும் இராமனையே மணந்தாள்.

ஒரு நாள் இராமனும் சீதையும் சபாமண்டபத்தில் வீற்றிருக்கையில் நாரதர் அங்கே சென்றார். அப்பொழுது இராமன் தன் இராணியாகிய சீதையுடன் பேசிக் கொண்டிருந்தபடியால் நாரதர் வருவதைக் கவனித்து அவரை மரியாதையுடன் வரவேற்கவில்லை. இதனால் நாரதற்கு மிகுந்த கோபமுண்டாயிற்று. "இவன் அழகில் சிறந்த இந்தப் பெண்ணை இராணியாகப் பெற்றிருத்தலினாலல்லவா இவனுக்கு இவ்வளவு கர்வம் உண்டாயிருக்கிறது. இவனுடைய கர்வத்தை அடக்குவதற்கு இவன் தன் மனைவியை இழக்கும்படிச் செய்ய வேண்டும்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டு சபாமண்டபத்தினின்றும் வெளியேறி இலங்கைக்குச் சென்று இராவனேசுவரனைக் கண்டு பின் வருமாறு சொன்னார். "நான் சில நாட்களுக்கு முன் காசியிலிருக்கும்பொழுது இராமனுடைய இராணியாகிய சீதையைக் கண்டேன் அவள் ஸ்திரீகளுக்குள் இரத்தினம் போன்றவள். அவள் வித்தியாதர சக்ரவர்த்திக்கு ராணியாகத் தகுந்தவளே தவிர ஒரு சிறிய அரசனை காசி ராஜனுக்கு இராணியாகத் தகுந்தவளல்ல" என்று எடுத்துரைத்து இராவணனுக்கு சீதையின்மேல் ஆசையும் அவளை எப்படியாவது அடைதல் வேண்டும் என்கிற எண்ணமும் உண்டாகும்படிச் செய்துவிட்டார். சீதையை எப்படி அபகரித்துக் கொண்டு வருவது என்கிற எண்ணமே இராவணனுடைய மனதில் குடி கொண்டது. இது விஷயமாக அவன் தன்னுடைய அமைச்சர்களை வினவினான். அவர்கள், "இது தங்களுடைய பெருமைக்கு தகுதியான செயல் அன்று. ஆனமையின் தாங்கள் இதனை நெஞ்சில் நினைத்தாலும் தகுமோ" என்று அறிவுறுத்தினார்கள். ஆனால் இராவணனுடைய மனதில், நாரதர் வருணித்த சீதையின் அழகிய உருவமே என்னேரமும் குடி கொண்டிருந்தது. எப்படியாவது அவளை அபகரித்துக் கொண்டு வந்தே தீரவேண்டுமென்று தீர்மானித்து விட்டான் இராவணன். நாரதர் ஒரு சூழ்ச்சியையும் சொல்லித் தந்தார். அதாவது "வசந்த காலத்தில் இராமனும் சீதையும் வனக்கிரீடைக்காக காட்டுக்கு வருவார்கள். அதுபோது நீ அவ்விடத்திற் கேகி நல்ல தருணம் பார்த்திருந்து சீதையை எளிதில் கவர்ந்து கொண்டு வந்துவிடலாம்" என்பதாம்.

இராவணன் தனது நம்பிக்கையுள்ள மந்திரியாகிய மாரீசனுடன், இராமனும் சீதையும் வசந்தகாலத்தைக் கழிக்கும் கானகத்திற்கு ஏகினன். மாரீசன் வித்தியாதரனாய் இருந்தபடியால் அவன் சீதாவின் முன் ஓர் அழகிய மான் உருவங் கொண்டான்.

சீதை அதனைக் கண்டு மயங்கி தனக்கு அந்த மான் வேண்டும் என்கிற விருப்பத்தைத் தனது நாயகனுக்குத் தெரிவித்தாள். ராமன் உடனே சீதையைத் தனியாய் விட்டுவிட்டு பொய்யான உருவந்தனைக் கொண்டிருந்த அம் மானினைக் கொணர்தற்பொருட்டு வெகுதூரம் ஓடினன். சாயங்காலம் நெருங்கி விட்டது. இராவணன் தனது வித்தையின் மகிமையால் ஸ்ரீ ராமனுடைய உருவங் கொண்டு சீதையை அணுகி "நான் அந்த மானைப் பிடித்து நகரத்திற்கு அனுப்பி விட்டேன். இரவு நெருங்குவதால் நாம் சீக்கிரம் செல்வோம்" என்று சொல்லி அவன் சீதையை ராமனுடைய விமானத்தைப் போல் தோன்றிய தனது விமானத்தில் ஏறிக்கொள்ளச் சொல்லி சீதையை இலங்கைக்குத் தூக்கிச் சென்றான். சிறிது நேரத்திற்குப் பிறகே சீதை இந்தப் பெரும் மோசத்தைத் தெரிந்து கொண்டனள். அவள் அப்பொழுதே தான் தன்னுடைய அன்புமிக்க ஸ்ரீ இராமபிரானல் மீட்கப்படாமுன் சாப்பிடுதலும் பேசுதலும் கூடாது என்று ஒரு பிரதிக்ஞை செய்து கொண்டாள்.

இலங்கையில் இருக்கும் போது சீதை பல வித்தியாதர ஸ்திரீகளினல் இராவணனைத் தவிர்க்காமல் மணந்து அவனது இராணியாகுமாறு மயக்கப்பட்டாள். ஆனல் சீதை இந்த புத்திமதிகள் யாவற்றையும் வெறுத்துத் தள்ளினள். இங்ஙன மிருக்கையில் ஒருநாள் இராவணனது மனைக்கிழத்தியாகிய மண்டோதரி சீதையினைக் காணத் தனியாய்ச் சென்றாள். சீதையின் முகத்தைப் பார்த்தவுடன் அவள் பலவாண்டுகளுக்கு முன் இராவணனுக்குத் தெரியாது வெளியேற்றப் பட்டத் தனது மகள் என்பதை மண்டோதரி சுலபமாக அறிந்தாள். உடனே மண்டோதரி ஆனந்தக் கண்ணீர் பெருக சீதையைத் தழுவிக் கொண்டாள். "இராமன் உன்னை எவ்வகையினுலேனும் திரும்பவும் மீட்டுக் கொண்டு அவனுடைய இடத்திற்கு அழைத்துச் செல்வான். ஆகையினல் நீ பட்டினி கிடந்து அதனல் சாதல் விரும்பத்தகாதது. ஏனெனின் நீ இராமனல் மீட்கப்படாவிட்டால் உன்னுடைய வாழ்நாட்களை ஒரு ஆசிரமத்தில் பக்தியிலும் பூஜையிலும் செலவிடலாம். அதற்குக் கூட யாரும் தம்முடைய உயிரை வைத்துக்கொண்டல்லவா செய்தல் இயையும்" என்று மண்டோதரி சீதைக்கு ஆறுதல் கூறி அவள் பட்டினியை முடிக்கச் சொன்னள். அவளும் அங்ஙனமே செய்தாள்.

இதனிடையில் இராமன் தனது பத்தினியைக் காணுததினல் பெருந் துக்கத்துடன் தனது நகரத்திற்குத் திரும்பினன். இராமனது தந்தையாகிய தசரதன் துர்நிமித்தமான ஒரு கனவினைக் கண்டான். அக் கனவு இராவணன் சீதாபிராட்டியை வஞ்சகமாக கவர்ந்துச் செல்லுதலைக் குறிக்கிறது என்று விவரித்துச் சொல்லப்பட்டது. ஆகவே தசரத மன்னன் அயோத்தியிலிருந்து ஒரு தூதனை இராமனிடம் தன்னுடைய கனவின் உண்மையை அறியும்படி அனுப்பினன். அத்தூதன் ராமனை அளவில்லாப் பெருந்துக்கத்துடன் சந்தித்தான். பிறகு தனது சகோதரனகிய வாலியினிடமிருந்து தன்னுடைய இராஜ்ஜியமான கிஷ்கிந்தையைத் திரும்பிப் பெறுதற்காக இராமனது உதவியை நாடிவந்த சுக்ரீவனிடம் இராமன் ஓர் உடன்

படிக்கையைச் செய்து கொண்டான். இதற்குள் இந்தப் பெரிய வித்தியாதரனின் சேனுதிபதியாகிய ஹனுமானை சீதையைப் பற்றிய சமாச்சாரங்களையும், அவளை வெகு சீக்கிரம் இராமன் மீட்க வருவான் என்ற செய்தியையும் அவளுக்குத் தெரியப்படுத்தும் பொருட்டு இலங்கைக்கு அனுப்பினார்கள். இதற்குப்பின் வரும் சம்பவங்கள் (கதை) ஏறக்குறைய வால்மீகியினுடைய கதையுடன் ஒத்திருக்கின்றன. விபீடணன் அகெளரவமான (ஈனமான) நடத்தையையுடைய தன் அண்ணனாகிய இராவணனிடம் வெறுப்புக் கொண்டு, சீதையை இராமனிடம் மிக்கப் பெருந்தன்மையுடன் சேர்பிக்குமாறு, இராவணனைத் தன்னால் இயன்ற வரையில் தூண்டினன். ஆனல் இராவணன் இவை போன்ற அறவுரைகளுக்குச் செவி சாய்த்தானில்லை. மேலும் விபீஷணன் தன் நாடு கடத்தப்பட்டனன். விபீடணன் தருமவானை இராமனிடம் அடைக்கலமாயினன். இராமன் சண்டை செய்யும்படி நேர்ந்தது. இராவணனிடம் சீதையின் பிறப்பு வரலாற்றைப்பற்றிச் சிறிது நேரத்திற்குப் பிறகு அறிவித்தார்கள். இராவணன் சீதையைத் திருப்பி மிகவும் சந்தோஷத்துடனே இராமனிடம் அனுப்பலாம் எனினும் அவன் அங்ஙனம் செய்தலை கோழைத்தனத்தினலே செய்தான் என்று தப்பெண்ணங் கொண்டுவிடுவார்களோ என்று பயந்தானுகலின் சண்டைக்குத் தயாராயினன். கடும்போர் நடந்தது. இராமனை எதிரில் கண்ட பொழுது கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கினன் இலங்கை வேந்தன். ஐயகோ! கடைசியில் போர்க்களத்தில் மாண்டு விழுந்தான் இராவணன். ராமன் ஜெயமடைந்தான். இராமன் இலங்கையைத் தனது நண்பனும் துணைவனுமான விபீடணனுக்குத் தந்தனன். பின்பு தனது பத்தினியாகிய சீதையுடன் தன் நாட்டிற்குச் சென்றான்.

சுருங்கக் கூறின் நாம் மேலே சொல்லியது ஜினஸேனருடைய இராமாயணக் கதையாகும். இதில் சீதை இராவணனுக்கு மண்டோதரியிடத்தில் பிறந்த பெண் என்று தெரிகிறது. இது ஒரு முக்கியமான விஷயம். இதைப் போன்ற ஒரு வரலாறு காஷ்மீர பாஷையிலுள்ள அத்புத இராமாயணத்திலும் காணப் பெறுகின்றது. (Sir George Griesson) ஸர். ஜியார்ஜ் கிரியர்ஸ்ஸன் என்பவர் கூறும் கதையின் சுருக்கத்தைக் கீழே தருகிறோம்.

“ஒரு காலத்தில் லக்ஷ்மியின் பணியாளர்களால் அவமதிக்கப்பட்ட நாரதர் அவளை பூமியில் ஒரு ராக்ஷஸியாக பிறக்கும்படிச் சபிக்கிறார். அவள் அந்தச் சாபத்தை ஏற்றுக்கொண்டு எந்த ராக்ஷஸி காட்டில் வாழ்கின்ற முனிவர்களால் தங்கள் சரீரத்தினின்றும் எடுக்கப்பட்ட இரத்தத் துளிகளால் ஆகிய ஒரு கலச ரத்தத்தைக் குடிக்கிறாளோ அந்த ராக்ஷஸியின் அகட்டில் பிறப்பதாகக் கூறினள். இவ்வாறு பிறந்தால் அவள் ராக்ஷஸி வயிற்றில் தோன்றினலும் ராக்ஷஸியில் உண்டானவள் ஆக மாட்டாள்.

ராக்ஷஸனுகிய இராவணன் தன் தப வலிமையால் உலகத்திற்கே தீ மூட்டுகிறான். பிரமன் நடுநடுங்கி இராவணனுக்கு ஒரு வரத்தைக் கொடுத்து அவனுடைய தவத்தை நிறுத்தும்படிச் செய்கி

ருர். இராவணன் தன்னை எத்த கைய தேவர்களும் அசுரர்களும் கொல்ல முடியாத வரத்தினைப் பெறுகிருன். இவ்வரத்தின் மகி மையால் உலக முழுவதையும் தன் வசமாக்க முயல்கிருன்.

ஒரு நாள் இராவணன் தண்டக வனத்தில் செல்லும் பொழுது அங்கே அக்கினி மத்தியில் தவம் செய்கின்ற ரிஷிகளைப் பார்க்கின் ருன். இவர்களை நாம் இன்னும் வெல்லவில்லையே என்று நினைக்கி ருன். ஆனல் அவர்களைக் கொல்ல அவனுக்கு மனம் வரவில்லை. அவர்களை வென்றதற்கு அறிகுறி யாக தன்னுடைய அம்பினுல் அவர்கள் ஒவ்வொருவர் உடலி னின்றும் சிறிது இரத்தத்தை எடுத்து ஓர் கலசத்தில் சேகரித் தான்.

அங்கிருந்த ரிஷிகளில் ஒருவர் கிரித்ஸமன் என்பவர். அவருக்கு நூறு பிள்ளைகள் இருந்தார்கள். ஆயினும் அவருடைய மனைவி தனக்கு லக்ஷ்மியை பெண்ணுக அவதரிக்க வேண்டும் என்று வேண்டினுள். அவளுடைய வேண்டுகோளைப் பூர்த்தி செய்து வைப்பதற்காக அந்த ரிஷி பின் வருமாறு செய்து வந்தார். ஒவ் வொரு நாளும் மந்திரம் சொல்லி மூஞ்சாம் புல்லினுல் பாலை ஒரு கலசத்தில் தெளித்துக் கொண்டே வந்தார். இராவணன் அங்கே வந்தபொழுது அவர் வெளியே சென்றிருந்தபடியால் இராவ ணன் அந்த கலசத்தை எடுத்து அதிலேயே ரிஷிகளுடைய ரத்தத் தை நிரப்பினுன். அவன் அத்தக் கலசத்தை எடுத்துச் சென்று தன் மனைவியாகிய மண்டோதரி கையில் கொடுத்து "இதில் இருப் பது விஷத்தைவிட அதிக கொடிய தாகையால் இதை நீ வெகு பத்திர மாகக் காப்பாற்ற வேண்டும்" என்று சொன்னுன்.

இராவணன் தன்னுடைய தவத் தின் சக்தியால் மிகவும் பராக்கிரம சாலியாகி தன்னுடைய தேசத்தை யும் மனைவியையும் கூட நினையா மல் ஹிமாலயம் மேரு, விந்தயம், ஆகிய மலைகளிலும் அப்பிரதேசங் களிலும் சஞ்சரித்துக் கொண்டு அங்கே வசித்த தேவர், தானவர், யக்ஷர், கந்தர்வர் ஆகியவர்களின் பெண்களுடன் விளையாடிக் கொண்டும் இன்பம் அனுபவித் துக் கொண்டும் காலம் கழிப்பா னயினன். இதையறிந்த மண் டோதரி மனம் சகியாதவளாய் உயிரை இழக்கத் தீர்மானித்து இராவணன் தன்னிடத்து வைத் துப்போன கலசத்தில் இருந்ததை குடித்தாள். அது விஷத்தைவிடக் கொடியதென்று இராவணன் சொன்னபடியால் அக்கூற்றை உண்மை என்று நம்பி அதைப் பருகினுள். ஆனல் அவளுக்கு எவ்வித ஏதமும் உண்டாயிற் றில்லை. நாளடைவில் தான் கருப்ப முற்றதைக் கவனித்தாள். தன் னுடைய கணவன் தன்னைவிட்டு சுமார் ஒரு வருஷம் வரையில் நீங்கி இருக்கையில் தனக்கு இவ வாறு நேர்ந்ததே என்று நடுங்கி னுள். உடனே அவள் குருக்ஷேத் திரத்திற்கு யாத்திரைப் போகின்ற வள் போலச் சென்று அங்கே ஒரு பெண் குழந்தையைப் பெற்று அதை பூமிக்குள் மறைத்து வைத்து விட்டு ஸரஸ்வதி நதியில் நீராடி ஒரு பாவமும் அறியாத வள் போல தன்னிடத்திற்குத் திரும்பினுள்.

பிறகு ஜனகன் தன்னுடைய பொன் கலப்பையால் நிலத்தை உழும் பொழுது அங்கே அக்குழந் தையைக் கண்டெடுத்து சரஸ்வதி

தேவியின் ஆஞ்ஞையால் அக் குழந்தையை வளர்த்துவந்து அவ ளுக்குச் சீதை என்னும் பெயரும் இட்டான்.

இந்தக் கதையை, ஸர். ஜார்ஜ் கிரியர்ஸ்ஸன் என்பவர் பிரிட்டிஷ் ஜர்னல் ஆப் திராயல் ஏஷ்யாட் டிக் ஸொஸைடி (1921)' The British Journal of the Royal Asiatic Society' (1921) என்னும் பத்திரிகை யில் எழுதிவிட்டு, முடிவில் பின் வருமாறு கூறுகின்றார்: "காஷ் மீரி பாஷையிலுள்ள இராமாய ணத்தில் சீதை தன்னை அபகரித் துச் செல்கின்ற இராவண னுடைய மனைவி மண்டோதரியின் புத்திரி என்று குறிப்பிடப்படு கிறாள்.

இந்த விசித்திரமான கூற்றுக்கு ஒரு பழைய ஆதரவு கிடைக்குமா என்று நான் வெகுகாலம் தேடி னேன். இப்பொழுது அற்புத இராமாயணம் என்று சொல்லப் படும் காஷ்மீர பாஷையிலுள்ள ஒரு முழு வரலாறு கிடைத்தது"

இதனால் ஸர் ஜியார்ஜ் என்பவ ருக்கு ஜைன ஆசிரியரான ஜின ஸேனர் கூறும் இராமாயணம் தெரியவில்லை என்று நன்கு புலப் படுகின்றது. அந்த வரலாறு இயற்கைக்கு விரோதமில்லாம லும் நியாயத்தோடு பொருத்த முடையதாகவும் காணப்படுகின் றது. அந்த வரலாற்றிலும் சீதை இராவணனுக்கு மண்டோதரி யிடத்துப் பிறந்த புத்திரி என்று எழுதப் பெற்றுள்ளது. ஆனல் மந்திரிக்கப்பட்ட பாலையோ ரத் தத்தையோ குடித்ததனல் ஆச்சரி யமாக உண்டான குழந்தை என்று கூறப்படவில்லை. வால் மீகியும் கூட இந்த உண்மையை வெளிப்படையாகச் சொல்லாமல் குறிப்பாகத் தெரிவிக்கின்றார். சீதை ஜனகனுடைய சொந்த குமாரத்தியாகக் கூறப்படவில்லை. உழப்பட்ட நிலத்தில் கண்டு எடுக் கப்பட்டதாக அறிவிக்கப்படுகின் றது.

நாம் இப்பொழுது ரவிசேன ரும் அவரைப் பின் பற்றி பம்ப னும் கூறுகின்ற வரலாற்றை ஆராய்வோம். இந்த வரலாற் றின்படி ஜனகன் சீதையின் வளர்ப்புத் தந்தை மட்டுமல்லாமல் அவளைப் பெற்ற தந்தை என்றும் கூறப்படுகிறது. சீதை ஜனக னுடைய புத்திரி என்று கூறும் வரலாறு இது ஒன்றுமட்டுமே போலும்.

முக்கிய அம்சங்களில் இந்தக் கதை ஜினஸேனர் கூறுவதோடு ஒத்திருக்கின்றது. வித்தியாதரர் கள், அவர்களின் உற்பத்தி, அவர்களுடைய சரீர சக்தி, மனோ நிலைமை, அவர்கள் அனுஷ்டித்து வந்த ஜைன சமயத்தின் கொள் கை, ஆகிய இவற்றின் விவரங் கள் இரண்டு வரலாறுகளிலும் ஒரே விதமாக இருக்கின்றன. "சீதை பிறந்தால் இலங்கை அழி யும்" என்கிற ஒரு துர் நிமித்த மான வாக்கியத்தோடு கதை ஆரம்பமாகிறது. இந்த துர் நிமித் தத்தைக் கேட்ட இராவணேஸ்வ ரனுடைய சகோதரனை விபீஷ ணன் தீங்கு வராமற்படிக்குத் தடுக்க முயல்கிறான். இராமனும் சீதையும் உண்டாகாதபடிக்கு தசரதனையும் ஜனகனையும் அழிக்க எண்ணம் கொள்கிறான். ஆனல் இவனுடைய எண்ணம் நாரதரால் தசரதனுக்கும் ஜனகனுக்கும் அறிவிக்கப் படுகின்றது. முன் எச்சரிக்கையாகவே தசரதனும் ஜனகனும் தங்களைப் போன்ற உருவங்களை தங்கள் சிம்மாதனங்

களின் மேல் அமைத்துவிட்டு மாறு வேடம் பூண்டு சிலகாலம் வெளிநாடுகளில் வசிக்கின்றனர். உண்மையை அறியாத விபீஷணன் போலி உருவங்களை அழித்துவிட்டு பெருமிதத்தோடு செல்கின்றான். தசரதனும் ஜனகனும் தங்களுடைய பிரயாணத்தில் கண்ட்க மங்கலபுரம் என்கின்ற ஊரை அடைகின்றனர். அங்கே கைகேயினுடைய சுயம்வரத்திற்காக விமரிசையான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. அவர்கள் இருவரும் சுயம்வர மண்டபத்திற்குச் சென்று அங்கே வீற்றிருக்கின்றார்கள். தசரதனைக் கண்ட கைகேயி அவனுக்கு மாலையிடுகின்றாள். சுயம்வரத்திற்கு வந்திருந்த வேறு அரசர்கள் தசரதன் மேல் பொறுமை கொண்டு அவனை எதிர்த்து தாக்குகின்றார்கள். சண்டையில் தசரதனுடைய ரதசாரதி இறந்து விடுகிறான். உடனே கைகேயி வெகு சாமர்த்தியமாக ரதத்தை ஓட்டிக் கொண்டு தன் கணவனை ஆபத்தினின்றும் மீட்டு வருகின்றாள். தசரதனுக்கு கைகேயினிடத்தில் பேரன்பும் பெரு மகிழ்ச்சியும் உண்டாகின்றன. இவள் செய்த பேருதவிக்கு என்ன கைம்மாறு செய்வதென்று தோன்றவில்லை. "உனக்கு எந்த வரம் வேண்டுமானாலும் கேள், யான் அதைத்தர சித்தமாயிருக்கிறேன்" என்று தசரதன் கூறினான். அதைக் கேட்ட கைகேயி "தாங்கள் அன்புடன் கொடுக்கும் வரத்தை எனக்கு வேண்டும் பொழுது பெற்றுக்கொள்ளுகிறே"னென்று மறுமொழி கூறினாள். தசரதன் வேறு மனைவிகளையும் மணந்து இராமன் இலக்குமணன் பரதன் சத்துருக்கனன், ஆகிய நான்கு குமாரர்களையும் பெறுகின்றான்.

ஜனகன் மிதிலைக்குத் திரும்பி விதேகி என்கிறவளை மணந்து அவளிடம் இரட்டைக் குழந்தைகளான சீதை என்னும் பெண்ணையும் பிரபாமண்டலன் என்கின்ற பிள்ளையையும் பெறுகின்றான். பிள்ளையாகிய பிரபாமண்டலனை குழந்தையாயிருக்கும் பொழுதே ஒரு வித்தியாதரன் தூக்கிச் சென்று இரதநூபுர சக்கரவாளபுரம் என்கிற நகரில் விட்டுச் செல்கின்றான். அவ்விடத்தில் அரசாண்டுவந்த வித்தியாதர அரசன் அந்தக் குழந்தையைத் தன் மகனாகவே ஏற்றுக் கொண்டு வளர்த்து வருகின்றான். இவ்வாறிருக்கையில் கிராதகர்கள் என்னும் ஒரு கூட்டத்தினர் ஜனகனுடைய ராஜ்யத்தின் மேல் படை எடுத்துச் செல்கின்றனர். ஜனகன் தசரதனுடைய உதவியை வேண்டுகின்றான். தசரதன் தன்னுடைய குமாரர்களுள் இராமனையும் இலக்குமணனையும் அனுப்புகின்றான். படையெடுத்து வந்தவர்கள் தோற்கடிக்கப்பட்டு துரத்தப்படுகின்றனர். ஜனகன் மகிழ்ச்சியுற்று தன்னுடைய குமாரி சீதையை இராமனுக்கு விவாகம் செய்து தர விரும்பினான். சீதையின் அழகைக் கண்ட நாரதர் அவளுடைய உருவத்தை ஒரு கிழியில் தீட்டி அதை பிரபாமண்டலன் அடிக்கடி வந்து உலாவும் ஒரு தோட்டத்தில் வைத்துச் சென்றார். இந்தப் படத்தைக் கண்ணுற்ற பிரபாமண்டலன் சீதையின் மீது ஆசை கொள்கின்றான். அவனை வளர்த்து வருகின்ற வித்தியாதர அரசன் ஒரு உபாயத்தினால் ஜனகனைத் தன்னுடைய நகரத்திற்குக் கொண்டுவந்து சீதையை தன்னுடைய ஸ்வீகார புத்திரனாகிய பிரபாமண்டலனுக்கே தர வேண்டுமென்று வற்புறுத்துகின்

ருன். ஜனகன் சீதையை இராமனுக்குக் கொடுப்பதாக முன்னுடியே நிச்சயமாகிவிட்டது என்று கூறினுன். இதைக் கேட்ட வித்தியாதர அரசன் ஒரு உபாயத்தைச் சொல்லுகிருன், அதாவது இராமன் ஒரு வித்தியாதரவில்லை முறிப்பானுல் அவன் சீதையைப் பெறலாம். இன்றேல் அவளை பிரபாமண்டலனுக்கே தரவேண்டுமென்பதாம். இராமன் வில்லை முறித்து வெற்றி பெருகின்ருன். இராமனுக்கும் சீதைக்கும் உள்ள உறவை அறிந்து மன ஆறுதல் அடைகிருன்.

தசரதன் உலகப்பற்றைத் துறக்க எண்ணி இராமனுக்குப் பட்டம் சூட்டுகின்ருன். கைகேயி முன்பு தனக்கு தசரதன் கொடுத்த வரத்தைக் கேட்க நினைக்கிருள். ஆகவே அவள் தசரதனை "இந்த சந்தோஷ காலத்தில் தாங்கள் என்னுடைய மனதையும் சந்தோஷிக்கச் செய்ய வேண்டும். முன்பு தாங்கள் எனக்குக் கொடுப்பதாகச் சொல்லிய வரத்தை இப்பொழுது கேட்கின்றேன். அதாவது என் மகனை பரதனை அரசனுக்க வேண்டுகின்றேன்" என்ருள். இதைக் கேட்ட தசரதனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. என்ன செய்வான் பாவம்! இதைப் பார்த்துக் கொண்டிருந்த இராமன் உடனே தன் பதவியைப் பரதனுக்குத் தந்து கானகத்திற்கேகப் புறப்பட்டான். சீதையும், இலக்குமணனும் உடன் சென்ருர்கள். அவர்கள் காரன் என்கிறவன் அரசாளும் பாதாள இலங்கையை அடைந்தார்கள். அங்கே இலக்குமணன் ஒரு மந்திரவாளைப் பெற்ருன். இந்த மந்திரவாளுக்காக காரன் என்பவனுடைய குமாரன் சம்புகன் என்பவன் பன்னிரண்டு வருடங்கள் தவங்கிடந்தான். இந்த சம்புகன் இலக்குமணனுல் கொல்லப்படவே காரன் என்பவனுக்குக் கோபம் உண்டாயிற்று. சம்புகனுடைய தாய் சந்திரவகி என்பவள் இராவணனுடைய தங்கை. சம்புகன் இறந்ததைக் கேள்விப்பட்ட இராவணன் காரன் என்பவனுக்கு உதவி செய்வதற்காக காட்டிற்கு வருகின்ருன். அங்கே இராமனையும் சீதையையும் கண்ட அவன் சீதையின் மீது மோகங் கொள்கிருன். உடனே அவன் தன் தவ மகிமையால் ஒரு சக்தித் தேவதையை அழைத்து தான் எவ்வாறு சீதையை எடுத்துச் செல்லக்கூடும் என்று வினவினுன். அத் தேவதை பின்வருமாறு விடை பகர்ந்து, "இலக்குமணன் காரன் என்பவனேடு சண்டையிடுகையில் பெரிய ஆபத்து நேரிட்டால் உடனே சங்கை ஊத வேண்டும் என்று இராமன் கூறியிருக்கின்ருன். ஆகையால் நீ சிறிது தூரம் சென்று சங்கை ஊதினுல் அதனைக் கேட்டு இராமன் சீதையை விட்டு விட்டு ஓடிப் போவான். அப்போது நீ அவளை எளிதில் அடையக்கூடும்" என்பது. சக்தி தேவதை பகர்ந்தபடியே இராவணன் செய்யவே சீதை தனியாய் நின்றனள். உடனே அவன் அவளைத் தன் விமானத்தில் ஏற்றிச் சென்ருன். இச்சூது இராமனுக்குப் பிறகு வெளியாயிற்று. இராவணனுக்கு சீதையை இணங்கும்படிச் செய்ய முடியவில்லை; பயமும் பலிக்கவில்லை.

கதையின் மற்றையப் பகுதி ஒரே மாதிரியா யிருக்கின்றது. சீதையின் தம்பியான பிரபாமண்டலன் இராமனுக்கு பெரிய உதவியைச் செய்ததாகத் தெரிகின்றது. சுக்கிரீவன், ஹனுமான்,

இராவணனுடைய தம்பியாகிய விபீடணன் ஆகியவர்கள் இராமனுக்கு நண்பர்களாகின்றனர். பிறகு யுத்தம் நடைபெறுகின்றது. இராவணன் இலக்குமணன் கையால் கொல்லப்படுகின்ருன். பிறகு இராமனும் இலக்குமணனும் சீதையுடன் அயோத்திக்குத் திரும்பி வந்து இராஜ்ஜியத்தைப் பெறுகின்றனர். வால்மீகி வரலாற்றிற்கும் ஜைனர்களின் வரலாற்றிற்கும் உள்ள ஒரு முக்கியமான மாறுபாட்டை இங்கு கூற வேண்டியது அவசியமாயிருக்கின்றது. இராவணனை இலக்குமணன் கொன்ருன் என்று ஜைன வரலாறுகள் கூறுகின்றன. ஆனல் இராவணனை இராமன் கொன்ருன் என்று வால்மீகி இராமாயணம் கூறுகின்றது.

மேலே கூறப்பட்ட எல்லா வரலாறுகளிலும் சீதையின் பெற்ருேர்களைப் பற்றிய விவரம் ஒன்ருக காணப்படவில்லை. வால்மீகி அதைப்பற்றி ஒன்றும் கூறவேயில்லை. அதை ஒரு இரகசியம் போல விட்டு விடுகின்ருர். ஜினஸேனர் கூறுகிறபடி சீதை இராவணனுக்கும் மண்டோதரிக்கும் பிறந்ததாகத் தெரிகின்றது. காஷ்மீர பாஷையிலுள்ள அத்புத இராமாயணம், மண்டோதரி ரிஷிகளின் இரத்தத்தை உண்டதால் சீதையைப் பெற்ருள் என்று சொல்லுகின்றது. ரவிசேனரும் பம்பனும் சீதையை ஜனகனுடைய குமாரத்தியே என்று எழுதியுள்ளார்கள். ஆனல் சீதையின் சகோதரனன பிரபாமண்டலன் என்பவன் முதலில் இராவணனைப் போல ஒழுகினுலும் அதிவிரைவில் தன்னைத் திருத்திக் கொள்கிருன். பௌத்த ஜாதகக் கதை சீதையை இராமனுடைய தங்கை என்றும் பிறகு அவனுக்குப் பட்ட இராணியானுள் என்றும் அறிவிக்கின்றது.

இந்தவிதமான மாறுதல்களையும் வித்தியாசங்களையும் உடைய கதைகளுக்கு இடையே சரித்திர சம்பந்தமான சில உண்மைகள் நமக்குக் கிடைக்கின்றன.

ஜைன வரலாறுகளில் கூறப்படும் வித்தியாதரர்கள் என்பவர்கள் இந்தியர்களுள் ஒரு முக்கியமான வகுப்பைச் சார்ந்தவர்களென்று தெரியக் கிடக்கின்றது. அவர்கள் உயர்ந்த நாகரீகத்தை அடைந்தவர்களாயும் விஞ்ஞான சாஸ்திரங்களிலும் கருவி நூற்களிலும் தேர்ச்சியுடையவர்களாயும் திகழ்ந்தனர். அவர்கள் விமானமென்று சொல்லப்படும் வான ஊர்திகளில் ஆகாயத்தில் செல்வார்கள். ஒரு காலத்தில் இராஜீய மேம்பாட்டில் வட இந்தியாவிலிருந்த க்ஷத்திரிய வம்ஸத்தினரைக் காட்டிலும் இவர்கள் சிறந்து விளங்கினதாகவும் தெரிகின்றது. வித்தியாதரர்கள் சங்கீதத்தில் பெயர் பெற்றவர்கள். இதைத் தவிர காந்தர்வ தத்தை என்னும் ஓர் வித்தியாதர மங்கையை சீவ்கன் இசையில் வென்ருனென்பதாலும் கதா சரித சாகரம் என்னும் நூலில் காணப்பெறும் உதயணனுடைய சரித்திரத்தாலும் இவ்விஷயம் நன்கு புலனுகும்.

அனேக நூற்ருண்டுகளுக்கு முன்பு காசி, கோசலம், விதேகம் என்ற நாடுகளில் இருந்த க்ஷத்திரிய வம்சத்தினர் ஒரு விதமான சிறந்த கொள்கையை உடையவர்களாய் இருந்ததாகத் தெரிகின்றது. அவர்கள் ஜீவ ஹிம்சையோடு கூடிய சடங்குகளை ஒப்புக் கொள்

ளவில்லை. அவர்கள் கீழ்த்திசை ஆரியர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். இந்த பூர்வீக க்ஷத்திரியர்களே ஜைன சமயத்தைத் தழுவினவர்களாயிருந்திருக்க வேண்டும். மதவிஷயங்களிலும் லௌதீக விஷயங்களிலும் விசாலமான நோக்கத்தை உடையவர்களாகையால் தங்களுக்குப் பக்கத்திலிருந்த ஆரியர் அல்லாத வித்தியாதரர்களிடத்திலேயும் தங்கள் மதத்தைப் பரவச் செய்தார்கள். வெகு சீக்கிரத்தில் ஜீவ ஹிம்ஸைக்கு விரோதமான இந்தக் கொள்கை தெற்கே பரவலாயிற்று. வித்தியாதரர்கள் அறிவிலும் நாகரிகத்திலும் மேம்பாடடைந்திருந்தபடியால் சமத்துவத்தையும் அஹிம்ஸையையும் அடிப்படையாக உள்ள கொள்கைகளை வரவேற்றார்கள். நாளடைவில் இரு கூட்டத்தாருக்கும் ராஜீய விஷயங்களிலும் விவாக விஷயங்களிலும் நேசப்பான்மை ஏற்பட்டது.

அந்தக் காலத்தில் யாகத்தை அடிப்படையாகக் கொண்ட மதத்தினர்களுக்குள்ளேயும் சில மாறுதல்கள் உண்டாயின. உபநிஷத்துக்களும் ஞான காண்டமென்று சொல்லப்படும் கொள்கையும் அக்காலத்திலே உண்டாயின. புது கொள்கைகளும் பழைய கொள்கைகளும் ஒருங்கே எங்கும் பரவின. வேத சமயம் புத்துயிர் பெற்று, சங்கரர் காலத்தில் பௌத்த சமயம் மறையவே அது தலையோங்கிற்று. அக்காலத்தில் பிராம்மணர்கள் யாகங்கள் செய்வதை மறுபடியும் ஆரம்பித்து அதற்கு விரோதமாக நின்ற ஏனைய சமயத்தினரையும் கோட்பாடு உடையவர்களையும் இழித்துக்கூறி அவர்களை மிகக் கேவலமான முறையில் வருணித்துள்ளார்கள். ஒரு வேளை வால்மீகியின் இராமாயணம் இக்காலத்தில் எழுதப்பட்டிருத்தல் கூடும்.

வித்தியாதரர்களை இந்து சமய இதிகாசங்கள், இராக்ஷசர்கள் என்றும் வானரங்கள் என்றும் கேவலமாக இழித்துக் கூறியிருந்தாலும் அவர்கள் உண்மையாகவே நாகரீகத்திலும் அறிவிலும் சரீர சக்தியிலும் மனோபலத்திலும் சிறந்தவர்களாயும் வானவூர்தி முதலிய யந்திரங்களை உடையவர்களாயும் இருந்தார்களென நம்புவது மிகையாகாது. ஆனால் அவர்களுடைய நாகரிகம் முதலியவை எவ்வளவு உன்னத நிலையை அடைந்திருந்தனவென்று திடமாக சொல்ல முடியவில்லை. இவ்விஷயம் மிகவும் அருமையானதாகவும் முக்கியமானதாகவும் இருக்கிறபடியால் இதை இந்தியச் சரித்திர நூல்வல்லார் ஆராய்ச்சி செய்ய வேண்டியது அவசியம்.

* * *



# அன்புப் பரிசு

[ராஜ்யஸ்ரீ]

நான் ஒரு ஜோசியப் புலி, நான் சொல்லுவதில் பிசகே இருக்காது. இப்பொழுது ஒரு ஜோசியம் சொல்லுகிறேன். சரியாக இருக்கிறதா இல்லையா என்று பாருங்கள். நீங்கள் ஒரு பெண்ணைக் காதலிக்கிறீர்கள். ஆனால் அவளை யடைய வழி தெரியாமல் விழிக்கிறீர்கள். இல்லையா? (உண்மையைச் சொல்லி விடுங்கள். உங்கள் முகம் அசடு தட்டுவதிலிருந்தே என் வாக்கு உண்மை என்பது தெரிந்து விட்டதே!)

போனால் போகிறது. இதற்காக நீங்கள் வருத்தப் படுவானேன்? நானிருக்க உங்களுக்குப் பயமென்ன? நீங்கள் விரும்பும் பெண்ணையடைவதற்கு நான் வழி சொல்லித் தருகிறேன். பயப்படாதீர்கள்.

அடுத்த தடவை நீங்கள் அவளைச் சந்திக்கும்போது ஞாபகமாக ஒரு முகம் பார்க்கும் கண்ணாடியையும் ஒரு சீப்பையும் அவளுக்குக் கொடுங்கள். அதற்குப் பிறகு என்ன நடக்கிறதென்று பாருங்கள். உங்களை அவள் நடத்தும் முறையிலேயே ஒரு அதிசயமான மாறுதல் இருப்பதைக் காண்பீர்கள்.

பெண்கள் இந்த உலகத்தில் விரும்புவது இரண்டே இரண்டு தான். ஒன்று முகம் பார்க்கும் கண்ணாடியும், சீப்பும். இரண்டாவது, தம்மைப்பற்றிப் பிறர் பேசும் புகழ்ச்சி மொழிகள்.

ஒரு பெண்ணிடம் ஒரு கண்ணாடியையும் சீப்பையும் கொடுத்து விட்டால் பிறகு அவள் இந்த உலகையே மறந்து விடுவாள். முனி சிரேஷ்டர்கள் பகவானுடைய நாமத்தை உச்சரிப்பதில் தம்மை மறந்து விடுவதாக நாம் படித்திருக்கிறோமல்லவா? அதே மாதிரிதான் இந்தப் பெண்களும். அவர்களுக்குக் கடவுள், கண்ணாடியும் சீப்பும்தான்.

நாள் முழுவதும் வேண்டுமென்றாலும் சீப்பையும், கண்ணாடியையும் வைத்துக் கொண்டு ஒரு பெண் உட்கார்ந்திருப்பாள். தன் கூந்தலைப்பலதினுசுகளிலும் வாரிப் பின்னிக் கொண்டு தன் அழகைத் தானே கண்டு வியப்பாள். (தன் அழகை வியப்பதற்கு இன்னொருவர் வரும் வரை தன்னைத் தானே வியந்து கொள்ள வேண்டும்!)

ஆகவே நீங்கள் அவளுக்கு ஒரு கண்ணாடியை வெகுமானம் செய்து விட்டால் உங்களிடம் அவளுக்கு அத்யந்தக் காதல் உண்டாகி விடும். (கல்யாணமான பிறகுகூட கண்ணாடிக்கு வேலை இருக்கிறது. உங்களுக்கு உங்கள் மனைவியைப் பிடிக்கவில்லையென்றாலோ, அல்லது ஆபீஸ் வேலையில் ஈடுபட்டிருக்கும்போது உங்கள் மனைவி உங்களைத் தொந்தரவு செய்வாள் என்று தோன்றினாலோ ஒரு கண்ணாடியை அவளிடம் கொடுத்து விடுங்கள். பிறகு உங்கள் அருகிலேயே அவள் வர மாட்டாள்!)

இரண்டாவதாகப் பெண்கள் விரும்புவது புகழ்ச்சிப் பேச்சு என்று சொன்னேனே! இதையும் நீங்கள் மறந்துவிடக்கூடாது.

சில இளைஞர்கள் தாங்கள் காதலிக்கும் பெண்களிடம் என்னென்ன பேசவேண்டும், எப்படியெப்படிப் பேசவேண்டும் என்று ஒன்றும் தெரியாமல் ஏதோ 'தத்துப்பித்து' என்று உளறி விடுகிறார்கள். ஆகையால் நீங்கள் இந்த விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

கூடிய மட்டும் நீங்கள் உங்களைப் பற்றியே அவளிடம் பேசக்கூடாது. சிலர் 'காலேஜில் படித்த போது எல்லாப் பரீக்ஷைகளிலும் நான்தான் முதலில் தேறினேன்' என்று சொல்லித் தங்கள் காதலியை வசப்படுத்தப் பார்க்கிறார்கள். மற்றும் சிலர் 'நான் ரொம்ப சாமார்த்தியசாலி, ரொம்பக் கெட்டிக்காரன்' என்று தங்கள் காதலியிடம் சொல்லிப் பார்க்கிறார்கள். ஆனால் இவர்களெல்லாம் கடைசியில் ஏமாந்து போவதை நாம் பிரத்தியக்ஷமாகப் பார்க்கிறோம்.

மற்ற எல்லாப் பரீக்ஷைகளிலும் முதன்மையாகத் தேறிய இவர்கள் ஏன் தங்கள் காதல் பரீக்ஷையில் தோல்வி அடைகிறார்கள் தெரியுமா? !பெண்கள் தங்களைவிட கெட்டிக்காரனான ஒருவனை மணக்க ஒரு போதும் விரும்ப மாட்டார்கள். அவர்கள் தங்கள் பரீக்ஷையில் புத்திசாலித் தனத்திற்கும் மூளைக்கும் 'ஸைபர்' மார்க்குதான் கொடுக்கிறார்கள்.

ஒரு பெண் விரும்புவதெல்லாம் தன் அழகை வியப்பவனும், தான் கொடுத்த வேலையை மறு பேச்சில்லாமல் — தன் சொந்த மூளையை உபயோகப் படுத்தாமல் — சரிவரச் செய்பவனுமாகிய கணவனைத்தான்.

நீங்கள் சிறந்த அரசியல் ஞானியாயிருந்த போதிலும் சரி, பிரபல விஞ்ஞான சாஸ்திரியாயிருந்த போதிலும் சரி, பெயர் பெற்ற எழுத்தாளராயிருந்த போதிலும் சரி, உங்களை ஒரு பெண்ணும் அதற்காகக் காதலிக்க மாட்டாள். அவள் விரும்புவதெல்லாம், 'நீங்கள் அவள் கொடுக்கும் வீட்டு வேலையை முணுமுணுக்காமல் செய்வீர்களா? அழும் குழந்தையைக் கையிலெடுத்துக் கொண்டு உங்களுக்குச் சமாதானப் படுத்தத் தெரியுமா?' என்பதுதான்.

ஆகையால் உங்களைப் பற்றிய பேச்சையே அவளிடம் எடுக்காதீர்கள். அவளுடன் பேசும் போதெல்லாம் அவளைப்பற்றியே பேசுங்கள். அதுவும் அவளை வானளாவப் புகழ்ந்து தள்ளுங்கள். காசு பணமா செலவு? உங்களுக்குக் காரியம் கைகூட வேண்டியதுதானே?

'உண்மை' என்னும் பதம் எந்தக் காதலியின் அகராதியிலும் கிடையாது. ஆகையால் உங்கள் காதல் சித்திக்கும் வரை உண்மை பேசிப் பழக்கமிருந்தால் — கொஞ்சம் மறந்து விடுங்கள். உண்மை பேசுபவர்களைக் கண்டால் இந்தப் பெண்களுக்குக் கொஞ்சமும் பிடிப்பதே கிடையாது.

ஆகையால் பொய் பேசுவதை ஒரு கலையாக அப்பியாஸம் செய்யுங்கள். அதுவும் பொய்யை உண்மை போல் பேச நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும். உங்கள் காதலியிடம், "ஆஹா! உன் அழகைப் பார்க்கும்போதே என் கண் கூசுகிறதே! நீ ரம்பையின்

அவதாரமோ? ஆஹா! என்ன நடை! என்ன உடை! என்ன ஒய்யாரம்!'' என்றெல்லாம் சொல்லுங்கள். (இப்படியெல்லாம் நீங்கள் பேசுவதற்குத் தயார் செய்து கொள்ளுவதற்காகத்தான் நாவலாசிரியர்கள் பல காதல் கதைகளை எழுதி அவற்றில் இத்தகைய ரஸமான காதல் சம்பாஷணைகளையும், வர்ணனைகளையும் புகுத்தியிருக்கிறார்கள்) உங்கள் காதலியைப் பார்த்து, ''உன்னைப்போன்ற இவ்வளவு அழகுள்ள பெண் இந்த உலகத்திலேயே இருக்க மாட்டாள். அழகே உருவெடுத்து வந்தாற் போலல்லவோ இருக்கிறாய்?'' என்று கயிறு திரியுங்கள். (அவளுடைய அண்டங்காக்கை போன்ற நிறத்தையும், மண்டையின் முன் பக்கம் வீங்கியிருப்பதையும் பற்றி கல்யாணமான பிறகு சாவகாசமாக அவளிடம் சொல்லிக் கொள்ளலாம்) உங்களுடைய புகழுரையைக் கேட்டதும் அவள், "நீங்கள் சும்மா சொல்லுகிறீர்கள். எந்தக் காதலனும் தான் காதலிக்கும் பெண்ணிடம் இப்படித்தான் சொல்லுவான்'' என்று சொன்னாலும் சொல்லுவாள். அப்பொழுது நீங்கள் "அப்படியொன்றுமில்லை. உன் விஷயத்தில் நான் அப்படிச் சொல்லுவேனா? நீ தேவலோகத்தில் பிறக்க வேண்டியவள். தவறிப்போய் இங்கே பிறந்து விட்டாய். நான் சொல்லுவது அவ்வளவும் உண்மை'' என்று பொய் சொல்லுங்கள். அவள் ஒரு புன் சிரிப்புடன் உங்கள் பொய் வார்த்தைகளையெல்லாம் உண்மையென்று அப்படியே நம்பி விடுவாள்.

இன்னொன்று சொல்ல மறந்து விட்டேனே. உங்கள் காதலியிடம், "மற்றப் பெண்களைவிட நீ எவ்வளவு அழகாயிருக்கிறாய்!'' என்றோ "அந்தப் பெண் எவ்வளவு அழகாயிருக்கிறாள் பார்த்தாயா?'' என்றோ மறந்தும் சொல்லி விடாதீர்கள். உங்கள் காதலியிடம் மற்ற பெண்களைப் பற்றிய பேச்சையே எடுக்கக் கூடாது. உலகத்திலுள்ள மற்ற எந்தப் பெண்ணையும் அதுவரை நீங்கள் பார்க்காததுபோல் நடிக்க வேண்டும். இல்லாவிட்டால் உங்கள் மீது அவளுக்குச் சந்தேகம் வந்து விடும். (பிறகு அவளைப் படைத்த கடவுளே வந்தாலும் அந்த சந்தேகத்தை நிவர்த்தி செய்ய முடியாது.)

கடைசியாக உங்களுக்கு ஒன்றே ஒன்று சொல்ல விரும்புகிறேன். நீங்கள் எவ்வளவு முயன்று பார்த்தும் உங்கள் வழிக்கு உங்களுடைய காதலி வரவில்லையென்று தோன்றினால் அதற்காக மன வருத்த மடையாதீர்கள். அவளிடம் உங்களுக்குக் கோபம் வந்து விட்டாற் போலப் பாசாங்கு செய்து கொண்டு அவளை நெருங்குவதை சற்று நிறுத்திக் கொள்ளுங்கள். அடுத்த நிமிஷமே அவள் உங்கள் காலடியில் விழுவதை நீங்கள் காணலாம். பெண்களுக்கென்று தனியாக ஈசன் கொடுத்த குணம் இது.

உங்கள் காதல் சித்திக்க வேண்டுமென்று இராப்பகலாக சிரமப்படும் வரப்பிரசாதிகளின் கவசங்கள் தங்கள் வேலையைச் செய்யத் தவறலாம். ஆனால் இந்தப் புத்திமதியைக் கைப் பற்றினால் நீங்கள் கட்டாயம் ஜயமடைவீர்கள் என்று என் தலையை வேண்டுமானாலும் பந்தயம் வைக்கிறேன்.

★

# மலர் மணம்

**முகப்புப் படம் :**

கண்குளிர மனங்குளிர கோலமிடும் ஒரு சுந்தரக் காட்சி முகப்பை அலங்கரிக்கிறது. கலை அழகு ததும்பும் அருமையான காட்சிகளிலே கோலமிடுதலும் ஒன்று. அந்த அற்புதத்தை 'கதிரவன்' கவியிலும் கண்டு களிக்கலாம்.

தமிழ் மக்கள் பெருமைப் படும்படியான ஒரு அரிய விஷயத்தை இந்த இதழ் 'வசந்தம்' தாங்கி வெளி வந்திருக்கிறது. இலக்கிய விமர்சகர்கள், பொன் எழுத்தால் பொறிக்கப் படவேண்டியது, எனப் பாராட்டத்தகும் ஒரு உன்னத கட்டுரையை வெளியிட்டதற்கு நாம் பெரிதும் மகிழ்ச்சி கொள்ளுகிறோம். சர். ஆர். கே. எஸ் அவர்கள் தந்துள்ள 'அமெரிக்காப் பிரயாணம்' தான் அது. 'சொற்களைத் தேனில் குழைத்து' அற்புதமாகச் சித்திரித்திருக்கிறார். அந்த அருமையான விஷயம் தொடர்ந்து வெளி வரும் என்பது எல்லோருக்கும் எல்லையற்ற ஆனந்தத்தை அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. உலகத்தின் பேறிஞர்களில் சிறந்தவரான சர். ஆர். கே. எஸ் அவர்கள் பொருளாதார நோக்குடன் இலக்கிய அழகு ததும்ப எடுத்துச் சொல்லும் இந்தக் கட்டுரைகள் பெரிதும் பயனுள்ளவை. தமிழில் எதையும் எழுதலாம், நன்கு தெளிவாக எடுத்துச் சொல்லலாம் என்பதற்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டாக அமைந்திருப்பதோடு, நம்முடைய உள்ளத்திலே என்னென்ன ரசங்களைப் பொழிகிறதென்பதையும் நீங்களே அனுபவிப்பீர்கள். சர்வதேச நாணயச் செலாவணி மகாநாட்டுக்கு நாமும் அமெரிக்காவுக்கே சென்று விடுகிற அதிசயத்தையும் பாருங்கள்!

கவி அரசர் பாரதியை ஞாபகப் படுத்திக் கொள்கிற இந்தத் தருணத்திலே, கவிஞரின் "நகைச் சுவை" யையும் ஞாபக மூட்டிக் கொள்வோம். "தூரன்" அவர்கள் சுவை ததும்ப அவைகளைச் சொல்லுகிறார்.

சி. ஆர். ராமசாமி அவர்கள் 'பொழுது போக்கி'லே எப்படிப் பொழுதைப் போக்குவது என்ற பிரச்னையைத் தீர்த்திருக்கிறார். அதில் நம்முடைய பொழுது போனதே தெரியவில்லை! ஏதோ நீதி நூலிலிருந்து சிந்தனையைத் தூண்டும் நல்ல வாசகங்களை வாசிப்பது போன்ற இன்பம் அதைப் படிக்கையில் உண்டாகிற தல்லவா? அதோடு நடை அலங்காரமும் உள்ளத்தைக் கவருகிறது.

'வெள்ளமும் வேகமும்' கனவும் கற்பனையும் கொண்ட ஒரு அற்புதச் சித்திரம். அந்தக் கதையிலே குமிழிகளும் சுழல்களும் செய்யும் மாயா ஜாலங்களை வர்ணிப்பது ஆசாத்தியம்! புது எழுத்தாளரான திரு. மாரி செட்டி தம்முடைய கனவுகளைப் புது வெள்ளம் போல் பொங்கச் செய்திருக்கிறார்.

அன்றலர்ந்த இளம் புதுப் பூ விஜயகுமார். எண்ணற்ற வாடா மலர்களை இளம் விஜயகுமார் இலக்கிய உலகுக்குத் தந்து ரசிகர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துவார் என்று எதிர் பார்க்கலாம்.

—ஆசிரியர்

# KUPPURAJ

JEWELLER, COIMBATORE.

The Fashionable Furnishing Fabrics

DRESS TEXTILES

Ladies', gents', Children's Underwear Sport Shirts etc.

## S. Beemiah Chetty.

"WHITE SHOP" COIMBATORE

மிகச்சிறந்த ஆயுர்வேத ஔஷதங்களும் சிகிச்சைகளும்!

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

ஆர்யவைத்தியர்

★

பி. வி. ராமவாரியர்

## ஆர்யவைத்ய பார்மசி

திருச்சி ரோடு கோயமுத்தூர்

★

கேட்லாக் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

THE VASANTHA DYEING WORKS,

118. Oppanakara Street

Coimbatore.

Phone No. 155. Estd., 1921.

Proprietor

C. M. Subramanya Chettiar

CONTRACTOR

To

THE VASANTHA MILLS, LIMITED.

SINGANALLUR.

For all kinds of dyeing border yarn and tie yarn etc., undertakes any variety of colour dyeing at reasonably cheap rates for dyeing all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colour guaranteed.

## K. B. R. JEWELLARY

BIG BAZAAR COIMBATORE.

சகல பண்டங்களுக்கும் போக்குவரத்து சாதனங்கள்

கீழ்க் கண்ட ஊர்களிலிருந்து ஊர்களுக்கு லாரி மூலம் வியாபார, விவசாய பண்டங்களை வீட்டுக்கு வீடு கொண்டு போய்ச் சேர்க்க வசதிகள் இருக்கின்றன.

# ஸ்ரீ ராம விலாஸ் சர்வீஸ் லிமிடெட்

**202/203, மௌண்ட் ரோடு, மதராஸ்**

போன்: மதராஸ் "8536" : : தந்தி: "ROAD HAUL" மதராஸ்

கிளை ஆபீஸ்கள்:

1 செரி ரோடு, சேலம்
2 ஈஸ்வரன் கோவில் தெரு, கோயமுத்தூர்
3 கண்டோன் மெண்ட், திருச்சினுப்பள்ளி
4 கிருஷ்ணராயர் தெப்பக்குளத் தெரு, மதுரை
5 ஸ்ரீ நரசிம்ம ராஜாரோடு, பெங்களூர்

மார்க்கங்கள்

1 மதராஸ் — சித்தூர் — பெங்களூர்
2 மதராஸ் — வேலூர் — சேலம் — கோயமுத்தூர்
3 மதராஸ் — திருச்சி — மதுரை — திருநெல்வேலி
4 கோயமுத்தூர் — கள்ளிக்கோட்டை
5 கோயமுத்தூர் — கரூர் — திருச்சினுப்பள்ளி
6 சேலம் — நாமக்கல் — திருச்சினுப்பள்ளி

உங்களது பணியைச் செய்ய எப்போதும் காத்துள்ளோம்.

# GLUCONATE - D

வைடமின்-D உள்ள கேல்ஸியம் க்ளுகோனேட் மாத்திரைகள். சாக்லேட் பூசப்பட்டு ருசியாயிருக்கும்.

கேல்ஸியம் குறைவு, கர்ப காலம், பாலூட்டல், குழந்தைகள் எலும்புகள் பலப்படுத்த — சிறந்த மருந்து.

இது I. T. L. ப்ராடக்ட்

**Government Industrial & Testing Laboratory**

Malleswaram P. O., BANGALORE.

THE BEST AND THE CHEAPEST

# GINGELLY OIL

**Free from Adulteration!**
**Free from Rancidness!**
**Free from Bitterness!**
**But of Appreciable Smell!**

**Best and Pure Oil.**

**Try Once Try**

**For Cooking and Bathing**

**SALES DEPOT:**

A. P. Ramaswamy Chettiar's

Guaranteed Gingelly Oil Stores,

(REGISTERED)

**New Market, COIMBATORE.**

Manufactured at: **A. P. R. Oil Mills, Fort, Coimbatore.**

Mg. Secretary: **R. L. SUBRAMANIA CHETTY**

## தி சென்டரல் பேங் ஆப் இந்தியா, லிமிடெட்.

**(இந்தியாவிலேயே மிகப் பெரிய இந்தியன் ஜாயின்ட் ஸ்டாக் பேங்)**

**(ஸ்தாபிதம்: டிசம்பர் 1911)**

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | ... ... ரூ. | 3,50,00,000 |
| வாக்களிக்கப் பட்ட மூலதனம் | ... ... ரூ. | 3,36,26,400 |
| செலுத்தப் பட்ட மூலதனம் | ... ... ரூ. | 1,68,13,200 |
| ரிசர்வும் மற்ற நிதிகளும் | ... ... ரூ. | 1,48,32,000 |
| டிபாசிட்டுகள் 30-6-1943ல் இருந்தபடி | ... ரூ. | 72,27,68,300 |

**தலைமை ஆபீசு:**

**மகாத்மா காந்தி ரோடு, போர்ட், பம்பாய்.**

இந்தியா முழுவதிலும் 180க்கு மேற்பட்ட கிளை ஸ்தாபனங்களும், வளங்கும் ஸ்தாபனங்களும் பெற்றது.

**மானேஜிங் டைரக்டர்:-** Mr. H. C. கேப்டன், J. P.

**டைரக்டர்கள்:-**

Sir. H. P. மோடி K. B, E. (தலைவர்)
நூர்முகமத் M. சினுய்
ஹரிதாஸ் மாதவ்தாஸ்
பாபுஜி தாதாபாய் லாம்
ஆர்டிஷ B. துபாஷ்
தரம்ஷே முல்ராஜ் கார்ட்டாவ்
டின்ஷா D. ரோமர்
ஹார்மஜி பிரேம்ஜி கனிஷாரியட்
விதல் தாஸ் கான்ஜி

**லண்டன் ஏஜண்டுகள்:-** மெஸ்ர்ஸ், பார்க்லேஸ்பேங் லிமி., மிட்லண்ட் பேங் லிமி.,

**நியூயார்க் ஏஜண்டுகள்:-** தி காரன்டி டிரஸ்ட் கம்பனி ஆப் நியூயார்க்

எல்லா விதமான பாங்கி அலுவல்களும் கவனிக்கப்படும். விண்ணப்பம் செய்து விவரங்களை ஊர்ஜிதம் செய்து கொள்ளலாம்.

**தென் இந்தியாவின் கிளை ஸ்தாபனங்கள்:—**

அடோனி, ஆலப்பிளை, ஈரோடு, பங்களூர், பெஜவாடா, கள்ளிக் கோட்டை, கொச்சி, கோயமுத்தூர், கடப்பை, தோணி, எர்ணுகுளம், குண்டக்கல், கோவில்பட்டி, கர்நூல், மதராஸ் மதுரை, நந்தியால், பொள்ளாச்சி, சேலம், திருப்பூர், திருச்சூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, உடுமலைப்பேட்டை, விருதுநகர்.



SECOND FRONT !

TRIRD FRONT !!

FOURTH FRONT !!!

FIFTH FRONT !!!!

# THEY ALL DEMAND AMENITIES

SO

# MORE MONEY IS **NEEDED.**

GIVE TO

# H. E. THE GOVERNOR'S WAR FUND.

# A. N. Marudachalam Chettiar

AND

# A. Krishnaswamy Chettiar

**AGENTS**

Messrs. Burmah Shell Oil Storage & Distributing Co., of India Ltd.

**COIMBATORE**

**B O C**

BOC

Grades

DEPENDABLE

FIRM

FOR

**Shell**

Grades

## THE PRODUCTS OF BURMAH SHELL

MOTOR SPIRITS : MOTOR OILS

GREASES : INDUSTRIAL

LUBRICANTS OF EVERY

DESCRIPTION

★

## Fuel Oils : Candles : Shelltox

**Etc., Etc., Etc.**


199799

Printed at the Vasanta Mills Press, and Published by K. P. Sundaram at 4/12 A, Trichy Road, Coimbatore. Editor: R. Thirugnanasambandam